நவயுக முரசு

பிப்ரவரி 1954 சென்னை விலை 6 அணு



நேர்த்தியான உடை

NATIONAL PALAYAKAT Co.
HORSE
№ 1 KAILI PULICAT
№ 1 MADRAS
REGISTERED TRADE MARK
MADE IN INDIA
MADRAS & PENANG

உறுதியான சாயம்

மலிவான விலை

குதிரை மார்க்கு

கைலிகள்

கிடைக்குமிடம்.

நேஷனல் பளையகாட் கம்பெனி

விஜயபுரம் ... திருவாரூர்.

கிளை : 23, சோலியா ஸ்ட்ரீட்,
பிணங்கு (S. S. மலாயா)

முஸ்லிம் முரசு

பொருளடக்கம்

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 6	சென்னை, பிப்ரவரி-1954 ஹிஜ்ரீ 1373, ஜமாதுல் ஆகிர்	இதழ் 8

5-வது குடியரசு தினம்	தலையங்கம்	...	3
முரசொலி	,,	...	7
முஸ்லிம் உலகம்		...	[illegible]
தணியாத தாகம் !		...	[illegible]
தேசத் துரோகி பெரியா	"ஜமுதா"	...	[illegible]
காதற் சின்னம் (தொடர்கதை)	சம்பந்தம்	...	[illegible]
திரிப்போலியின் இளவரசி	மவ்லவி முஹம்மது யாகூப்கான்	...	[illegible]
நபிகள் நாயகம்—வாழ்வும் வாக்கும்		...	47
இங்கிலாந்திலே இஸ்லாம்	இத்ரீஸ் அலீ ஷா	...	50
நடிப்புத் தொழில்!	எம். முஹம்மது யூஸுப், பாவலர்	...	[illegible]
படித்துப் பாருங்கள் !		...	[illegible]
கேள்வி—பதில்		...	[illegible]

முரசில் வருகின்ற கதைகளும் அவற்றில் உள்ள பெயர்களும் கற்பனையே.

இங்கு கத்தரிக்கவும்

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால், உங்களுக்குத் தவறாமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு,
132, பிராட்வே,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6, இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்..

விலாசம்..

முஸ்லிம் முரசு

5-ஆம் ஆண்டு பைண்டு வால்யூம்

[1952 ஜூலை முதல் 1953 ஜூன் வரையில்
ஈத், மீலாத் மலர்கள் 3 உட்பட 12 இதழ்கள்]

இதில் உள்ள முக்கிய விஷயங்கள்:

வரலாறுகள்:

நபிகள் நாயகம்—டாக்டர் ஜி. கெய்ரல்லா.

மௌலானா ஜலாலுத்தீன் ரூமி—
மியான் பஷீர் அஹ்மத், எம்.ஏ.,

ஜெனரல் முஹம்மது நஜீப்—" எம். ஏ, "

உமர் கய்யாம்—தவ்லத் எம். பண்டாய்.

அரேபியா மன்னர் இப்னுஸஊது

வங்கப் புரட்சிக் கவிஞர் நஸ்ருல் இஸ்லாம்.

குவைத் மன்னன் ஷேக் அப்துல்லா.

அறிஞர் கரீம் கனீ—எம். எம். அபூபக்கர்.

ஸர் முஹம்மது இக்பால்—" எம். ஏ. "

கட்டுரைகள்:

மக்கா உடன்படிக்கை—ஸர்•முஹம்மது ஜபருல்லாகான்
சொற்பொழிவு.

காயிதெ ஆஸம் ஜின்னா-ஹெக்டர் பொலித்தோவின் 'டயரி'

சொர்க்கவாசல்—ஒரு கற்பனைச் சித்திரம்

நான் கண்ட பாக்கிஸ்தான்—இஸ்மா நய்மன்—(ஒரு துருக்கி
மாது எழுதியது)

துருக்கியின் புதுமைப் பெண்கள்—ஈலீன் டிராவிஸ்

அழகிய காஷ்மீரிப் பெண்கள்

நான் அறிந்த லியாக்கத் அலீகான்—ஐ. எச். குறைஷி

இஸ்லாத்திலே பர்தா—மௌலவி முஹம்மது அலீ

முஸ்லிம் மாதர் திலகங்கள்

லண்டனில் காயிதெ ஆஸம் ஜின்னா

மன்னர் பாரூக், பரீதா, நாரிமன்—ருசிகாரமான வரலாறு.

மற்றும் பல சிறந்த கட்டுரைகளும் கதைகளும், சுமார் 300
கேள்வி—பதில்களும். **விலை ரூ. 5—8—0.**

வி. பி. தபால் செலவு தனி.

முஸ்லிம் முரசு

132, பிராட்வே, சென்னை-1.

5-வது குடியரசு தினம்

நமது பாரத நாடு சுதந்தரம் அடைந்து ஏழு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. இது ஒரு "சுதந்தரக் குடி அரசு" எனப் பிரகடனம் செய்யப்பட்டு 4 ஆண்டுகள் முடிந்து ஐந்தாவது வருட விழாவும் நாடெங்கும் அண்மையில் நடைபெற்றது.

ஐந்தாவது குடி அரசு தினம் கொண்டாடப்பெற்ற அதே சமயத்தில் அகில இந்தியக் காங்கிரஸின் 59-வது ஆண்டுக் கூட்டமும் கல்கத்தாவுக்கு அருகிலே கல்யாணி என்னும் நகரிலே மிக்க ஆடம்பரமாக நடந்து முடிந்திருக்கிறது.

இச் சந்தர்ப்பத்திலே இந்நாட்டு மக்களின் எண்ணத் திரையில் எத்தனையோ விதமான காட்சிகள் எழுந்திருக்கும். ஏழு ஆண்டுகளுக்கு முன் அவர்களின் இதயங்களிலே எழுந்த இன்பக் கனவுகள் எப்படியிருந்தன? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டைவிட்டு வெளியேறியவுடன், பண்டித நேரு பாரதத்தின் பிரதமராக வந்தபோது இந்நாட்டு ஏழைப் பொதுமக்களின் இதயங்களிலே எத்தகைய இன்ப உணர்ச்சிகள் எழுந்து நின்றன? அரசியல் பொருளாதாரத் துறைகளிலே புரட்சிகரமான பல மாறுதல்கள் உடனடியாகத் தோன்றி, உணவும், உடையும் உறைவிடமும் குறைவில்லாமல் ஒவ்வொருவருக்கும் கிடைக்குமென்றல்லவா கனவு கண்டார்கள்? அந்த இன்பக் கனவுகள் இன்று என்ன ஆயின? தங்களின் வாழ்வு மலரவும், கல்வி வளரவும், பொருளாதாரம் உயரவும் நேருஜி ஒருவரையே நம்பியிருந்த இந்த நாட்டு ஏழைப் பொது மக்கள் இன்று என்ன நிலையில் இருக்கின்றனர்?

சுதந்தரம் பெற்று ஏழு ஆண்டுகள் சென்ற பிறகும் சுபிட்ச இந்தியாவைக் காண முடியவில்லை. மக்களின் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் முன்னைவிட மும்மடங்கு பெருகிவிட்டன. 'எதிர்கால இந்தியாவின் ஏற்றமெல்லாம் இவர்களின் கையிலேயே இருக்கிறது' என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் இந்நாட்டு இளைஞர்களின் இதயங்களிலே புத்துணர்ச்சியும் புதிய நம்பிக்கையும் உதயமாவதற்குப் பதிலாக, ஏமாற்றமும் ஏக்கமுமே குடிகொண்டிருக்கின்

றன். ஏட்டுக் கல்வியில்லாத எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் தங்களின் உயிர் வாழ்க்கைக்குப் போதுமான வருவாயின்றி வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் இந்நாட்டிலே, படித்த இளைஞர்களும் வேலையின்றித் திண்டாட வேண்டிய துரதிருஷ்டம் இன்று நேர்ந்துள்ளது.

படித்த இளைஞர்களின் வேலையின்மையை ஒழிக்கவும், நாட்டின் வறுமையைப் போக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் நாளது வரையில் நல்ல பலனைத் தரவில்லை. முதலாவது ஐந்து வருடத் திட்டமும் அமல் நடத்தப்பட்டு, இரண்டாவது 5 ஆண்டுத் திட்டமும் ஆரம்பமாகி விட்டது. ஆனால் இதன் பலன் என்னவோ இதுகாறும் பூஜ்யமாகவே இருந்து வருகிறது. முதல் ஐந்து வருடத் திட்டத்தின் பயனாக நாட்டிலே உற்பத்திப் பெருகியிருப்பது உண்மைதான். ஆனால் மக்களின் வாங்கும் சக்தி ஓங்கவில்லை; வறுமைமையும் நீங்கவில்லை; வாழ்க்கைத் தரமும் உயரவில்லை. கல்யாணம் பண்ணியும் சன்னியாசி, கடன் வாங்கியும் பட்டினி என்ற பரிதாப நிலையிலே இன்று பாரத நாடு இருக்கின்றது!

இந்த நிலை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் நீடித்திருக்க முடியும்? நல்லதோ கெட்டதோ, நேருஜியைத்தான் இந்நாட்டுப் பொதுமக்கள் நம்பிக் ; கொண்டிருக்கின்றனர். அவருடைய ஆட்சிக் காலத்திலேயே அவர்களுக்குக் கதி மோட்சம் கிடைத்தால்தான் உண்டு என்ற நம்பிக்கையில் அவர்கள் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பண்டித நேருவுக்குப் பிறகு இந்த நாட்டு மக்கள் தங்களின் தலைவர் என்று கொண்டாடத் தகுந்த தனி மனிதர்கள் யாரும் கிடையாது. எனவே, நேருவின் காலத்திலேயே நாடு விமோசனம் அடைந்தால்தான் உண்டு என்று நம்புகின்றனர்.

இந்த நாட்டிலே ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாக சொல்லப்படுகிறதேயொழிய, அந்த ஆட்சிக்கு உரிய அஸ்திவாரம் கூட இன்னும் அமைக்கப்படவில்லை! காங்கிரஸ் கட்சிக்கு நிகராகவோ அல்லது அடுத்த படியாகவோ மக்களின் ஆதரவைப்பெற்ற மாற்றுக் கட்சியொன்று இங்கே இல்லை. ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாக சொல்லப்படும் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உள்ளதே போல் இங்கே எதிர்க்கட்சியொன்று இல்லாதபடியால், நாட்டின் தலைவிதியைத் தனி மனிதர்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. ''நேருவுக்குப் பிறகு யார்?'' என்ற கேள்வி இந்த நாட்டிலேதான் எழுகிறது! இதற்கு விடை காண்பதும் கடினமாகவே இருக்கிறது. இதுபோன்ற கேள்விகள் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் எழுவதில்லை.

இந்த நாடு சுதந்தரம் பெற்று ஏழு ஆண்டுகள் கடந்த பின்பும், இதன் ஏழைமை ஒழியாததற்கு இது ஒரு காரணம் என்றால் மிகையாகாது. ஐந்து வருட திட்டம் ஆகாச வாணமாகி

விட்டதற்கும் இதுதான் காரணம். இங்கே எதிர்க்கட்சியொன்று இல்லாததால், காங்கிரஸ் கட்சியினர் கடமையில் தவறியிருக்கின்றனர். ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றுவதில் அநேகத் தவறுகள் செய்திருக்கின்றனர். 'ஏன்' என்று கேட்பதற்கு ஏற்ற வலிமையுள்ள எதிர்க்கட்சியொன்று இருந்திருந்தால் காங்கிரஸ் கட்சியினர் எத்தனையோ இமாலயத் தவறுகளையெல்லாம் இழைத்திருக்கமாட்டார்கள்.

'நாட்டிலே ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை வேண்டும்' என்று ஓயாமல் பேசுகின்றார் பண்டித நேரு. இவர் விரும்புகின்ற ஒற்றுமை எத்தகையது? அது இந்த நாட்டை ஜனநாயகப் பாதையில் அழைத்துச் செல்லக்கூடிய ஒற்றுமையா? இல்லை! கன்னியா குமரி முதல் கிழக்குப் பஞ்சாப் வரையிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெறுவதுதான் இந்நாட்டின் ஒற்றுமைக்கு அடையாளம் என்று அவர் நினைக்கின்றார்! இந்த ஒற்றுமை அநேகமாக இன்று இருக்கத்தான் செய்கிறது. திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்திலே கூட காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து, கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டு விடுமோ என்ற கவலைகொண்டு, சென்னைப் பிரதமர் ராஜாஜி ஓலமிடுகின்றார்.

"இப்போது நடைபெறவிருக்கும் திருவாங்கூர் கொச்சி சட்டசபைத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியினர் தோல்வியடைந்தால், உலக அரங்கிலே பண்டித நேருவின் புகழ் மங்கிவிடும்" என்று நமது முதலமைச்சர் கூறுகிறார்! எனவே, குமரி முதல் கிழக்குப் பஞ்சாப் வரையிலே காங்கிரஸ் ஆட்சியே நடைபெறுவதற்கு ஒவ்வொரு தலைவரும் தங்களால் இயன்ற கைங்கரியத்தைச் செய்துவந்து, நேருவுக்குப் பிறகு இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் தகுதி வாய்ந்த தலைவர் யார் என்ற கேள்வியைக் கவலையுடன் எழுப்பும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இந் நாடு சுதந்தரம் பெற்றவுடன், "காங்கிரஸ் கட்சியைக் கலைத்து விடுங்கள்" என்று காந்திஜி கூறியதைக் காங்கிரஸ் தலைவர்கள் காற்றுவாக்கில் விட்டதன் பயனை இன்று நாடு நன்றாய் அனுபவிக்கின்றது. அப்போதே காங்கிரஸ் கலைக்கப்பட்டிருந்தால், நாட்டின் தலைமைப் பதவிக்குத் தனி மனிதர்களை நம்பி வாழும் துரதிருஷ்டம் இப்போது நேர்ந்திராது. ஜனநாயக ஆட்சி நடத்தும் தகுதி வாய்ந்த அரசியல் கட்சிகள் அப்போதே உருவாகியிருக்கும். அதன் பயனாக, நாட்டிலே நல்லாட்சி நடைபெறவும் ஐந்து வருட திட்டங்கள் வெற்றி பெறவும் வழி பிறந்திருக்கும்.

இந்தியாவும் பாக்கிஸ்தானும் சுதந்தரம் பெற்றவுடன் இங்கே காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட்டிருக்கவேண்டும்; அங்கே முஸ்லிம் லீகிற்கு மூடுவிழா நடந்திருக்க வேண்டும். இரண்டும் நடைபெறத் தவறியதால் இரு நாடுகளிலும் உண்மையான ஜனநாயக ஆட்சி ஓங்கவில்லை; சரியான அரசியல் கட்சிகள் உருவாகவில்லை; நாட்டின்

வறுமை ஒழியவில்லை; வாழ்க்கைத் தரமும் உயரவில்லை.

இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசும்போது, காங்கிரஸிலிருந்து விலகிப் போனவர்களையெல்லாம் "மீண்டும் வந்து சேருங்கள்" என்று அழைக்கின்ருர். அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ இத்தகைய அழைப்பு விடுக்கும் அரசியல் வாதிகளைக் காண முடியாது!

காங்கிரஸிலிருந்து பிரிந்து போன பெரிய தலைவர்களையெல்லாம் திரும்பி வாருங்கள் என்று அழைத்தால் என்ன அர்த்தம்? 'எதிர்க் கட்சியைக் கலைத்து விட்டு எங்களுடன் சேர்ந்து கொண்டு இன்னொரு ஐந்து வருட திட்டத்தையும் உருப்படாமல் அடிப்பதில் உங்கள் கைங்கரியத்தையும் செய்யுங்கள்' என்று கூறுவதாகத்தானே கொள்ளவேண்டும்!

நாட்டின் ஒற்றுமையும் வலுவும் நாடு முழுதும் ஒரே கட்சி இயங்குவதால் ஏற்பட்டு விடாது. போட்டி மனப்பான்மை இருந்தால்தான் எதுவும் பொலிவுற்று விளங்கும். காங்கிரஸ் கட்சியினரிடையே சுறு சுறுப்பும் தியாக உணர்வும் மீண்டும் உண்டாக வேண்டுமாயின், மதிக்கத் தகுந்த மாற்றுக் கட்சிகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

நாடெங்கும் அடுத்த தேர்தல் நடைபெறுவதற்குமுன் இத்தகைய எதிர்க் கட்சியொன்று உருவானலதான், ஐந்து வருட திட்டங்களை அமல் நடத்துவதில் காங்கிரஸ் கட்சியினராவது கவனம் செலுத்துவார்கள்.

ஐந்து வருட திட்டங்கள் என்பதெல்லாம் சோவியத் ருஷ்யா, கம்யூனிஸ்ட் சீன போன்ற சர்வாதிகார நாடுகளில்தான் குறித்த காலத்தில் வெற்றிகரமாக நிறைவேற முடியும். இந்த நாட்டிலோ உண்மையான சர்வாதிகாரமும் இல்லை: ஒழுங்கான ஜனநாயக ஆட்சியும் இல்லை. மக்களுக்கும் சர்க்காருக்குமிடையே இடைவெளி மிக அதிகமாயிருக்கிறது. இன்றைய சர்க்கார் அதிகாரிகளிடம் பழைய ஏகாதிபத்திய எண்ணமே நிலவியுள்ளது. சர்க்காருக்காக மக்கள் என்ற பழைய மனப்பான்மை மாறி, மக்களுக்காகவே சர்க்கார் இருக்கிறது என்ற புதிய எண்ணம் இன்றைய ஆட்சியாளரிடையே ஏற்படக் காணேம். மக்களும் சர்க்காரும் ஒன்று என்ற மனப்பான்மை உதயமானல்தான், ஐந்து வருட திட்டம் போன்ற சுபிட்ச திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்படும்.

ஏழு ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டைவிட்டு வெள்ளையர் வெளியேறியபோது, மக்களாட்சி மலர்ந்து விட்டதாகத் தான் மனக்கோட்டைகள் கட்டினேம். ஆனல் அந்தக் கோட்டைகள் கல்லும் சுண்ணும்பும் வைத்துக் கட்டப்படவில்லை என்பது இப்போதுதான் தெரிகிறது! ஏழு ஆண்டுகளுக்குப் பின்னும் நமது இன்பக் கனவுகள் நினைவாகவில்லை என்பதைத்தான் சென்றமாதம் 26-ந் தேதியன்று நாடெங்கும் ஆடம்பரமாகக் கொண்டாடப்பெற்ற ஐந்தாவது குடி அரசு தினத்தன்று நாம் அறிந்துகொண்டோம்.

ஞானசாலி

மலை நகருகிறது!

“மலைகள் நகருகின்றன” என்று மதவாதிகள் சொல்லத் துணிந்தால், மதவிரோதிகளும் மார்க்ஸீயவாதிகளும் அவர்களுக்கு, முட்டாள் பட்டம் கட்டிவிடுவார்கள். ஆனால் மலை நகருகிறது என்று நவீனகால விஞ்ஞானியொருவன் நவின்று விடுவானாயின், அது “இந்த இருபதாம் நூற்றாண்டின் புதிய கண்டுபிடிப்பு” என்று பெருமையுடன் பேசுவார்கள்! கண்டு பிடித்தவனுக்கு சிலைகூட சமைத்துவைத்துக் குறைவின்றிப் பாராட்டுரைகளை வழங்குவார்கள். விஞ்ஞானிகள் இன்று சொல்வதெல்லாம் வேதகால உண்மைகளாக இருந்தாலும், அவை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தவை என்றால் அவற்றை இந்தக்கால மக்கள் எளிதில் நம்பிவிடுவார்கள்! விஞ்ஞானிகள் இன்று புதிதாகச் சொல்வதையே அன்று ஆண்டவன் தூதர்கள் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னால் பகுத்தறிவு வாதிகள் பரிகாசமே செய்வார்கள்! ஏனெனில், அவர்களின் பகுத்தறிவுக்கு அது பொருத்தமாக இல்லை! “நமது அறிவுக்கு அது எட்டவில்லை போலும்” என்று அடக்கமாக இருப்பதுதான் அறிவுடைமையாகும். அதை விடுத்து, “இது நம் அறிவுக்குப் பொருத்தமாக இல்லை. ஆகையால் இதை உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியாது” என அடித்துப் பேசும் பகுத்தறிவு வாதிகளுக்கு ஒரு அறைகூவலை போல் அண்மையில் ஒரு செய்தி, இத்தாலியிலுள்ள மோதீனா என்னும் ஊரிலிருந்து கிடைத்திருக்கிறது. ‘ஹிந்து’ ‘சுதேசமித்திரன்’ (28/29—1—54) முதலிய ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளில் இச்செய்தி பிரசுரமாகியுள்ளது. சுதேச மித்திரனில் உள்ளபடி அச்செய்தியை இதன்கீழ் தருகின்றோம்.

மலை நகர்கிறது!

மோதீனா, இத்தாலி, ஜன. 27—

வட இத்தாலிய நகரமான இங்கு மலையொன்று நகர்கிறது! மணிக்கு ஒரு கெஜம் வேகத்தில் நகரும் இந்த பர்வதம், மூன்று வீடுகளை துவம்சம் செய்துவிட்டது. இன்னொன்று மயிரிழையில் தப்பியது. கதிகலங்கிக் கிடக்கும் உள்ளூர் வாசிகளுக்கு நகரைக் காலி செய்ய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. என்ஜினீயர்களுக்கு இது பெரும் புதிராகிவிட்டது. அதை எப்படி நிறுத்துவதென்று விளங்காமல் விழிக்கின்றனர் அவர்கள்”

'மலை நகருகிறது' என்ற செய்தியைப் படித்தவுடன் நமது கவனம் திருக் குர்ஆனின் மீது திரும்பியது. அல்லாவின் திருமறையிலே மலைகளைப் பற்றிப் பல இடங்களில் பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். (குர்ஆன் : 27 : 88, 81 : 3)

மலைகள் நகருவதாக குர்ஆனில் காணப்படும் இறைவனின் அருள் வாக்குகளுக்கு விரிவுரையாளர்கள் வேறுவிதமான பொருள் கூறுகின்றனர் என்பது உண்மைதான். அதாவது, இஸ்லாமிய சத்தியப் பிரசாரத்துக்கு எதிரிகளால் இழைக்கப்பட்ட மலைபோன்ற இடையூறுகள் எல்லாம் விலகிப்போய்விடும் என்று இறைவன் கூறியதாக குர்ஆனின் விரிவுரையாளர்கள் சிலர் எழுதுகின்றனர். இந்த உண்மையையும் உலக சரித்திரம் உணர்த்திக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் ஆண்டவன் என்பதும் வேதமென்பதும் வெறுங் கற்பனையென்றும், கட்டுக்கதையென்றும் கூறுகின்ற பகுத்தறிவுவாதிகள் இதை எப்படி ஒப்புக்கொள்வார்கள்? விரிவுரைகளை அவர்கள் ஏற்கமாட்டார்கள். எதற்கும் வலிந்து பொருள் கொள்வது 'ஏய்க்கிற வித்தை' என்றுதான் எள்ளி நகையாடுவார்கள். வார்த்தைக்கு வார்த்தை எது உண்மையென்று விளங்குகிறதோ அதைத்தான் 'பகுத்தறிவுவாதிகள்' ஒப்புக்கொள்ளுவார்கள். எனவே, விரிவுரையாளர்கள் என்ன கூறினாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள் பகுத்தறிவாளர்கள். இவர்களின் பகுத்தறிவு குறையுடையது என்பதை இறைவன் நன்கு அறிவான். ஆகவேதான் அவர்களும் குர்ஆனின் கூற்றை ஒப்புக்கொள்ளுமாறு ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு மலையை மணிக்கு ஒரு கெஜம் வேகத்தில் நகர்ந்து செல்லச்செய்து, மூன்று வீடுகளையும் நாசமாக்கியிருக்கின்றான் போலும்! இன்னொரு வீடு இறைவனருளால் மயிரிழையில் தப்பியிருக்கிறது! இதனால் கதிகலங்கிக் கிடக்கும் உள்ளூர்வாசிகளுக்கு நகரைக் காலி செய்து வெளியேற உத்திரவிடப்பட்டு விட்டதாம்! என்ஜினியர்களுக்கு இது ஒரு புரியாத புதிராகிவிட்டதாம்! நகரும் மலையை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று விளங்காமல் விழிக்கின்றனராம், மோதீனா நகர என்ஜினியர்கள்!

அல்லாஹ்வின் இந்த அறைகூவலுக்கு இங்குள்ள பகுத்தறிவு வாதிகள் என்ன பதில் கூறுகின்றனர்? நம் நாட்டிலுள்ள மாபெரும் மலைகளாவது நகராமல் இருந்து, இவர்கள் காப்பாற்றப் படவேண்டுமென்று ஆண்டவனிடமே மன்றாடுவோமாக!

மலை நகருவது பற்றிய மற்றொரு நீண்டகாலப் பிரச்னையும் நமது நினைவுக்கு வருகின்றது. இஸ்லாத்தையும் திருநபி (ஸல்) அவர்களையும் குறைத்துப் பேசும் சிறுமதியுடைய கிறிஸ்து மதப் பிரசாரகர்கள் சிலர், நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தும் கருத்துடன் ஒரு பழமொழியையே

ஆங்கிலத்தில் கற்பித்து, அகில உலகிலும் அதனைப் பரவச் செய்திருக்கின்றனர். "முஹம்மதிடம் மலை போகா விட்டால் மலையினிடம் முஹம் மது செல்வார்!" என்று நபிகள் நாதரை ஏளனமாகக் குறிப்பிடும் ஆங்கிலப் பழமொழிதான் அது! நபிகள் நாதரின் மூலமாக வெளி யான இறைவனின் திருமறையில் மலைகள் நகருவதாக வரும் திரு வாக்கியங்களைக் கேலி செய்யும் கருத்துடனேதான், கிறிஸ்துவர் கள் இந்தப் பழமொழியை கற் பனை செய்திருக்கிறார்கள் என்று நினைக்கின்றோம். இது உண்மை யாக இருந்தால் இந்தப் பழ மொழியும் இவ்விருபதாம் நூற் றாண்டிலே பொருளற்றதாகி விடுகிறது என்பதில் சந்தேக மில்லை. ஆங்கிலத்தில் வழங்கும் அந்தப் பழமொழி, வேண்டு மென்றே இஸ்லாத்தின் திரு நபி யவர்களைக் கேலிசெய்யும் கருத் துடன் கற்பனை செய்யப்பட் டது என்பதில் நமக்குச் சந் தேகமில்லை. ஆனால் அப்பழ மொழி எந்தச் சூழ்நிலையில் எழுந்திருக்கும் என்பதை எண் ணிப்பார்க்கும் போது, மலைகள் நகருவதாகக் குர்ஆனில் வரும் அல்லாஹ்வின் கூற்று உண்மை யல்ல என்று மறுப்பதற்கும், அதனைக் கேலி செய்வதற்குமே புனையப்பட்டிருக்குமென்று நினைக்கின்றோம், இஸ்லாத் தின் திருநபியவர்களை இழிவு படுத்தும் இந்தப் பழமொழியை மிகப் பெரிய அரசியல்வாதிகள் கூட அடிக்கடி உபயோகிக்கின் றனர். அண்மையில் அமெ ரிக்காவிலே நடைபெற்ற ஒரு 'டெலிவிஷன்' பேச்சின்போது ஒரு பிரபல அரசியல்வாதி இப்பழமொழியை உபயோகித் தார். இதனை டெலிவிஷனில் கவ னித்துக் கொண்டிருந்த பாக்கிஸ் தான் அன்னிய நாட்டு அமைச்சர் ஜ ப ரு ல் லா கா ன் அவர்கள், உடனே அதற்கு ஒரு மறுப் புரை தந்து அந்த மாபெரும் அரசியல் வாதியை மன்னிப்புக் கோரச் செய்தார் என்ற செய் தியை அண்மையில்தான் நாம் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் படிக்க நேர்ந்தது.

மலைகளையும் நகரச் செய்யக் கூடிய மகத்தான சக்தி படைத்த வன்தான் ஆண்டவன். இதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் இயற்றும் இத்தகைய அற்புதச் செயல்களைக்கொண்டு, மாற்றுக் கருத்துள்ளோரின் மனத்தை மாற்ற முடியுமா என்பது சந் தேகந்தான். இதைப் பற்றி இறைவனே தனது திருமறையில் (குர்ஆன், 13 : 31) கூறியுள்ள தைக் கவனியுங்கள்:

"மலைகளை நகரச் செய்யவோ, அல்லது பூமியைத் துண்டு துண் டாகச் செய்யவோ, அல்லது இறந்தவர் பேசச் செய்யவோ சக்தி படைத்த குர்ஆன் ஒன்று இருந்தால் கூட இவர்கள் நம்பிக் கைக் கொள்ள மாட்டார்கள். எனினும் எல்லாம் ஆண்டவன் செய்யும் காரியங்களேயாகும்."

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் இறைவன் கூறியுள்ள இவ் வார்த்தைகள் இக்கால மக்க ளுக்கே சொல்லுவதுபோல் இல்லையாவென்பதை நேயர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

நாயுடு செய்த நாச வேலை!

தென்னிந்தியாவின் தொழில் நிபுணர் என்று பெயர் பெற்ற கோவை ஜி. டி. நாயுடு அவர்கள், ஜனவரி 30-ந் தேதியன்று சென்னையில் புதுமையான 'உடைப்புத் திருவிழா' ஒன்று நடத்தினார். சென்னை பார்க் பேர் பொருட் காட்சியின்போது ஜி.டி. நாயுடுவின் மாணவர்களால் செய்யப்பெற்ற ரேடியோ, கடிகாரங்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களெல்லாம் அன்றைத்தினம் பார்க் பேர் பொருட்காட்சி மைதானத்தில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களின் மத்தியிலே உடைத்து நொறுக்கப்பட்டன! இந்தப் பொருள்களின் உரிமையாளரான நாயுடுவே மனமிசைந்து இந்த நாச வேலையைச் செய்திருக்கிறார்! அதுவும், தமிழ் நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்கள் அத்தனைப் பேர்களையும் அழைத்து, இலட்சக்கணக்கான மக்களின் மத்தியிலே தனது நிலையை விளக்கிக் கூறிவிட்டு, அவர்களின் வேண்டுகோளையும் புறக்கணித்து இந்த உடைப்புத் திருவிழாவை உற்சாகத்துடன் நடத்தினார். இதற்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் காமராஜ், டாக்டர் சுப்பராயன், வரதராஜுலுநாயுடு, திராவிடக் கழகங்களின் தலைவர்கள் ஈ. வெ. ரா., அண்ணாதுரை ஆகிய பலதிறக் கட்சியினரும் விஜயம் செய்திருந்தனர்.

தாம் செய்த நாச வேலைக்கு என்ன காரணம் என்பதையும் நாயுடு அவர்கள் விளக்கிக் கூறினார். அணுகுண்டுகள் தவிர, அந்நிய நாடுகளில் செய்யப்படும் அத்தனை பொருள்களையும் தாமே உற்பத்தி செய்ய முடியும் என்று அவர் அறைகூவினார். ஆனால் அதற்கு இந்திய சர்க்கார் ஆதரவளிப்பதில்லை என்பது நாயுடுவின் புகார். தமது கருத்துப்படி இந்த நாட்டிலே தொழில்கள் நடைபெறுவதாயின், பொருளுற்பத்தியைப் பெருக்கவும், வேலையின்மையை ஒழிக்கவும் இயலும் என்று அவர் கூறுகிறார்.

தொழில் வளத்தில் சிறந்த அமெரிக்கர்கள் உட்பட அன்னிய நாட்டினரெல்லாம் வியந்து பாராட்டத்தகுந்த இந்த விஞ்ஞான விற்பன்னரை இந்திய சர்க்கார் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று அடிக்கடி பல அறிஞர்கள் குறைகூறி வந்திருப்பதை நாம் அறிவோம். எனினும் அவருடைய அறிவும் திறமையும் நாளதுவரையில் நாட்டை ஆளுவோரின் கவனத்துக்கு வரவில்லை என்றுதான் நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவர் கூறுவதைப் பார்க்கும்போது, அவருடைய அறிவும் ஆற்றலும் மத்திய சர்க்காருக்குத் தெரிந்திருந்தும் அவரைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அன்று அவர் கூறினார்:

"நாட்டிலே தொழில் திட்டம் சரியாக அமைக்கப்படாவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டந்

தான் உண்டாகும். இன்று நம் நாட்டில் தொழில்களின் வளர்ச்சிக்குத் தகுந்த திட்டம் காணப் படவில்லை. தொழில் நிலை தலை கீழாகச் சென்று கொண்டிருக்கிறது. எதை முன்னால் செய்வது, எதைப் பின்னால் செய்வது என்பதை ஆட்சியாளர் மறந்த நிலையைக் காண்கிறோம். முறைப்படி செய்தால் நாட்டில் செல்வம் கொழிக்கும். தவறி நடப்பதால் இன்று நம் செல்வம் வெளி நாடுகளுக்குப் போய்ச் சேருகிறது. சிறு சிறு தொழில்களைப் பல இடங்களினும் அமைத்தால் அனைவருக்கும் வேலை கிடைக்கச் செயயலாம். நாம் என்னென்ன விதமான தொழில்களைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் செய்து காட்டியிருக்கிறேன். ஆனால் பயன் என்ன? சர்க்காரின் போக்கு காரணமாக என்னிடமுள்ள பொருள்கள் யாருக்கும் உதவாத நிலையில் இருக்கின்றன. என்னிடம் பயிற்சி பெறும் மாணவர்கள், இங்கு நடந்த பார்க் பேர் பொருட்காட்சியின் போது செய்த பொருள்களே உங்கள் முன்னிலையில் வைக்கப் பட்டுள்ளன; அவைகளை உடைத்தெறிய சம்மட்டிகளுடன் தயாராக நிற்பவர்களையும் நீங்கள் காணலாம். என்னிடமுள்ள மெஷின்களை உடைத்தெறிவதற்குப் பதிலாக, அவற்றைக் கொண்டு நான் உற்பத்தி செய்த —சர்க்காரின் போக்கு காரணமாக யாருக்கும் பயன்படாதிருக்கும் பொருள்களை—உடைத்தெறிய நான் தயார். ஆனால் தீர்ப்புக் கூறுவது உங்கள் பொறுப்பு" என்று நாயுடு அவர்கள் பொது மக்களிடம் அன்று பகிரங்கமாகக் கூறினார்.

டாக்டர் சுப்பராயன், வரதராஜுலு நாயுடு போன்ற காங்கிரஸ் தலைவர்களெல்லாம் அப்போது மேடை மீது இருந்தார்கள். நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் நாயுடுவின் குற்றச்சாட்டுக்குச் சரியான பதில் கூறவில்லை. இதிலிருந்து, குற்றம் யாருடையது என்பதை மக்கள் தெளிவாகத் தெரிந்திருப்பார்கள். எனவேதான், மத்திய சர்க்காரின் மனப்பான்மையைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக, 'நாயுடு செய்த நல்ல பொருள்களையெல்லாம் உடைத்தெறியுங்கள்' என்று அங்கே கூடியிருந்த மக்களெல்லாம் ஒரே ஆரவாரம் செய்தனர் போலும்! இப்படி உடைப்பதற்குப் பெரியார் ஈ.வெ.ரா. முதலியோர் விரும்பவில்லையெனினும், நாயுடுவின் பேச்சைக் கேட்டு மத்திய சர்க்கார் மீது ஆத்திரங்கொண்ட அநேக மக்கள் உடைக்கவேண்டுமென்றே கூறினார்கள். இந்த உடைப்பு விழாவினால் உருவான பலன் ஏதும் விளையாவிட்டாலும், இந்நாட்டு மக்களின் உள்ளத்தில் வடநாடு—தென்னாடு என்ற வேற்றுமையுணர்வு வளர்ந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

தென்னாடு வடநாடு பிரிவினைப் பேச்சை இதற்குமுன் ஆதரித்தவரல்ல ஜி. டி. நாயுடு. அப்படிப்பட்டவர் அன்று என்ன கூறினார்?

"வட நாடு—தென்னாடு பிரிவினைக்கு நான் உடன்படாதவனாயிருப்பினும், நாட்டில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால், நாட்டுப் பிரிவினை நல்லதென்றே எண்ணத் தோன்றுகிறது. தென்னாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமாயின் நாம் தனித்திருப்பதே நல்லது என்று நினைக்கிறேன். மத்திய அதிகார வர்க்கத்தினர், சில அயல் நாட்டுத் தொழிலினர் கையில் சிக்கியிருப்பதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது" என்று அவர் கூறினார்.

தென்னிந்தியத் தொழில் நிபுணரின் இத்தகைய சந்தேகத்துக்கும், மனமாற்றத்துக்கும் மத்திய சர்க்கார் ஏன் இடங்கொடுக்க வேண்டுமென்று நமக்கு விளங்கவில்லை.

ஜி. டி. நாயுடுவைக் குறைகூறி, டாக்டர் பி. சுப்பராயன் சில வார்த்தைகள் கூறினார். அதாவது நாயுடுகாரு ஒரே காரியத்தில் கவனத்தைச் செலுத்தாமல் பல வழியிலும் தமது சக்தியை விரயம் செய்தார் என்பது சுப்பராயனவர்களின் குற்றச்சாட்டு. இதற்கும் நாயுடு தகுந்த பதில் கூறினார். மெஷீனரியில் மட்டுமின்றி, விவசாயம், விஞ்ஞானம், மருந்து முதலிய பல துறைகளிலும் தமது ஆராய்ச்சியைச் செலவிட்டு, அவ்வளவையும் நாட்டின் பொதுச் சொத்தாக சேமித்து வைக்கவே தாம் விரும்பிச் செயலாற்றியதாக அவர் கூறினார். எனவே, நாயுடுகாருவின் நல்லெண்ணத்தில் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் மத்திய சர்க்கார் அவருக்கு ஆதரவளிக்கத் தவறியதற்குரிய காரணத்தைத் தெரிந்து கொள்ள அவர்கள் விரும்புகின்றனர்.

1942-ம் ஆண்டிலே இந்த நாட்டிலுள்ள அரசியல் வாதிகள் சிலர் தந்திக் கம்பிகளை அறுத்தும், தபாலாபீஸ்களைக் கொளுத்தியும் நாச வேலைகள் செய்ததின் பயனாகத்தான் நாடு சுதந்தரம் அடைந்தது என்று நம்மிடையே சிலர் நம்புகின்றனர்! அதேவிதமான நம்பிக்கையுடன் தான் ஜி. டி. நாயுடுவும் இந்த நாச வேலையில் இறங்கினார் போலும்! நாயுடு செய்த காரியம் நாட்டின் தொழில் வளத்துக்கும், வேலையின்மை ஒழிவதற்கும் வழி தோன்றச் செய்யுமாயின் அவர் செய்த காரியம் நல்ல பலனைத் தந்தது என்றுதான் வருங்காலத்தில் எல்லாரும் கூறுவார்கள்.

தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சிக்குப் புது டில்லி போதிய ஆதரவு அளிப்பதில்லை என்று இந்த நாட்டிலே அடிக்கடி பல பொறுப்பு வாய்ந்த தலைவர்களால் புகார் கூறப்பட்டு வந்திருக்கிறது. அதற்கிணங்கவே அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தின் போதும், மத்திய சர்க்காரை மிக வன்மையாகக் கண்டித்துப்

பலர் பேசினார்கள். வட இந்திய பண மூட்டைகள் நடத்தும் தொழில்களுக்கு மத்திய சர்க்கார் அளிக்கும் ஆதரவும் சலிகையும் இங்குள்ளவர்களுக்கு மறுக்கப்படுகின்றன என்று அவர்கள் கூறினார்கள். இது உண்மை தானுவென்பதை நாட்டுப் பொது மக்கள் அறிய விரும்புவது இயல்புதான். இது உண்மையல்லவென்றால் அதை உடனே மறுத்துக் கூற மத்திய சர்க்கார் முன் வரவேண்டும். மௌனமாக இருந்தால் குற்றச் சாட்டுகளை ஒப்புக்கொள்ளுவதாகத் தான் ஆகும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும், பிரிவினை மனப்பான்மை கூடாது என்று ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் பண்டித நேரு அவர்கள், தென்னிந்தியாவின் நீண்ட காலப் புகாருக்கு இப்பொழுதேனும் செவி சாய்ப்பார் என்று நம்புகிறோம்.

சிறுகதைப் போட்டி

புது வருடத் துவக்கத்தில் புதிய சிறுகதை எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டும் நற் செய்தியொன்றை இந்த இதழில் வெளியிட்டிருக்கின்றோம். இந்த நாட்டின் சிறுகதை இலக்கியத்துக்கு நம்மாலான சிறிய தொண்டை செய்யக் கருதி நாம் மேற்கொண்டுள்ள முயற்சி வெற்றி பெறுமாறு இறைவன் அருள்புரிவானாக!

அநேக கட்டுரைகள் எழுதி ஒரு நீதியைப் போதிப்பதைவிட, ஒரு சிறுகதையின் மூலம் அதனைப் போதிப்பது மிக எளிதாக இருக்கும் என்ற நம்பிக்கையின்மீதே ஒன்றிரண்டு சிறுகதைகளை ஒவ்வொரு இதழிலும் நாம் வெளியிட்டு வருகின்றோம்.

தென்னிந்தியாவில் நடைபெறும் சில பிரபல பத்திரிகைகள் அநேகமாக சிறுகதைகளைக் கொண்டே அவற்றின் பக்கங்களை நிரப்பி வருகின்றன. ஆனால் அக்கதைகள் அனைத்துமே சிறந்த கருத்துள்ளவைகளாக அமைவதில்லை. ஒரு சில நல்ல கருத்துள்ள கதைகளைத் தவிர மற்றவையெல்லாம் வெறும் பொழுது போக்கிற்காகவே இருக்கும். இத்தகைய சிறுகதைகளை நாம் விரும்புவதில்லை; நமது வாசக நேயர்களும் வரவேற்கமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். எனவேதான், கூடியவரையில் நல்ல கருத்தும் நீதியும் அமைந்த சிறுகதைகளையே நாம் வெளியிட்டு வருகின்றோம்.

இந்த முயற்சியில், பழைய சிறுகதை எழுத்தாளர்கள் பலரை நாம் நமது சக்திக்கு இயன்றவரை உற்சாகப்படுத்தி வந்திருக்கின்றோம் என்பதைக் கூறிக் கொள்வதில் ஓரளவு பெருமையே அடைகின்றோம். ஒரு சில புதிய சிறுகதை எழுத்தாளர்களையும் அவ்வப்போது நேயர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டி வந்திருக்கின்றோம். எனி

னும் புதிய இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவதில் நாம் நமது கடமையைப் பூரணமாகச் செய்யவில்லை என்ற உணர்வு இது காறும் நமது இதயத்தில் இருந்து கொண்டிருந்தது. அதன் விளைவே இச்சிறுகதைப் போட்டி என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நம் இளைஞர்களிடையே அறிவிற்கும் திறமைக்கும் குறைவில்லை. ஆனால் அந்த அறிவும் ஆற்றலும் பயன்படுத்தப்படும் வாய்ப்புக் கிடைக்கப்பெறுமையால், குடத்திலிட்ட விளக்குப் போலவும், இலைமறை காயெனவும் அவர்கள் இருந்து வருகின்றனர். இதற்கு உதாரணமாக அண்மையில் நிகழ்ந்துள்ள ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். அமெரிக்காவில் நடைபெறும் உலகச் சிறுகதைப் போட்டிப் பரிசுக்காகத் தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு சிறுகதைகளுள், திருநெல்வேலி ஜில்லா, கல்லிடைக் குறிச்சியைச் சேர்ந்த ஜனுப் டி. எம். அப்துல் காதர் அவர்கள் எழுதிய "சட்டம் கொடுத்த தண்டனை" என்னும் சிறுகதையும் சேர்ந்திருக்கிறது. இவர் சிறுகதை வானிலே பிரகாசிக்கும் ஒரு புதிய நட்சத்திரம் என்றே நம்புகிறோம்.

இத்தகைய புதிய திறமைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் வாய்ப்பை அளித்திருக்கிறது உலகச் சிறுகதைப் போட்டி! எனவேதான் நாமும் நமது சக்திக்கு இயன்றவாறு ஒரு சிறு தொகையைப் பரிசாக அளித்து, புதிய இளம் எழுத்தாளர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றோம்.

இப்போட்டியில் சாதி, சமய வேற்றுமைகளின்றி யாவரும் கலந்து கொள்ளலாம். ஆனால், அவர்கள் எழுதும் கதைகள் தென்னிந்திய முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுக்கும், இஸ்லாமிய பண்பாடுகளுக்கும் பொருந்தியவைகளாக இருத்தல் வேண்டும் என்பதை மட்டும் மறந்து விடக்கூடாது.

இப் போட்டியில் முதற்பரிசு பெறும் கதையை நாளது வருஷம் ஜூன் மாதம் வெளிவரும் ஈத் மலரில் இடம் பெறச் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கடுத்தபடியாக தேர்ந்தெடுக்கப்படும் கதைகள் முறையே அடுத்தடுத்த இதழ்களில் தொடர்ந்து வெளிவரும்.

இப் போட்டித் திட்டத்தின் பயனாக புதிய எழுத்தாளர்களைக் கண்டுபிடிப்பதில் ஓரளவு வெற்றி கிட்டுமாயின் ஒவ்வொரு ஆண்டும் இந்தச் சிறுகதைப் போட்டியை நடத்திவைக்க உறுதி கொண்டுள்ளோம் என்பதை, எழுதுவதில் ஆர்வமுள்ள எண்ணிறந்த இளைஞர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்த இதழில்

கேள்வி–பதில்களில் தலைக்கு இரண்டு ரூபாய் அன்பளிப்புப் பெற்றவர்கள்:

M. S. அமீர், யாழ்ப்பாணம், (இலங்கை)

ஓ. யூ. சிந்தா மதார், கடையநல்லூர்.

T.A. நஸ்ருல்லா பாஷா, ஆற்காடு

உரிமைப்போர் வலுக்கின்றது!

பிரஞ்சு ஏகாதிபத்திய அரசாங்கத்தினல் கடந்த ஆகஸ்ட் மாதம் நாடு கடத்தப்பட்டு, கார்ஸிகா தீவிலே வைக்கப் பெற்றிருந்த மொரோக்கோவின் சுல்தான் சீதி முஹம்மது இப்னு யூசுப், இப்போது மீண்டும் கார்ஸிகாவிலிருந்து வேருெரு கண்காணாத இடத்துக்கு விசேஷ விமானத்தில் ஏற்றிச் செல்லப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் கார்ஸிகா தீவிலேயே வைக்கப்பட்டிருந்தால், அவருக்கு ஆதரவாக இருக்கும் தேசிய வாதிகள் அவரை விடுவிக்க முயற்சி செய்யக்கூடும் என்று எதிர்பார்த்தே பிரஞ்சு ஏகாதிபத்தியம் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறதாம்.

நாட்டிலுள்ள தீவிர தேசிய வாதிகளை சுல்தான் சீதி முஹம்மது ஆதரித்து வந்தார் என்பதே அவர்மீதுள்ள குற்றம் (?) அதற்காக இவரை நாடு கடத்திவிட்டு இவருக்குப் பதிலாக இவருடைய சிறிய தந்தையான மவ்லாய் முஹம்மது இப்னு அரபாவை ஆட்சி பீடத்தில் அமர்த்தியது. அதிகார வர்க்கம். ஆனல் பிரஞ்சு அரசாங்கத்துக்கு விரோதமான திடீர் மாறுதல் ஒன்று மொரோக்கோவிலே இன்று ஏற்பட்டுள்ளது! ஸ்பானிஷ் மொரோக்கோ என வழங்கும் மொரோக்கோ நாட்டின் மற்ருெரு பகுதியில் வாழும் மக்கள் புதிய சுல்தான் இப்னு அரபாவின் ஆட்சி 'சட்ட விரோதமானது' என்று சொல்லிக் கொண்டு, தங்கள் பிரதேசம் தனியே பிரிக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்யத் தொடங்கியிருக்கின்றனர். இவர்களின் பிரிவினைக் கிளர்ச்சிக்கு ஸ்பெயின் தலைவர் ஜெனரல் பிரங்கோவும் ஆதரவளிக்கின்ருர். சுல்தான் சீதி முஹம்மதை பிரஞ்சு அரசாங்கம் வெளியேற்றியபோது, தன்னைக் கலந்து கொண்டு எதுவும் செய்யவில்லையென்று அவர் பிரஞ்சு அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டுகிருர். ஸ்பெயின் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட மொரோக்கோவின் பகுதிக்கு சுதந்தரம் அளிப்பதாகவும் ஸ்பெயின் அரசாங்

கம் இப்பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறதாம். அரபு லீக் இந்த உறுதி மொழியை பிராங்கோவிடமிருந்து பெற்றுக் கொண்டு, ஸ்பானிஷ் மொரோக்கோவின் பிரிவினைக் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்க உறுதிகொண்டிருக்கிறது.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்திலே பிரஞ்சு அரசாங்கம் மொரோக்கோவில் எடுத்துக் கொண்ட அக்கிரம நடவடிக்கையைக் கண்டித்து ஐக்கிய நாடு மன்றத்திலே கொண்டுவரப்பட்ட தீர்மானம் குப்பைத் தொட்டிக்குப் போனது உண்மைதான். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள உலக மாறுதல் காரணமாக மொரோக்கோவின் உரிமைக் குரல் உலக மன்றத்திலே உறுதியுடன் ஒலிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இந்தோ-சீனாவில் இன்று நடந்துவரும் கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் போராட்டத்திலே பிரஞ்சுக்காரர்களுக்குப் பல தோல்விகள் ஏற்பட்டுத் துயரமடைந்திருக்கிறார்கள்; உள் நாட்டிலும் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டு உறுதி குலைந்து நிற்கின்றனர். இப்போது ஜெனரல் பிராங்கோவும் மொரோக்கோ மக்களின் சுதந்தரக் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்கத் தொடங்கிவிட்டார். அரபு நாடுகளும் அவர்களுக்கு ஆதரவாக அணிவகுத்து நிற்கின்றன. எனவே, மொரோக்கோவின் விடுதலை முரசம் மிக விரைவிலேயே ஒலிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

அட்டைப்படம்

ஒரே குரலில் இரண்டு பிரதமர்கள்!

இந்த இதழின் அட்டைப் படத்திலே இந்தியப் பிரதமர் நேருஜியும், எகிப்து நாட்டுப் பிரதமர் முஹம்மது நஜீபும் எதையோ உற்று நோக்கிய வண்ணம் இருக்கின்றனர். அமெரிக்கா—பாக்கிஸ்தான் இராணுவ உடன்படிக்கையின் எதிர்கால விளைவுகள் இந்தியாவையும் எகிப்தையும் பாதிக்குமோ என்ற கவலை, இவர்கள் இருவருக்குமே இருந்து வருகிறது. அமெரிக்கா-பாக்கிஸ்தான் இராணுவ உதவி ஒப்பந்தம் பற்றித் தமது கருத்தையும் கவலையையும் நேருஜி முன்னமேயே தெரிவித்துவிட்டார். ஆனால் நஜீப் தமது கவலையை இன்றுதான் (1—2—54) வெளியிட்டிருக்கிறார். "பாக்கிஸ்தானுக்கும்இந்தியாவுக்குமிடையே ஏற்படவிருக்கும் இராணுவ உடன்படிக்கை, அரபு நாடுகளுக்கு விரோதமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே கொள்ளப்படும்" என்று நஜீபும் தமது கண்டனத்தையும் கவலையையும் கடைசியாகத் தெரிவித்துவிட்டார்.

சூயெஸ் கால்வாய் பிரச்னையின் மீது எகிப்துக்கும் பிரிட்டனுக்குமிடையே நீண்ட காலமாக நடைபெற்று வரும் போராட்டத்திலே, பிரிட்டன் பணிந்துபோகும் என்று எதிர்பார்க்கப்படும் இத் தருணத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவாக இருந்துவரும் அமெரிக்க வல்லரசுக்குப் பாக்கிஸ்தான் பக்கத் துணையாக இருப்பதை எகிப்துப் பிரதமர் எப்படி வரவேற்க முடியும்?

தணியாத தாகம்!

"ஜே. எம்."

பின்னிரவின் தண்ணிய அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. மாடி வராந்தாவில் ஈஸி சேரை போட்டுக் கொண்டு ரஷீத் அமர்ந்தான். கனவிலே வரும் ஒரு படகைப் போல தேய் பிறைச் சந்திரன் ஊர்ந்து கொண்டிருந்தது. இலேசாக வீசிய காற்றில் தோட்டத்திலுள்ள மரக் கிளைகள் சலசலத்தன. தூங்குவதற்கும் விழித்திருப்பதற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் ரஷீத் இருந்தான். அவன் கண்கள் மட்டும் இலேசாக மூடியிருந்தன. கழிந்துபோன காலத்தில் நிகழ்ந்த சம்பவத் தொகுதிகளும், வருங்காலக் கனவுகளும் இணைந்து, ஒரு புது மாதிரியான எண்ணத் தொடரை சிருஷ்டித்துக் கொண்டிருந்தன.

இருளைக் கிழித்துக்கொண்டு ஒரு குரல் எழுந்தது. அமைதி கலைந்தது; அவனது சிந்தனை இழை அறுந்தது. அவன் கவனித்தான். அடுத்த வீட்டு சாரா திருமறையை ஓதத் தொடங்கினாள்.

"இக்ரஃ பிஸ்மி ரப்பிகல்லதி ஹலக."

"(நபியே! யாவையும்) சிருஷ்டித்த உமது இறைவனின் திருநாமத்தால் (எனது கட்டளைகளடங்கிய திருக் குர் ஆனை) நீர் ஓதுவீராக!" என்ற உணர்ச்சி யூட்டும் திருமொழி அவன் செவியைத் தொட்டது. அவள் ஓதியதன் கருத்து அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அவன் மனம் மீண்டும் சிந்தனை வெள்ளத்தோடு ஓடியது. திருநபி அவர்களுக்கு இறைவன் அளித்த முதல் அறிவுரை இது வல்லவா? எழுதப் படிக்கத் தெரியாத ஒருவருக்கு முதன் முதலில் இந்த வாக்கியத்தைச் சொல்லித்தானே பிறகு மதிப்பிட முடியாத மாணிக்கத்தை சிறுகச் சிறுக அளித்தான்! இந்த ஒரு வாக்கியத்தில் தான் எவ்வளவு நம்பிக்கை வேகம் பரிணமிக்கிறது! அந்தப் புனித வாக்கியம் அவன் காதின் முன்னர் அப்படியே ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அடுத்த வீட்டு சாரா மேலும் மேலும் ஓதிக் கொண்டிருந்தாள். இளங் குழந்தையின் உள்ளத்தைப்போல அமைதியாக விளங்கிய அந்த சூழ்நிலையில் அவள் ஓதிக்கொண்டிருந்தது புதியதொரு உணர்ச்சி வேகத்தையும், இன்பத்தையும் ஊட்டிக்கொண்டிருந்தது.

அந்தச் சூழ்நிலையில் ரஷீத் அப்படியே ஐக்கியமாகி விட்டான். அவனை அறியாமலேயே அவன் வாய் அந்தப் புனித வாக்கியங்களை உச்சரித்துக் கொண்

டிருந்தது. அவன் மனம் முழுவதும் அதிலேயே இலயித்திருந்தது. திடீரென அவனது சிந்தனை வெளியிலே ஒரு எண்ணம் பளிச்சிட்டது. எப்படியோ ஒரு எண்ணம் புகுந்து கொண்டது. தனது நிலை அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. திருமறையின் புனித வாக்கியத்தைக் கேட்டதும் மெய் மறந்து, கண்ணீர் பெருக்கும் நிலை எளிதிலா அவனிடம் வந்து விட்டது? எத்தனை சிரமம்! எத்தனை சோதனை!!

ரஷீத் நாற்காலியிலிருந்து எழுந்தான். வராந்தாவில் மேலும் கீழுமாக உலவிக் கொண்டிருந்தான். இறந்து போன நிகழ்ச்சிகள் உயிர் பெற்று அவன் முன் தோன்றின. அவன் நிதானமாக அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தான்.

* * *

“ஏய்! ரஷீது! குர்ஆனை எடுத்து வைத்து ஓது!”

ரஷீதின் தந்தை ரஹிமான்சா ராவுத்தர் தினந்தோறும் பையனுக்கு இந்த அறிவுரையைச் சொல்லிக்கொண்டுதானிருப்பார். ரஷீத் பள்ளிக்கூடம் போவான்; பட்சி வேட்டையாடுவான்; பாட்டுகள் பாடுவான். ஆனால் மத்ரஸாவுக்கு மட்டும் போகமாட்டான்! சில சமயங்களில் ரஹிமான்சா ராவுத்தரே பையனை அழைத்துக் கொண்டுபோய் மத்ரஸவில் விட்டு வருவார்! கிழிந்துபோன பாயில் உட்கார்ந்து கொண்டு, கையிலே சிறிய பிரம்பை வைத்துக்கொண்டு ஹஜ்ரத், “ஏய்! எல்லோரும் ஓதுங்கள்!” என்று அதட்டிக் கொண்டிருப்பார். பாவம்! அவர் தான் என்னசெய்வார்? சம்பளம் இருபது ரூபாய்தான். பெரிய குடும்பம். ஊரிலே ஏதாவது கலியாணங்கள், விசேஷங்கள் அடிக்கடி நடந்தால்தான் குடும்பத்தை நிர்வகிக்க முடியும். குடும்பக் கவலை அவரை வாட்டிக் கொண்டிருந்தது. இந்த இலட்சணத்தில் அவர் ஐம்பது மாணவர்களை எப்படிக் கட்டி மேய்ப்பது?

எப்படியோ தட்டுத் தடுமாறி ரஷீத் ‘அல்ஹம்து’ தொடங்கினான். திடீரென்று அவன் மனத்திலே ஒரு ஆசை எழுந்தது. ஒரு நாள் ஹஜ்ரத்திடம் கேட்டான்: “ஹஜ்ரத்! நீங்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதே தமிழ் அர்த்தத்தையும் சொல்லிக் கொடுங்கள். இரண்டையும் மனப்பாடம் செய்து விடுகிறேன்” வரப் போகும் இளஞ் சமுதாயத்தின் எழுச்சிக் குரல் அவன் பேச்சிலே தொனித்தது. ஹஜ்ரத் சிரித்தார். “தமிழிலே அர்த்தம் வேணுமா? அது சரியில்லேப்பா! கன்னு பின்னு என்று எதையாவது சொல்லாதே! பெரிய மௌலவிகள் அரபித் தமிழில் எழுதியிருப்பார்கள். அதைப் பிறகு படித்துப் பாரு...’

அவர் மெதுவாக மழுப்பினார். அல்ஹம்து ஸூராவையே ஒழுங்காகப்படிக்கத்தெரியாத ரஷீது, அரபித் தமிழைப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமாம்!

அர்த்தம் புரியாத வார்த்தைகளை உருப்போட்டுக் கொண்டிருப்பது ரஷீதுக்குப் பிடிக்கவில்லை. நாளாக நாளாக அவன் மனத்தில் அதிருப்தி வளர்ந்து கொண்டிருந்தது. மத்ரஸாவுக்குப் போவதை அவன் மெதுவாக நிறுத்திவிட்டான். அதன் பலாபலன்களைப்பற்றி அவன் சிந்திக்கவில்லை; அது சிந்திக்கும் வயதுமல்ல.

காலம் கழிந்தது; அவன் கருத்து வளர்ந்தது; ஆங்கிலமும் தமிழும் அவன் படித்தான்; அனுபவித்து ரசித்தான்; ஆனால் அரபி மொழியை மறந்தான். ஓதியதில் ஒரு சில ஸூராக்களும், துஆக்களும் மட்டும் அவன் நினைவிலிருந்தன; மற்றவையெல்லாம் மறந்தே போயின. மதசம்பந்தமான பிற நூல்களை எல்லாம் படிக்க வேண்டும்; குறிப்பாக திருமறையையாவது நன்றாக ஓதி உணரவேண்டும் என்ற எண்ணமே அவனிடம் இல்லாது போயிற்று.

பருவத்தின் தலைவாசலில் அவன் புகுந்தான். வாழ்க்கை வெளியில் அவனுடன் சேர்ந்து பயணம்செய்ய ஒருத்தியும் வந்தாள். திருமணம் முடிந்தது. நண்பர்கள் அவனுக்குப் பல பரிசுகள் அளித்தார்கள். அவன் நண்பன் சித்தீக் குர்ஆன் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றை பரிசளித்தான். ஷேக்ஸ்பியரின் நாடகங்களும், கீட்ஸின் கவிதைகளும், பைரனின் பாடல்களும் அவனுக்குப் பரிசாக வந்திருந்தன.

ஓய்வு நேரங்களிலே ரஷீத் பைரனையும், கீட்ஸையும் படித்தானே யொழிய குர்ஆனைப் புரட்டிப் பார்க்கவேயில்லை! அதை எடுத்துப் படிக்கவேண்டுமென்ற எண்ணமும் அவன் மனத்தில் எழவில்லை. பரிசாக வந்த குர்ஆன் பத்திரமாக புத்தக அலமாரியில் இருந்தது.

நாட்கள் கழிந்தன. அன்று வெள்ளிக்கிழமை. ரஷீத் ஜும்ஆ தொழுகைக்குப் பள்ளிவாசலுக்குப் போயிருந்தான். தொழுகை முடிந்ததும் மௌலவி சாஹிப் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். "தப்லீக் இயக்கம் என்று ஒன்று ஆரம்பமாகியிருக்கிறது. இப்போது பெரும்பாலான முஸ்லிம்கள் பெயரளவில்தான் தங்களை முஸ்லிம்கள் என்றுசொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 'ஒருகாலம் வரும். அப்போது இஸ்லாத்தின் பெயரைச் சூட்டிக்கொண்டிருப்பவர்களைப்போல் யாரும் இஸ்லாத்திலிருந்து தூரமாக இருக்கமாட்டார்கள். அப்போது இஸ்லாம் பெயரளவில்தான் இருக்கும்' என்று எம்பெருமான் அவர்களே கூறியிருக்கிறார்கள். அத்தகைய காலம்

நெருங்கிவிட்டதோ என்று சந்தேகப்படும் அளவுக்கு முஸ்லிம்களின் ஒழுக்கம் குன்றிவிட்டது. இந்த நிலையை நாம் வளர விடக்கூடாது. முஸ்லிம்களிடத்தில் நிலவும் அறியாமையையும், கல்வியின்மையையும் போக்க வேண்டும். இதையே ஆண்டவன் பின்வருமாறு அழகாகக் கூறுகிறான்: "உங்களில் ஒரு கூட்டத்தார் எழுந்து, மானிடரை நன்மையின் பக்கல் அழைத்து, நல்லதைச் செய்யும்படியும், தீமையை விட்டு விலகும்படியும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கட்டும். இத்தகையோர் தான் வெற்றிபெற்றோர். (ஆல இம்ரான்: 104). இத்தகையதொரு காரியத்தைச் செய்வதற்காகத்தான் தப்லீக் இயக்கம் தோன்றியிருக்கிறது. அதன் உறுப்பினர் சிலர் வெகு சீக்கிரம் நமது ஊருக்கு வருவார்கள்..." ஹஜ்ரத் பிரசங்கத்தை முடித்தார்.

ரஷீதின் மனத்திலே ஒரு எண்ணம் எழுந்தது; இயக்கம் மேற்கொண்டிருப்பது மகத்தான வேலை. அதிலே நல்ல முறையில் வெற்றி பெற முடியுமா என்ற ஐயம்தான் அது. சிலநாட்கள் கழிந்தன. பத்து பேர் கொண்ட தப்லீக் கோஷ்டி ஒன்று அந்த ஊருக்கு வந்தது. எல்லோரும் இளைஞர்கள்; விஷய ஞானமும் உணர்ச்சி வேகமும் நிறைந்தவர்கள். அவர்கள் பள்ளிவாசலில் வந்து தங்கினார்கள்.

சாப்பாட்டுக்கும் செலவுக்கும் அவர்கள் யாருடைய தயவையும் எதிர்பார்த்து நிற்கவில்லை. தங்கள் செலவிலேயே சாப்பிட்டார்கள். 'முன்மாதிரி' யான மனிதர்களைப்போல அவர்கள் காணப்பட்டார்கள். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அவர்கள் பேசினார்கள். மார்க்க விஷயங்களையும், உலக விஷயங்களையும், பழமையையும் புதுமையையும் ஒன்று கலந்து அழகாகப் பேசினார்கள். தொழுகையின் அவசியத்தையும், ஜக்காத்தின் சிலாக்கியத்தையும் அவர்கள் மனதில் படும்படி அழகாக, ஆணித்தரமாகப் பேசினார்கள். கைமேல் பலன் தெரிந்தது. இதுவரையில் பெருநாளைக்குக்கூட பள்ளி வாசலை எட்டிப்பார்க்காத பேர்வழிகளெல்லாம் பக்தியோடு தொழ ஆரம்பித்தார்கள்! ஊரிலே தொழாத ஆளே இல்லை என்ற நிலை வந்துவிட்டது பத்தே நாட்களில்.

தப்லீக் கோஷ்டியினரின் பேச்சும் நடத்தையும் ரஷீதை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. திருமறையை உணர்ச்சியோடு ஓதவேண்டியதின் அவசியத்தை அன்று பிரசங்கி நன்றாக வருணித்துப் பேசினார். "திருமறை தான் நமது விலைமதிக்கமுடியாத பொக்கிஷம்; வழிகாட்டும் கலங்கரை விளக்கம்; நமது ஊன்றுகோல்; தூண்டுகோல்; சட்டப்புத்தகம்; அரசியல் நூல். எல்லாம் அதுவே" என்று அவர் பேசியபோது ரஷீதுக்கு மனதிலே சோகமும் வருத்தமும் கப்பிக்கொண்டன. இளமைப் பருவத்திலேயே மத்ரஸாவில் அதைக் கற்றுக்கொள்ளாமல் போய்விட்டோமே என்ற வருத்தம் அவனை ஆட்டிவைத்தது. இப்போதெல்லாம் ஐந்து

வேலைத் தொழுகையிலும் ரஷீத் முதல் வரிசையில் நின்றுகொண்டிருந்தான். தனது மனநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் அவனுக்கே வேடிக்கையாக இருந்தது.

தப்லீக் இயக்கம் அந்த ஊருக்கு வந்ததின் பயனாக, ஊரிலே ஒரு புது மாற்றம் காணப்பட்டது. இயக்கம் வெற்றிபெறுமா என்ற ரஷீதின் எண்ணமும் மறைந்தது. இந்த வெற்றி ஆச்சரிய மூட்டக்கூடிய வகையில் இருந்தது. சில நாட்கள் கழிந்தபிறகு இயக்கத்தினர் வேறு ஊருக்குப் போகத் திட்டமிட்டார்கள். 'இந்த ஊரிலிருந்து எங்களுடன் வர யாராவது விரும்புகிறீர்களா? என்று கேட்டார்கள். பலர் முன்வந்தார்கள். ரஷீத் அவர்களுக்கெல்லாம் தலைமை வகித்தான்.

வீரர் கோஷ்டி கிளம்பியது; ஊர் ஊராகச் சென்றது; தனது சேவையைச் செய்தது. ரஷீதின் மனத்தில்மட்டும் ஒரு குறை எப்பொழுதும் இடம் பெற்றுக்கொண்டேயிருந்தது. திருமறையை நன்முக ஓத முடியவில்லையே என்ற வருத்தம்தான் அது. அந்த ஆசை, தணியாத தாகம்போல இருந்தது. ஒரு சில தடவைகள் ஓத முயற்சித்தான். ஆனால் முடியவில்லை. இந்த வருத்தத்தின் நிழல் அவன் முகத்தில் தெரிந்தது. அதையும் கவனித்துவிட்டார் அவன் கோஷ்டியின் தலைவர். மெதுவாக ரஷீதைக் கூப்பிட்டு விசாரித்தார். தயங்கித் தயங்கி அவன் விஷயத்தைச் சொன்னான். வெட்கமும், நாணமும் அவன் குரலிலே கலந்திருந்தன.

"நல்ல பிள்ளையப்பா நீ! இதிலே வெட்கப்பட என்ன இருக்கிறது? இந்தமாதிரி குறைகளைப் போக்கத்தானே தப்லீக் இயக்கம் தோன்றியிருக்கிறது... பயப்படாதே. ஒரேமாதத்தில் நீ அழகாக குர்ஆன் ஓதலாம்... நான் உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று அவர் உற்சாக மூட்டக்கூடிய வகையில் பேசினர்.

காலையிலும் மாலையிலும்,முன்னிரவிலும் பின்னிரவிலும் அவர் ரஷீதுக்கு அரபி கற்றுக்கொடுத்தார். கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வ மிகுதியின் காரணமாக ரஷீத் வெகு சீக்கிரமாக ஓதிக்கொண்டு வந்தான். தப்லீக் கோஷ்டி ஊர்ஊராகப் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுதெல்லாம் ரஷீத் உணர்ச்சியோடு பிரசங்கம் செய்ய ஆரம்பித்தான். தான் கற்றுக் கொண்டதையெல்லாம் அழகாகப் பேசினன். குர்ஆன் என்பது என்ன? "அது முதலாளி வர்க்கத்துக்குச் சாவுமணி; பாட்டாளிக்கு உற்ற துணைவன்" என்று இக்பால் பாடியதை அவனும் பாடிக் காட்டினன். "சந்தேகத்துக்கோ இருபொருள் கொள்ளுவதற்கோ இடமற்றது திருகுர்ஆன்" என்று, பேராசிரியர் கிப்பன் கூறியதை உணர்ச்சி வேகத்தோடு எடுத்துக் காட்டினன். அவன் பேச்சிலே நம்பிக்கைத்திடம் பரிணமித்தது. ஊக்கமும் உற்சாகமும் நிழலிட்டன.

கோஷ்டி பல இடங்களுக்கும் சென்றது; கருதிய பலன் எங்

கும் கிடைத்தது. மெது மெது வாக ரஷீத் திருமறையைக் கற்று வந்தான். ஹதீதுகளை யும், மற்ற மார்க்க விஷயங் களையும் நல்லமுறையில் அறிந்து கொண்டு வந்தான்.

இப்பொழுது அவன் மனப் போக்கிலே ஒரு மாறுதல் ஏற் பட்டுக் கொண்டிருந்தது. பிறர் யாராவது குர்ஆன் உணர்ச்சி யோடு ஓதிக்கொண்டிருப்பதைக் கேட்டால் அவனை யறியாது அவன் கண்களிலே நீர் தளும் பும்; அப்படியே அழுது விடு வான்! மனதிலே புதியதொரு விவரிக்க முடியாத நிலை எழுந்து வியாபிக்கும். ஒரு நாள் இரவு இஷா (இரவு) தொழுகைக்குப் பிறகுஅவன் எதோ புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். எங்கேயோ மௌலூது ஓதிக் கொண்டிருந்தார்கள். ஒலி பெருக்கியின் வழியாக, ஓதும் ஒலி தவழ்ந்து வந்தது.

"யா நபீ ஸலாம் அலைக்கும்

யா ரஸூல் ஸலாம் அலைக் கும்..."

என்ற இரு அடிகளும் கம்பீர மாக காற்றிலே கலந்து வந்து அவன் செவிகளைத் தொட்டுச் சென்றன. எம் பெருமான்(ஸல்) அவர்களது புகழ் மொழிகளைக் கேட்டதும் அவன் மனத்திலே எதோ ஒரு நூதன உணர்ச்சி எழுந்து நடம்புரிந்தது. வீழ்ச்சி யுற்ற மனிதனுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து முன்னே றச் செய்வது எம்பெருமான் அவர்களது நாமம்தானே! அது தான் கண்ணொளி; மின்னொளி; கதிர் மதியின் கலப் பொளி. அவர்களைப் பற்றித்தான் திரு மறை எவ்வளவு அழகாகக் குறிப்பிடுகிறது!

'இன்னல்லாஹ—வ—மலாயி கதஹு

யுஸல்லூன—அலன் நபிய்யி

(ஸூரே அஹ்ஸாப் 56)

"அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது சல வாத்து (வாழ்த்து)க் கூறுகிறார் கள்". ஆம்! இறைவனும் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் மீது சல வாத்துக் கூறுகிறான்! அன்று இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே இல்லை. மௌலூது ஷரீபின் சில வாக்கியங்கள் அவன் காதிலே ரீங்காரம்செய்து கொண்டிருந்தன. தானும் கூடிய சீக்கிரம் அழகான முறை யில் எம்பிரான் அவர்களின் புகழ் பாடவேண்டும் என்று அவன் மனத்திற்குள் சங்கற்பம் செய்து கொண்டான்.

ரஷீத் ஊரைவிட்டுக்கிளம்பி நான்கு மாதங்களாகி விட்டன. அவன் சென்ற கோஷ்டியின் வேலை முடிந்தது, இனி வேறு கோஷ்டிதான் கிளம்ப வேண் டும். அந்த கோஷ்டிக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்ற ஹஜ்ரத் அவர்களிடம் ரஷீத் பேசிக்கொண்டிருந்தான். அவனிடம் காணப்படும் முன் னேற்றத்தைக் கண்டு அவர் மகிழ்ந்தார். பேச்சு வாக்கில் ரஷீத் தனது எண்ணத்தை அவ ரிடம் எடுத்துச் சொன்னான். "இப்பொழுது முதியோர் கல்வி என்று எங்கும் வகுப்பு நடத்து கிறார்கள். முஸ்லிம்களில் சிலர் ஒழுங்கான மார்க்கக்கல்வி இல் லாததால் விஷயம் புரியாது தவிக்கிறார்கள். ஒரு சில முஸ் லிம்கள் நாஸ்திகவாதம் செய

வதற்கும் இதுதான் காரணம், ஆகையால் வயது வந்த, மார்க்கக்கல்வி கற்றிராத முஸ்லிம்களுக்கெல்லாம் ஒவ்வொரு நாளுமோ அல்லது வாரத்துக்கு ஒரு முறையோ, மஹ்ரிபுக்குப் பிறகோ அல்லது வேறு வசதிப்பட்ட சமயத்திலோ ஏன் மார்க்க விஷயங்கள், நூல்கள் கற்றுக் கொடுக்கக்கூடாது? இதனால் மிகவும் பலன் உண்டு...''

அவன் நிதானமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

ஹஜ்ரத் அமைதியாக அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்திலே சிந்தனையின் சாயல் நிழலிட்டது. அவர் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

''ஆம் ரஷீத்! நீ சொல்லுவது ஒத்துக் கொள்ளக்கூடியது தான். இந்த விஷயத்தில் நாம் கவனம் செலுத்தத்தான் வேண்டும்.''

அவர் குரலிலே உறுதி தொனித்தது.

''ஹஜ்ரத்! இன்னொரு விஷயம். நமது குழந்தைகள் மத்ரஸாவிலே குர்ஆன் ஓதக் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஓதி முடித்தும் விடுகிறார்கள். ஆனால் அதில் ஒரு அக்ஷரத்துக்குக்கூட அவர்களுக்கு அர்த்தம் தெரிவதில்லை! கிளிப்பிள்ளை மாதிரி அவர்கள் பாடத்தை ஒப்பிக்கிறார்கள். ஒவ்வொரு ஆயத்தையும் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, அதன் அர்த்தத்தையும் புரியக்கூடிய வகையில் சொல்லி,மனப்பாடம் செய்யச் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இப்பொழுது தான் திருமறையின் தமிழாக்கம் வெளிவந்திருக்கிறது. இதை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளலாம்...'' ரஷீதின் குரலிலே அமைதி தவழ்ந்தது. ஹஜ்ரத்தை நோக்கிக் கொண்டிருந்தன அவன் கண்கள்.

''ஆம் தம்பி! இதுவும் நல்ல யோசனைதான். இன்றைய முஸ்லிம் சமுதாயத்தில் காணப்படும் அறியாமையையும் குறைகளையும் நீக்க இது நல்ல வழி. தமிழ் நாட்டு முஸ்லிம் மத அறிஞர்களது கவனத்துக்கு இதை எடுத்துச் செல்லுகிறேன்'' என்றார் ஹஜ்ரத். ரஷீதுக்கு அது ஊக்க மளித்தது.

''ஹஜ்ரத்! இன்னொரு விஷயம். குர்ஆனிலே இந்த நூற்றுண்டுக்குப் பொறுத்தமில்லாத விஷயங்களும் பல இருக்கின்றன என்று சில அறிவிலிகள் உளறிக் கொட்டுகிறார்கள். சிவ ஞான சூன்ய முஸ்லிம்களும் பகுத்தறிவின் பெயரைச் சொல்லிக்கொண்டு அதை ஆமோதிக்கிறார்கள். எவ்வளவு தவறுபட்டது இது! இறைவன் சொல்லுகிறான்: 'மனிதர்கள் சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை நாம்மிக்க எளிதாக்கி யிருக்கின்றோம். ஆகவே இதனைக்கொண்டு நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?' (குர் ஆன் 54 : 17) இத்தகைய குர் ஆனின் கருத்துக்கள் நாடு முழுவதும் பரவவேண்டும். அதற்கு திருக்குர் ஆன் மாநாடுகள் ஒவ்வொரு ஊரிலும் நடத்தப்பட வேண்டும். இது எனது நீண்ட கால ஆசை...'' உண்மை உருவம் அடையத் துடிக்கும் ஒரு

நல்ல ஆசை அவன் குரலிலே நடனமிட்டது. "அல்ஹம்து லில்லாஹ்! ஆண்டவன் நிச்சயம் அருள் புரிவான். ஒவ்வொரு குக்கிராமத்திலும் அத்தகைய மாநாடுகள் நிச்சயம் நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதன் வெற்றி அல்லது தோல்வி, இளைஞர்களாகிய உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் அயராதுழைக்க வேண்டும். வருங்கால முஸ்லிம் சமுதாயம் அஞ்ச வேண்டாம். மனம்கலங்க வேண்டாம். முஸ்லிம்கள் அனைவரும் மூமின்களாக இருப்பின் நிச்சயம் உயர்வடைவார்கள்..."

ஹஜ்ரத் பேச்சை முடித்தார். நம்பிக்கை ஒளி அவர் கண்களிலே தெரிந்தது. இலேசான புன்னகை அவரது அதரங்களை அழகு செய்தது.

அவரிடம் அவன் விடை பெற்றுக் கொண்டான், ஊர் திரும்பினான்.

இடையிலே நான்கே மாதங்கள். வெளியுலகிலே கோடை சென்று விட்டது; அத்துடன் வெப்பமும் கொடூரமும் மறைந்து விட்டன. ஆற்றிலே இப்பொழுது தண்ணீர் வந்திருந்தது. வயல் களிலெல்லாம் பச்சைப் பசேலென நெற்பயிர். பார்க்குமிட மெங்கும் விரிந்து கிடக்கும் பசுமை. மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் காட்சி. அதைப் போலவே ரஷீதின் உள்ளத்திலும் மகிழ்ச்சித் தென்றல் சதா வீசிக் கொண்டிருந்தது. நான்கு மாதங்களுக்கு முன்பு அவன் மார்க்க விஷயம் நன்கு அறியாத ஒரு முட்டாள். இப்பொழுது அவன் திருமறையைப் பொருளோடு நன்கு படித்து விட்டான்; ஹதீஸ்களை யெல்லாம் மேற்கோள்கள் எடுத்துக் காட்டும் அளவுக்கு நன்கு படித்து விட்டான்!

இப்பொழுது காலையில் அவன் திருக் குர்ஆன் ஓதுகிறான்; மாலையில் ஓதுகிறான்; இரவிலும் ஓதுகிறான். மனத்திலே துன்பமும், துயரமும் இடம் பெறும்போதெல்லாம் அவைகளை மாற்றி மகிழ்ச்சி விளக்கேற்றி வைக்க அவன் திருமறையின் துணையை நாடுகிறான். துன்பம் நேருகையில், அதைத் துடைக்க அருமறையின் மணிமொழிகள் அவனுக்குத் துணை செய்கின்றன. ஏமாற்றத்துக்கும், வெறுப்புக்கும் அப்பால் நிரந்தர இன்பம் ஊட்டுவது அந்த இணையில்லாத உயர்மறையின் மணி வாசகங்களே. அதன் ஒவ்வொரு வாசகமும் ஆயுள் முழுவதும் சிந்தித்து சிந்தித்துப் பயன் பெறக் கூடிய ஒப்பில்லாத கருத்துச் சுரங்கம். திருமறையைப் படிக்கும்போது, அவன் தூய்மையான உணர்ச்சியோடு ஒன்றி விடும்போது, காலம் கடந்த அதன் கருத்துக்களை மனத்திலே பதித்துக்கொள்ள முயலும் போது மனம் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறது! அந்தத் தூய்மையான மகிழ்ச்சியுடன் ஒப்பிட வேறு என்னதான் இருக்கிறது! இதை ரஷீத் நன்கு உணர்ந்து விட்டான். எத்தனை முறை படித்தாலும் அவன் மனத்திலே திருப்தியே ஏற்படவில்லை. அது தணியாத தாகமாகிவிட்டது.

இப்பொழுது அவன் கலீதத்துல் புர்தாவை கணக்கற்ற தட

ஸ்வகள் படித்துவிட்டான். அதன் கருத்தழகிலே தன்னையே மறந்துவிட்டான். ஊன் உருக, உள்ளம் உருக, உணர்ச்சி பொங்க மௌலூது ஷரீபை அவன் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டேயிருக்கிறான். இதற்குமுன் எப்பொழுதுமே அனுபவித்தறியாத ஒரு உண்மைப் புளகாங்கிதம் ரஷீதின் மனவெளியிலே நீங்காத இடம் பெற்றுவிட்டது. இவைகளை எல்லாம் ஓதவேண்டும் என்ற அவனது ஆசை பூர்த்தியாயிற்று. ஆனால் அது தணியாத தாகமாகிவிட்டது.

* * *

"என்ன இப்படி பனியிலே படுத்திருக்கீங்க......" என்ற சொற்கள் ரஷீதின் காதுக்கு எட்டின. மெட்டியின் கீத ஒலி அந்த இன்பக் குரலுக்குப் பின்னணி கீதம் வாசித்தது. ரஷீதின் மனைவி அங்கே நின்றுகொண்டிருந்தாள்.

"சும்மா நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தேன். தூக்கமே இல்லை..."

அவன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான். அடுத்த வீட்டு சாரா அப்பொழுதுதான் துஆவை ஓதி முடித்தாள். நகரா அடிக்கும் ஒலி உடனே காற்றில் தவழ்ந்து வந்தது. முஅதின் உடைய கம்பீரக் குரல் ஒலிபெருக்கியின் மூலம் காலை அமைதிக்கு விடையனுப்பியது. 'தூக்கத்தை விட்டு எழுந்து தொழுதுகொள்ள வாருங்கள்' என்ற அன்புக் கட்டளை அழகு பெற ஒலித்தது.

"எழுந்திருங்கள். பஜ்ருக்கு நேரமாகிவிட்டது ..." என்று சொல்லிக்கொண்டே கணவனின் கையைப்பிடித்து அவள் தூக்கிவிட்டாள். அவன் எழுந்தான். சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, பள்ளிவாசலுக்குக் கிளம்பினான். அவன் உருவம் மறையும் வரையில் அவனைப் பார்த்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள் அவள். 'ஒலூ' செய்துவிட்டு, காலைத் தொழுகையை அவள் ஆரம்பித்தாள். அவள் வதனத்தில் அமைதியும் அழகும் ஒன்றி உறவாடின. அவன் முகத்திலும் திருப்தியும் தூய்மையும் கலந்து நிழலிட்டன. இணையில்லாத ஒரு ஒற்றுமை அந்தத் தம்பதிகளை இணைத்து வைத்தது.

இஸ்லாம்

(படங்களுடன் 11-ம் பதிப்பு)

இஸ்லாத்தின் 5 முக்கியக் கடமைகளாகிய கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் ஆகியவைகளைப்பற்றித் தமிழில் மிக விளக்கமாக உள்ளது. ஷாபி, ஹனபி இருசாராருக்கும் உரியது.

விலை ரூ. 3—0—0

தொழுகைக்கு உதவியாக உள்ள அம்மயத் ஜுஜ்வு (அர்த்தமுடன்) ரூ. 1—8—0. தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்,
132, பிராட்வே, சென்னை-1.

சர்வாதிகாரி ஸ்டாலினுக்கு வலது கரமாக விளங்கி, அவரது வெற்றிக்குத் துணை செய்த பெரியா, என்னும் பெரிய தேசபக்தர், அண்மையில் பெரிய தேசத் துரோகியாகி உயிரிழக்க நேர்ந்தது பற்றி உலகம் என்ன நினைக்கின்றது?

தேசத் துரோகி பெரியா

"ஜமுதா"

★

உலகிலேயே சக்தி வாய்ந்த சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்ற நாடு எது என்றால் 'ரஷ்யா' என்ற ஒரே பதில்தான் கிடைக்கும். தன் நாட்டிற்காக உலகமெங்கணும் கட்டுப்பாடாக, திறமையுடன் சகலதுறைகளிலும் சதி புரிகின்ற 'பக்தர்'களைப் பெரும் அளவில் பெற்றிருக்கும் நாடும் ரஷ்யாதான்! அதுமட்டுமல்ல; சாதாரண பிரஜைகளிலிருந்து, பெரிய அரசியல் தலைவர்கள்வரைத் தேசத்துரோகிகளை அதிக அளவில் உற்பத்தி செய்யும் பெருமையும் ரஷ்யாவையே சாரும்.

பெரிய அரசியல் தலைவர்கள் கூடத் தேசத்துரோகக் குற்றச் சாட்டின் மீது திடீர் திடீர் என்று கைது செய்யப் பட்டுக் கொலை செய்யப்படுவது ரஷ்யாவைப் பொறுத்த வரையில் மிகவும் சாதாரணமாகிவிட்டது. சமீபத்தில் ரஷ்யப் பெருந்தலைவர்களுள் ஒருவராகிய பெரியா நாட்டிற்கெதிராக, அந்நிய அரசுகளுடன் சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது உலகையே பெரும் ஆச்சர்யத்தில் மூழ்க வைத்தது. அவர் செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டதாகச் சில தினங்களுக்குமுன் வெளியிடப்பட்டு, அதற்காக அவர் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாகவும் அத்துடன் உலகிற்கு அறிவிக்கப்பட்டது.

உலகிலேயே பாட்டாளி மக்களின் 'சொர்க்கம்' என்று பொதுவுடமை வாதிகளால் புகழப்படும் ரஷ்யாவிலே, அடிக்கடி இவ்வளவு துரோகிகள் தோன்றுவது நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவிலோ, எதிர்க்கட்சிகளுக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்கும் இங்கிலாந்திலோ கூட இவ்வளவு துரோகிகள் தோன்றுவதாகத் தெரியவில்லை. சொல்லப் போனால், உலகமுழுதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் தங்கள் தாய் நாட்டைவிட, மாஸ்கோவிடம் கொண்டுள்ள மரியாதை —இல்லை, 'பக்தி'— பக்தர்களுக்குக் கடவுள் மீதுள்ளதை விட அதிகமானது! இந்த நிலையில் சோவியத் நாட்டிலே அந்த நாட்

டிற்கெதிராக. அந்த நாட்டுத் தலைவர்களே துரோகம் புரிகிறார்கள் என்றால், அதில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதாகவே எண்ண வேண்டியிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் சொல்லுகிறபடி, பெரியா போன்றவர்களால் தேசத்துரோகக் குற்றம் செய்யப்பட்டது உண்மையென்றால், ஒன்று, தேசத்துரோகிகளை உற்பத்தி செய்கின்ற மோசமான அடிப்படையிலே அந்த நாட்டின் அரசியல் வாழ்வு அமைந்திருக்க வேண்டும். அல்லது, அங்கு அடிக்கடி நடைபெறுவது தேசத்துரோகக் குற்றமாக இருக்க முடியாது. அரசியல் தலைவர்களுக்கிடையில் ஏற்படும் அதிகாரப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் தோல்வி யடைந்தவர்களை ஒழித்துக் கட்டும் ஒரு முறையாகவே கருதப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் ஆட்சி முறையும், அரசியல் அமைப்பும், மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுப்பதாயிருந்தால்,அங்கு 'தேசத்துரோகிகள்' வளருவதற்கு நியாயமில்லை. ஆனால் தனி மனித சுதந்தரமும், கருத்துரிமையும் மறுக்கப்படுகின்ற ரஷ்ய நாட்டிலே—ஆளும் வர்க்கத்தினருக்கு மாறுபட்ட அரசியல் கொள்கையைக் கொண்டிருப்பதே தேசத்துரோகமாகக் கருதப்படுகின்றது! ஜனநாயக நாடுகளிலே புனிதமாகக் கருதப்படும் அபிப்பிராய உரிமை, ஆட்சியாளருக்கு எதிராக இருந்தால், அதைத் தேசத்துரோகக் குற்றஞ் சாட்டி அடக்குவதற்கு ரஷ்ய சர்வாதிகாரிகள் தயங்குவதில்லை. இதில் மற்றொரு விசித்திரம் என்னவென்றால், அப்படித் தேசத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், வெளியுலகிற்கு, எவ்வித விபரமும் தெரியாத வகையில், காவலில் வைக்கப்படுகின்றனர். அவர்கள் சிறையில் தானிருக்கின்றார்களா? அல்லது கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதே பெரிய மர்மமாயிருக்கின்றது. பிறகு, "குற்றவாளி தானே தன்னுடைய சதிக்குற்றம் அனைத்தையும் ஒத்துக் கொண்டு விட்டார்! அதில் முதலாளித்துவ நாடுகள் நீண்டகாலமாக சம்பந்தங் கொண்டிருந்தன" என்று சர்க்கார் அறிக்கை வரும்! சதி உண்மையிலேயே நடந்ததா? சதிக் குற்றச்சாட்டு ஒழுங்காக, சுதந்தரமுள்ள நீதி மன்றத்தினால் விசாரிக்கப்பட்டதா? குற்றஞ் சாட்டப்பட்டவருக்குத் தனது வழக்கை எடுத்துரைக்க வசதியளிக்கப்பட்டதா? என்பதெல்லாம் வெளியுலகத்துக்குத் தெரியாது!

இதனால் முதலாளித்துவ நாடுகளைத் தாங்கிப்பேசும் நோக்கமில்லை நமக்கு. ரஷ்யாவிலே மட்டும் ஏன் அடிக்கடி இவ்வளவு துரோகிகள் தோன்றவேண்டும் என்றுதான் நமக்குப் புரியவில்லை! அடக்கப் படுபவர்களும், பாட்டாளிகளும் நாட்டிற்கு எதிராகச் சதி செய்வதற்கு அது ஒரு முதலாளித்துவ நாடல்ல. பாட்டாளிகளின் நலன் நாடும் பொதுவுடைமைச் சர்க்கார் ஆட்சி செய்

கின்ற நாடு அது. அத்தகைய நாட்டில் மிகுந்த செல்வாக்கும், சகல சௌகரியங்களும் பெற்று மதிப்புடன் மக்களிடையே உலவும் தலைவர்கள் அன்னிய நாட்டிற்குத் தங்கள் நாட்டைக் காட்டிக்கொடுப்பதென்பது இன்றைய உலகில் சுலபமானதுதானா? அப்படித்துரோகம் செய்வதால் பெரியா போன்றவர்களுக்குப் பதவியில் இருக்கும் பொழுது இருந்ததைவிட, என்ன உயர்ந்த அந்தஸ்து கிடைத்துவிட முடியும்? ரஷ்யா போன்ற ஒரு நாட்டை, அன்னியருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு, அவர்களின் கையாளாக அந்த நாட்டை ஒரு துரோகி ஆளுவதென்பது இன்றைய உலகில் இயலக்கூடியது தானா? அது சாத்தியமானது தானென்றால், அந்த நாட்டை ஒரு 'சதிகாரர்கள் நாடு' என்று கூறுவதிலே தவறு இருக்க முடியாது.

ரஷ்ய அரசியலமைப்பு சர்வாதிகார ஆட்சிக்குத்தான் வழிவகுத்திருக்கின்றது. அதிகாரப் போட்டியிலே, யாராவது ஒரு வலியவர்தான் வெற்றி பெற முடியும். மாலங்கோவின் சர்வாதிகாரம் நிலைப்பதற்கு, இவர்கள் குருநாதர் ஸ்டாலின் காட்டிய, "தடையாக உள்ள அனைத்தையும் தகர்த்தெறி!" என்ற கொள்கை, பெரியாவின் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கலாம் என்று உலகம் கருதுவதில் நியாயம் இருக்கவேசெய்கின்றது. ஏனென்றால், கம்யூனிஸ்டுகள் உலகமெங்கணும் போராடுகின்ற கருத்துரிமைக்கு ரஷ்யாவிலே இடமில்லை!

அமெரிக்காவில், ரோஸன்பாக் தம்பதிகள் தேசத்துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டபொழுது, உலகக் கம்யூனிஸ்டுகளனைவரும், ஏதோ பெரிய அநீதி விளைவிக்கப்பட்டதுபோல் கூக்குரலிட்டனர். இவ்வளவுக்கும், ரோஸன்பர்க் தம்பதிகளுக்கு, தங்கள் வழக்கை நடத்த பூரண வசதிகள் அளிக்கப்பட்டு, "குற்றவாளி" யென்று நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட பிறகே அவர்கள் தண்டிக்கப்பட்டனர். மேலும் அமெரிக்க நீதிமன்றம், பூரண சுயேச்சையுடன் தீர்ப்பளிக்கும் அதிகாரம் வாய்ந்த சபையென்பது உலகுணர்ந்தது. அங்கெல்லாம் குற்றவாளிகள், தான் குற்றஞ் செய்தது உண்மைதான் என்று ஒத்துக்கொள்ளுவதில்லை. ஆனால் விசித்திர நாடான ரஷ்யாவிலே, குற்றவாளிகள் சிறையில் இருந்து கொண்டே, "தான்குற்றஞ்செய்தது உண்மைதான்; உலகமுதலாளித்துவ நாடுகளுக்கு ஆதரவாக சதி செய்தேன்" என்று, குற்றவாளிகளே ஒத்துக் கொள்ளுவதாக விளம்பரப்படுத்தப்படுகின்றது. குற்றவாளி மனப்பூர்வமாக நிர்ப்பந்தமின்றி குற்றத்தைஒத்துக்கொண்டார் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. குற்றவாளிகள் தாங்களே ஒத்துக்கொள்ளுவதாகஉலகிற்கு அறிவிக்கப்படும்பொழுது, அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா, இல்லையா என்பதே

மர்மமாயிருக்கின்றது! நிர்ப்பந்தமில்லாமல் ரஷ்யாவில் மட்டும் குற்றவாளிகள் அடிக்கடி தங்கள் குற்றத்தை ஒத்துக்கொள்வது எதிர்பார்க்கக் கூடியதுதானு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நிலேயில், கம்யூனிஸ்டுகள் ரஷ்ய முகாமில் இந்தியாவைச் சேர்க்க ஆசைப்படுகின்றனர். வெள்ளேயனும் அமெரிக்கனும் இந்தியாவுடன் உறவு கொள்ளுவதை ஆதிக்க ஆசையென்று கருதும் தோழர்களுக்கு, ரஷ்யாவும் ஒரு அன்னிய நாடுதான் என்ற எண்ணம் ஏற்படுவதில்லே! அமெரிக்காவும் இந்தியாவும் மோதிக் கொண்டால், ரஷ்யாவுக்கு இந்தியாவை அடிமைப் படுத்தலாம் என்ற துரோக எண்ணத்தில்தான் இன்றைய கம்யூனிஸ்டுகள் நடந்து வருகின்றனர். அமெரிக்கா பாக்கிஸ்தான் இராணுவ ஒப்பந்தத்தை எதிர்க்கும் சாக்கிலே, இந்தியாவை ரஷ்ய முகாமில் சேர்க்கப் பார்க்கும் இவர்களின் ஏய்க்கிற புத்தியையும் நாம் இப்போது கவனித்து வருகின்ருேம். ரஷ்யா – அமெரிக்கா இரண்டும் அன்னிய வல்லரசுகள்தான். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அமெரிக்காவை விட, சர்வாதிகாரத்திலும், சதிகாரமுறையிலும் நம்பிக்கையுள்ள ரஷ்யாவினுலும், உலகமுழுதும் பரவியுள்ள அவர்களின் உளவுகாரர்களினுலுந்தான் இந்திய சுதந்திரத்துக்குப் பேரபாயம் இருக்கிறது.

எதற்கெடுத்தாலும், "ரஷ்யாவைப் பார்!" என்று கூறுகின்ற மாஸ்கோ பக்தர்கள், மந்திரி சுப்ரமண்யம் கூறியதைப்போல், "துரோகிகளிலும் ரஷ்ய துரோகிகளேப்போல் உலகில் உண்டோ?" என்று தான் வியப்புற வேண்டியிருக்கிறது.

நாயகமே!

கா. அப்துல் கபூர் சாஹிப் M. A.
(திருச்சி, ஜமால் முஹம்மது கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர்)

நபிகள் நாயகத்தின் பொன் மொழிகள் என்னும் அழகிய நறுமலர்களேக் கொண்டு ஒரு அருமையான கவிதா மாலேயாகப் புனேயப்பெற்றது. விலே அணு 6. தபால் செலவுடன் 8 அணு. அனுப்பலாம்.

அல்லாமாவின் அமுத மொழிகள்

அல்லாமா இக்பாலவர்களின் பொன் மொழிகளின்தொகுப்பு. விலே 6 அணு. தனிப்பிரதி வேண்டுவோர் 7 அணு ஸ்டாம்ப் அனுப்பவேண்டும். வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் உண்டு.

அன்பு நூல் நிலேயம்
132, பிராட்வே, சென்னே-1.

9. அன்பிற்கரசி

மும்தாஜ், முகலாய சாம்ராஜ்யத்தின் பேரரசி மாத்திரமல்ல; நாளடைவில் அளவில்லா அன்புக்கும் பேரரசியானுள்! எங்கோ கிடக்கும் இளம் புழுவைக் கொண்டு வந்து தன் கூட்டில் வைத்து தினம் அதைக் கொட்டிக் கொட்டி நாளடைவில் தன் இனமாக்கிக் கொள்கிறதல்லவா குளவி? அது போல் ஆரம்பத்தில் அநேக எண்ணங்களைத் தாங்கி அல்லலுற்ற அபலை மனம், நாளுக்கு நாள் ஷாஜஹானின் அன்புப் பிரவாகத்தின் அடித்தளத்தில் அமிழ்ந்து, தானே அமைதியடைந்தது; தூய அன்பாகவே உருபெற்றெழுந்தது.

இப்பொழுதெல்லாம் சிராஜை நினைக்கவே மிகவும் நாணமுற்ருள் மும்தாஜ். அச்சமயம் அவள் மனமே விசுவரூபமெடுத்து நின்று அவளிடம் வாதாடும், என்ன இருந்தாலும் நீ அன்று கண்ட இன்பத்தை இன்று உன்னுல் காண முடியுமா மும்தாஜ்? அன்று நீ சின்னஞ்சிறு பெண்; கூட்டிலடைபடாத சுதந்திரப் பறவை. இன்று நீ வேருெருவரின் சொத்து. அன்றிருந்த உன் குலுக்கலும் மினுக்கலும் இன்று எப்படி மறைந்தன? இதை ஏன் உணரவில்லை நீ? என்றெல்லாம் காலத்தின் கோலத்தை சீர்தூக்கிக் காட்டும் அவளது 'மென் மனம்.

ஒரு பதிலும் சொல்லத் தோன்ருது மும்தாஜுக்கு. நாலா பக்கமும் பார்த்து விழிப்பாள். விண்ணையும் மண்ணையும் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டுக் கொள்வாள்,

மருந்து கசப்பாயிருந்தாலும், உடம்புக்கு நல்லது என்ற வகையில் உவகையுடன் உட்கொள்ள வேண்டியதுதானே !

உடனே தன் அந்தரங்க மஹாலுக்கு ஓடிச்சென்று திருமறையைக் கையிலெடுத்து, மிகுந்த பக்தி சிரத்தையுடன் வாய்விட்டு ஓத ஆரம்பிப்பாள் மும்தாஜ். நபிகள் நாயகத்தின் திருவாக்கே அவள் காதில் ஒலிப்பதுபோலிருக்கும். அப்படியே சற்று நேரம் கண்களை மென்மையாய் மூடி மெய்ம்மறந்து போவாள். அத்திருவாக்கிலேயே அவள் மனம் லயித்துவிடும்.

பேரரசருடன் பிணைத்துக் கொண்ட தன் அரண்மனை வாழ்க்கையின் இன்பம் அனைத்தையும் அவருக்கே சமர்ப்பித்துத் தியாகம் செய்வதையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருந்தாள் மும்தாஜ். அவளுடைய அந்தரங்க நினைவில் எப்பொழுதும் ஷாஜஹானே வீற்றிருந்தார்.

மும்தாஜின் உள்ளுணர்வை, அவளுடைய முகத்தாமரையின் மலர்ச்சியிலிருந்தே ஒருவாறு உணர்ந்தார் ஷாஜஹான். ஆஹா! அவருக்குத்தான் எத்தனை பூரிப்பு!

இன்ப விடுதியில் இருவரும் தனியேயமர்ந்து வெகுநேரம் உரையாடுவர். சாம்ராஜ்ய நிர்வாகத்தை சரிவர தெரிந்து கொண்டு, அரசாங்க மேம்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டாள் மும்தாஜ். மனித குலத்தில் காணும் துயரத்தையும் துன்பத்தையும் தன் கண்ணீரால் கழுவும் அளவுக்கு அவளது இலட்சிய வாழ்க்கை உயர்ந்தது. இஸ்லாமிய பண்பாட்டிற்கு எங்கெங்கே இழுக்கு ஏற்படுகிறதோ, அதையெல்லாம் ஷாஜஹானுக்குச் சுட்டிக்காட்டி அன்பாய்க் கடிந்துக் கொள்வாள். பாதுஷாவோ அதை சிரமேற்தாங்கிச் சரிசெய்வார். மும்தாஜ் வார்த்தைகளுக்குத்தான் எத்தனை மதிப்பு! திருமறையின் அடிப்படையில் சாம்ராஜ்யத்தை அமைக்க, எத்தனையோ யோசனைகளை வலியுறுத்திச் சொன்னாள் ஷாஜஹானுக்கு. அதனால் மிகுந்த சுபிட்சத்துடன் முகலாய சாம்ராஜ்யம் நாளுக்கு நாள் விரிந்து பரந்து கீழ்க் கடலுக்கும் மேல் கடலுக்குமாகத் தொட்டு நின்றது.

எனினும், அச்சமயம் தட்சிண ராஜ்யத்தின் குறுநில மன்னர்களுக்குள் ஏற்பட்டிருந்த பெருத்த கலகம், ஷாஜஹானை மிகவும் வருத்தமடையச் செய்தது. அண்டை ராஜ்யத்தின் சலசலப்பு, தன் ராஜ்யத்தில் பரவ எத்தனை நாளாகும் என்று ஆழ்ந்து யோசித்தார். மும்தாஜின் யோசனையின்பேரில் சாத்வீக ராஜதந்திர முறையில், முதலில் தன் பிரதிநிதியொருவனையனுப்பி அவர்களை விசாரிக்கச் செய்தார். ஆனால் அவர்களோ வெகுண்டெழுந்தனர்; துள்ளிப் பேசினர். அவர்களை அடக்க எத்தனை நாளாகும்! உடனே சேனை திரட்டச் சொல்லிப் படையெ

டுத்து விட்டார் தட்சணத்தின் மீது. தானே நேரில் சென்று யுத்தம் செய்தார்.

மும்தாஜுக்கு, அவரைப்பிரிய மனமேயில்லை; யுத்த காலத்தில் அவரோடு சேர்ந்திருக்க முடியுமா?

தன் பர்த்தாவுக்கு எவ்வித தீங்கும் ஏற்படக்கூடாதென்றும், யுத்தத்திலும் வெற்றி கிட்ட வேண்டுமென்றும் தினம் ஒரு வேளை உண்டு, ஐங்காலத் தொழுகையுடன் நோன்பு இருக்க ஆரம்பித்துவிட்டாள் மும்தாஜ். ஒரு உத்தம ஸ்திரீ ரத்தினத்தின் கடமையும் அதுதானே!

நாட்கள் சென்று கொண்டிருந்தன. யுத்த களத்திலிருந்து ஒரு செய்தியுங் காணோம். புழுவாய்த் துடித்துப் போனாள் மும்தாஜ். வெகு நாட்கள் கழித்து, தட்சிணத்துக் குறுநில மன்னர்களனைவரும் ஷாஜஹானுக்குக் கீழ்ப்படிந்து விட்டார்கள் என்ற செய்தி எட்டியது. இருந்தும் ஷாஜஹானை இன்னும் காணோமே! கண்ணீரும் கம்பலையுமாய் இடைவிடாது ஆண்டவனைத்தான் வேண்டிக் கொண்டிருந்தாள் மும்தாஜ்.

கடைசியில், அம்மன்னர்களை அடக்கினது மாத்திரமன்றி, தட்சணத்தையே ஜயித்து தன் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டு வெற்றிக் கொடியுடன் ஊர் திரும்பினார் ஷாஜஹான்.

மும்தாஜுக்கு அளவிலா ஆனந்தம்; கண்களில் ஆனந்தக் கண்ணீர் அமோகமாய் வழிய, மிக்க அன்புடன் அரசனை வரவேற்றாள். ஷாஜஹானோ அவள் நிலையைக் கண்டு பிரமித்துப் போனார். தன்மேல் உள்ள அன்பு மேலீட்டால் அவளுடைய தியாக உணர்ச்சியைக்கண்டு மயிர்க்கூச் செறிய பரவசமுற்றார். 'ஆகா! நீயே தர்ம பத்தினி' என்று மும்தாஜை மிகவும் புகழ்ந்து போற்றினார். ஆனால் மும்தாஜோ தன் கடமையைச் செய்ததாகச் சொல்லி முறுவலித்தாள். அரசனுடைய பரிவும், அவளுடைய அன்பும் ஒன்றோடொன்று போட்டியிட்டன.

அவ்வருஷக் கடைசியில், அக்பர் காலத்திலிருந்தே முரண்டிக் கொண்டிருந்த தட்சிண ராஜ்யங்களை வெகு எளிதில் வெற்றி கண்டதற்காக, விழா கொண்டாட ஏற்பாடு செய்தனர் அரண்மனைப் பிரதானிகள். பணத்தை அள்ளி வீசி மிகப் பிரமாதமான ஏற்பாடுகளெல்லாம் செய்தனர்; பாலஸ்தீனம் எங்கே! துருக்கிஸ்தானம் எங்கே! அங்கெல்லாம் அன்பழைப்புகள் சென்றன.

விடிந்தால் வெற்றிவிழா. அரண்மனை முழுவதும் வெகுவாக அலங்கரிக்கப்பட்டு, விதவிதமான வண்ணத் தோரணங்கள் ஆங்காங்கு அழகுறத் தொங்கின. இன்னும் எங்கு பார்த்தாலும் விலையுயர்ந்த வாசனைத் திரவியங்கள் வேறு அள்ளி வீசப்பட்டுக் கிடந்தன. சாம்ராஜ்யப் பிரமுகர்கள் அனைவருமே

அங்குக் குழுமியிருந்தனர். இன்னும் விழாவுக்கு வந்த சிற்றரசர்கள் அநேகர் உள்ளே நுழைவதற்கு இடமில்லாமல் அரண்மனை வாசலிலேயே அமர்ந்து கிடந்தனர்.

நேரமாயிற்று, முன் ஹாலுக்குச் செல்ல, ஷாஜஹானும் நேர்த்தியான பட்டாடையுடுத்தி, விலையுயர்ந்த கெட்டி முத்துக்களாலான கிரீடத்தை அவசர அவசரமாய்த் தரித்துக்கொண்டிருந்தார்.

அதே சமயத்தில், 'மும்தாஜுக்கு ஏதோ ஆபத்து' என்று அந்தப்புரத்திலிருந்து அவசர செய்தி வர, கிரீடத்தைக் கழற்றிக் கீழே வைத்துவிட்டு விரைந்து சென்றார் ஷாஜஹான். அங்கு, அப்பொழுதுதான் அறுசுவையுடன் சாப்பிட்டுத் திரும்பிய பேரரசி, அனைத்தையும் அப்படியே வாயிலெடுத்திருந்தாள். சேடிகள் அனைவரும் அவளை அப்படியே தாங்கி நின்றார்கள். அதற்குள் அரசியின் திருமுகமும் வாடி வதங்கிப் போயிருந்தது. "ஆ! என்ன நேர்ந்தது? ஏன் இப்படி? உணவில் ஏதாவது தீங்கு ஏற்பட்டிருக்குமா?" என்று பரபரப்புற்றார் ஷாஜஹான். கரத்தைப் பற்றி, மஞ்சத்தில் படுக்கவைத்து அவளை ஆசுவாசப்படுத்தினார்; ஆனால் அதற்குள் அவர் திருமுகந்தான் எப்படி மாறிப் போயிற்று!

செய்தியறிந்து அரண்மனை ஹகீம் ஓடோடியும் வந்தார். பேரரசியின் தேக நிலையைப் பரிசோதிப்பதற்குள், ஷாஜஹான் அங்கிருந்தபடியே வெற்றி விழாவுக்கு ஏற்பாடு செய்த அரண்மனைப் பிரதானிகளுக்கு ஓலையெழுத ஆரம்பித்து விட்டார்! அவர் முகமெல்லாம் வியர்த்து வழிந்தது.

அதை அவர் சரியாய் எழுதி முடிக்கக்கூட இல்லை. இதற்குள் ஹகீம் வந்து, எவ்வித பரபரப்புமின்றி அரசரை வணங்கினார். "அரசியின் உடம்புக்கென்ன? அப்படி திடீரென்று ஆவானேன்?" என்று அதி ஆவலாய் விசாரித்தார். ஆனால் அவர் குரல்கூட சரியாய் எழும்பவில்லை. உடனே ஹகீம் இன்னும் அருகில் சென்று காதோடு காதாய், "பேரரசியின் உடம்பிற்கு ஒன்றுமேயில்லை; கருவுற்றிருக்கிறார்; அவ்வளவுதான். இன்னும் ஒன்றிரு மாதங்கள் இப்படியிருந்து, பிறகு தானே சரியாகி விடும். அதைப்பற்றி அபாயமொன்றுமேயில்லை. மொகலாய சாம்ராஜ்யத்திற்கு இளவரசன் பிறக்கப்போகிறான்" என்று சொல்லிப் புன்னகைபுரிந்தார். 'ஆ! அப்படியா! ரொம்ப சந்தோஷம்' என்று இரைந்து பேசினார் ஷாஜஹான். அதற்குள் அவர் சாம்பிய முகம், தானே மலர்ந்து விட்டது. அப்பொழுதே அந்த ஹகீமுக்குத் தகுந்த வெகுமானங்கொடுத்து அனுப்பிவைத்துவிட்டு மும்தாஜிடம் ஓடிவந்தார். செல்லமாய் அவள் தாடையை நிமிண்டி, செய்தியை யறிவித்துக் குதுகலப்பட்டார். மும்தாஜும் சிறிது

நாணத்துடன் குறுநகை புரிந்து கொண்டாள். 'சரி, வெற்றி விழாவுக்கு நேரமாகிறது' என்று அப்பொழுதே அவசரமாய்ப் புறப்பட்டுவிட்டார் ஷாஜஹான்.

அவர் சென்றவுடனே மும்தாஜ் படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தாள். அப்பொழுது, அரசர் அரைகுறையாய் எழுதிவிட்ட ஓலை அவள் கண்களில் படவே, அதை எடுத்து ஆர்வமுடன் வாசித்தாள். "என்ன! இதற்காக வெற்றி விழாவையே நிறுத்தி விடும்படியல்லவா எழுத ஆரம்பித்திருக்கிறார்! ஆ! நம்பால் அவருக்குத்தான் எத்தனை அன்பு!" என்று முணுமுணுத்தாள் மும்தாஜ். அப்பொழுது அவளுடலில் ஒருவித புல்லரிப்பு ஏற்பட்டது.

அதே சமயத்தில், ஷாஜஹான் முன்னிலையில், அரண்மனை தர்பார் ஹாலில் வெற்றிவிழா மிகப் பிரமாதமாய் ஆரம்பித்து நடந்தது. விதம்விதமான நேர்த்தியான நடனங்களும், கேளிக்கைகளும் மலிந்துகிடந்தன. அங்குக் குழுமியிருந்த ஜனத்திரள் பெரும் ஆனந்தத்தில் அமிழ்ந்தது.

அப்பொழுது ஷாஜஹானும் உவகை மிகுதியால் அநேக விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் வெகுமதியாக அவர்களுக்கு அள்ளி வழங்கினார்.

மும்தாஜும் சீக்கிரத்தில் தான் ஒரு தாயாகப்போகிறாள் என்பதை யறிந்து மிகவும் குதூகலப் பட்டுக் கொண்டாள்.

விவாகமாகி வெகுநாள் சென்று கருவுற்றாளே யொழிய, அதன் பிறகு வெகு சீக்கிரத்தில் அடுக்காக ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் மும்தாஜ். தன் வம்ச பரம்பரை பெருகினதைக் கண்டு ஷாஜஹானுக்கு அளவில்லா சந்தோஷம். அல்லாஹ்வே தன்னை ஆசீர்வதித்து அளித்த அருமை மனைவி மும்தாஜ் என்று எண்ணினார் ஷாஜஹான். அவர் எண்ணுவதை அவள் சொல்லி விடுவாள்; அவள் நினைப்பதை அவர் செய்து விடுவார் என்றால், அவர்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்டிருந்த பேரன்பை என்னென்றுரைப்பது!

அப்பொழுது, இத்தனை வருஷங்களாக ஒழுங்காய் நடந்த பீஜப்பூர் சுல்தான், வேண்டுமென்றே தன் மைந்தனைப் பட்டத்துக்குக் கொண்டுவந்து சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டான். இதை ஷாஜஹான் எப்படி அனுமதிக்க முடியும்? "உடனே திரட்டு சேனையை; நட பீஜப்பூரை நோக்கி" என்று ஜரூரான நடவடிக்கை யெடுத்துக் கொண்டார் பாதுஷா. தானும் பல்லக்கிலேறி, படையுடன் புறப்பட்டு விட்டார்.

செய்தி யெட்டிற்று சுல்தானுக்கு; அப்படியே கிடுகிடென நடுங்கிப்போய்விட்டான்! முகலாயப்படை பாதிவழிகூடச் சென்றிருக்காது; அதற்குள் அவன் சமாதானப்படையனுப்பி, பணிந்து விட்டான். அப்பொழுதே ஏராளமான செல்வத்தையனுப்பி வைத்து, ஒழுங்காய் கப்பங்கட்டி வருவதாகவும் உறுதிமொழியளித்து விட்டான்.

சீக்கிரத்தில் ஷாஜஹான் நாடு திரும்பினதைக் குறித்து, மும்தாஜுக்கு மிக்க சந்தோஷமே. ஆனால் என்ன அசம்பாவிதம்! அப்பிரதேசத்திலிருந்த ஏதோ ஒரு வித தொத்து வியாதியைப் பற்றிக்கொண்டு நோயுற்றவளா

திரும்பியிருந்தார் ஷாஜஹான்!

அவர் நோயுற்ற அந்தப் பிரதேசத்திலிருந்தே வைத்தியனை அழைத்து வரச்சொல்லிவிட்டு, இரவும் பகலுமாய் தானே அரசர் பக்கலின் கண்விழித்திருந்து கவனித்து வந்தாள் மும்தாஜ். தன் செல்வத்தின் திரண்ட பகுதியை ஏழைகளுக்குத் தானம் அளிப்பதாகச் சொல்லி, எப்படியும் தன் கணவன் உயிரை மீட்டுக்கொடுக்கும்படி அல்லாஹ்வை மன்றாடினாள். அரசன் சுகமாய் எழுந்ததும், தன் அரண்மனையில் விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் வாரி, தன் கரத்தினாலேயே ஏழைகளுக்குப் பரிசு வழங்குவதாக உறுதி மொழியளித்தாள்.

அதற்குள் அப்பிரதேச வைத்தியரே வந்துவிட்டார். ஷாஜஹான் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொண்டு மும்தாஜே தான் வைத்தியர் கொடுத்த மருந்துகளைக் குழைத்து நாவில் தடவினாள். ஷாஜஹான் சீக்கிரத்தில் குணமடைந்து எழுந்தார்.

ஆனால், மும்தாஜின் உடம்பு என்னவோ நாளுக்கு நாள் மெலிந்து வரத்தொடங்கியது. தன் இல்லக் கிழத்தியுடன் காஷ்மீருக்கு உல்லாசப் பிரயாணத்துக்குங்கூட சென்று திரும்பினார் ஷாஜஹான். சில மாதங்கள் சிறந்த வைத்தியர்களின் யோசனைப்படி மலையுச்சியில்கூட வசிக்கச் சென்று பார்த்தாள் மும்தாஜ். இருந்தும் அவள் உடம்பு தேறவேயில்லை.

கடைசியில் அரண்மனைக்குத் திரும்பினதும் படுக்கையாகவே படுத்துவிட்டாள் பேரரசி. அப்பொழுதெல்லாம் ஷாஜஹான் இடைவிடாது அவள் பக்கலிலேயே இருந்து அன்புடன் கவனித்து வந்தார். பாரசீகத்து ஹகீம் கூட வந்து பார்த்து ஏதோ சிகிச்சை செய்தார். ஒன்றிலும் குணமாகவில்லை.

அதனால் அவ்வரண்மனை அந்தப்புரமே சோபையிழந்து காணப்பட்டது. பேரரசர் தனது வயது வந்த பிள்ளைகளை அரசாங்க அலுவல்களை கவனிக்கச் சொல்லிவிட்டு, எப்பொழுதும் குர்ஆனும் கையுமாகவே அவள் பக்கலில் இருந்தார்.

இப்பொழுதெல்லாம் படுக்கையில் கிடந்த மும்தாஜ் அதிகங்கூடப் பேசுவதில்லை. பேச முடிந்தால்தானே? 'சும்மா கிடக்கும் மனம், அரக்கனின் தொழிற்சாலை' என்பார்களே அதுபோல் அவள் மனம் அப்பொழுது எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணின; எப்பொழுதோ பறந்து போன சிராஜைக்கூட ஞாபகப் படுத்திக்கொண்டிருப்பாள் போலும். இன்றேல் அவள் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவானேன்! கண்களை மூடி மூடி திறந்துகொண்டிருந்தாளே! அதைக் கண்டுவிட்டு, "என்ன செய்கிறது, மும்தாஜ்? சற்று வாய்திறந்து மெதுவாகச் சொல்லேன்" என்று அன்பாய்க் கேட்

பார் பேரரசர். பதில் சொன்னால் தானே அவள்!

கடைசியில் ஒருநாள், கை ஜாடை காட்டி ஷாஜஹானை அருகில் அழைத்தாள் மும்தாஜ். அவர் கரத்தை இறுகப்பற்றிக் கொண்டு மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்க, மெல்லிய குரலில் பேசினாள்.

'எனக்குப் பிறகு நீங்கள் யாரையும் மணம் புரியாதீர்கள்...'

'ஆ! உனக்குப் பிறகா! அந்தோ? நான் யாரையும் மனத்தால்கூட நினைக்கமாட்டேனே!'

குரல் கரகரத்தது அரசருக்கு.

"நம் இஸ்லாமிய பண்பாட்டிற்குச் சிறிதும் களங்கமில்லாமல் அன்பே உருவாய் ராஜ்யத்தை நடத்துங்கள். நமது அன்பின் சின்னமாக ஏதாவது ஒரு..." என்று சரியாய்க்கூட சொல்லி முடிக்கவில்லை; அதற்குள் பக்கத்து மஹலில் பேரிடிசத்தம் கேட்டு ஷாஜஹான் துள்ளிக்குதித்து ஓடினார். அங்கு அவர் தந்தையின் காலத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த பல கிளைகளையுடைய அந்த அதிநூதன பெரிய லஸ்தர் விளக்கு, கீழே அறுந்து வீழ்ந்து சுக்குநூறாகிச் சிதறிக்கிடந்தது. வரப்போகும் சோக நிகழ்ச்சிக்கு அறிகுறியாயிருக்குமோ! அரசர் மனத்தில் அனேக எண்ண அலைகள் எழுந்து மோதின. பெரிய மனக் குழப்பத்துடன் அப்படியே சிலையாய் நின்றுவிட்டார் ஷாஜஹான். [தொடரும்]

பத்திரிகை வானில் புதிய ஒளி

மணி விளக்கு

இஸ்லாமியப் பண்பாட்டை விளக்கும் மாத இதழ்

முதல் இதழிலே

திருமறையின் தீர்ப்பு, சரித்திரச் சாலையிலே, வளரும் விஞ்ஞானம், தமிழ் இலக்கியம், திருக்குர்ஆன் தெளிவுரை, படித்த புத்தகம், நபிமணி—மொழியும், வழியும், பிறமொழி இலக்கியம், பெரியோர் வாழ்க்கை, பிறைக்கொடி பிரதேசங்களில், குர்ஆனில் வரலாறு, கடல்கடந்து வந்த கடிதம் ஆகிய பகுதிகளும், மற்றும் சிறு கதைகள், கவிதைகள், நல்லுணர்ச்சி யூட்டும் நகைச் சுவைத் துணுக்குகள் முதலியவைகளும் இடம் பெறுகின்றன.

தனி இதழ் 6 அணா ஆண்டுச் சந்தா ரூ. 4-8-0

ஏப்ரல் முதல் வாரத்தில் வெளியாகிறது.

முன் பணம் கட்டக்கூடிய கண்ணியமான ஏஜண்டுகள் தேவை. முன்னோடி இதழும், இதர விவரங்களும் வேண்டுவோர் இரண்டணா தபால் தலையுடன் எழுதவும்.

நிர்வாக ஆசிரியர்,

114, அங்கப்ப நாயக்கன் தெரு, மதராஸ் (1)

முஸ்லிம் முரசு

சிறுகதைப் போட்டி

முடிவு தேதி 1-5-'54.

முதற் பரிசு : 100 ரூபாய்

இரண்டாவது பரிசு : 50 ரூபாய்

மூன்றாவது பரிசுகள் 2 : 25 ரூபாய்

நிபந்தனைகள்

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள் தென்னிந்திய முஸ்லிம்களின் வாழ்க்கையைப் பின்னணியாக கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்கவேண்டும்.

2. கதைகள் வாழ்க்கையின் எந்தக் கோணத்தில் அமைந்தாலும், அவற்றின் உணர்ச்சிப்பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் கருத்து—ஆகிய சிறுகதையின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம். அதற்குமேல் அனுப்பக்கூடாது.

4. கதையின் நீளம், முஸ்லிம் முரசில் எட்டுப் பக்கங்களுக்கு அதிகப்படாமலும், நான்கு பக்கங்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

5. சிறுகதை அனுப்புவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையைக்கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

6. பரிசு பெற்றத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர், கையெழுத்துப் பிரதியுடன்

போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும். கதைகளைத் திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது.

7. 1954-ம் வருடம், மே மீ முதல் தேதிக்குள் கதைகள் முஸ்லிம் முரசு காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். கவரின்மேல் "சிறுகதைப் போட்டி" என்று அவசியம் குறிப்பிடவேண்டும்.

8. எல்லாவற்றிலும் சிறந்ததென்று 'பரிசீலனைக் குழு' கருதுகின்ற முதல்தரமான கதைக்கு 100 ரூபாய்கள் பரிசளிக்கப்பெறும். அதற்கு அடுத்தபடியாக உள்ள மூன்று கதைகளுக்கு முறையே 50, 25, 25 ரூபாய்கள் அன்பளிப்பாக வழங்கப் பெறும். பரிசு பெற்ற கதைகளின் 'காப்பிரைட்' உரிமை முஸ்லிம் முரசு காரியாலயத்தைச் சேர்ந்ததே.

9. பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளைத்தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை முஸ்லிம் முரசில் பிரசுரிக்கப்படும். அவற்றிற்குரிய அன்பளிப்பும் வழங்கப்பெறும்.

10. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பரிசீலனைக்குழு கருதினால், உசிதம்போல் அன்பளிப்பை மாற்றியமைத்துக் கொள்ளும் உரிமை அதற்கு உண்டு.

11. பரிசீலனைக் குழுவிடம் சமர்ப்பிக்கும் கதைகளுக்கு வெறும் எண்களே கொடுக்கப்படுமாதலால், எழுத்தாளர்கள் தங்கள் பெயரையோ, விலாசத்தையோ கையெழுத்துப் பிரதியில் குறிப்பிடக்கூடாது; விலாசமிட்ட ஒரு காகிதம் மாத்திரம் வைத்தனுப்புவதே சாலச் சிறந்தது.

12. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் முஸ்லிம் முரசு ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் முஸ்லிம் முரசு ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பரிசீலனைக் குழுவின் பெயர்கள் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

—மானேஜர்.

எழுதியவர் : மவ்லவி முஹம்மது யாகூப்கான்

தமிழாக்கம் : " நூர் "

இஸ்லாமிய சேனாவீரர்கள் தமது தோள் வலிமையால் உலகமெங்கும் பெயரும் புகழும் பெற்று விளங்கினர். மாட்சிமைமிக்க மன்னாதி மன்னர்களும், மாபெரும் தளகர்த்தர்களும் இவ்வீரர்களது பெயரைக் கேட்டவுடனேயே உடல் நடுங்கினர். அவ்வண்ணமே, அரேபியாவின் எதிரே அலை கடல்களுக்கப்பாலிருந்த இராஜ்யங்களும் இது குறித்து அதுகாலைக் குலை நடுக்கமெடுத்துக் கிடந்தன. அவ்வல்லரசுகள் யாவும் இஸ்லாமிய இராஜ்யத்தை இத்தரணியினின்றும் இல்லாதொழிக்க இடைவிடாது சதி புரிந்து வந்தன. புகழ்மிக்க கலீபா உமர் (ரலி) அவர்களது ஆட்சியின் போதுதான் எகிப்து நாடு இஸ்லாமியக் கொடியின் கீழ் வந்தது. அன்று தொட்டே முஸ்லிம்களை ஆப்பிரிக்க மண்ணினின்றும் அகற்றி விடுதற்கெனத் திரிப்போலியின் மன்னரான கிரிகரி (Gregory) என்பார் இஸ்லாமிய இராஜ்யத்தின் எல்லைப்புறங்களை ஆக்கிரமித்துச் சூரையாடி வந்தார். இவ்வாறான "கொரில்லா"ப் போர் முறைகளால் முஸ்லிம்களைப் பணிய வைக்கவோ வெருட்டியடிக்கவோ முடியாதென்பதைக் கண்ணுற்ற பல சின்னஞ் சிறு நாடுகளின் குட்டியரசர்கள், கிரிகரியின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு இஸ்லாத்திற்கெதிரான அணிவகுப்பொன்றை ஏற்படுத்திக்கொண்டனர்.

இஸ்லாத்திற்கெதிரான இத்தகைய முஸ்தீப்புகளைக்கண்டு முஸ்லிம்கள் வாளாயிருந்து விடுவதற்கில்லை. எகிப்து நாட்டில் இஸ்லாத்திற்கு ஏற்படப்போகும் அபாயத்தின் அறிகுறி பற்றிய செய்தியானது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைநகரான மதீனாவிற்கு எட்டியது. அப்பொழுது கலீபாவாகவிருந்த உதுமான் (ரலி) அவர்கள் உடனே படைதிரட்டலுக்கு உத்தரவு பிறப்பித்தார்கள். இதைக் கேட்ட அராபியத் தீபகற்பத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்த மக்கள் ஓடோடியும் மதீனா வந்து இஸ்லாமியக் கொடியின்கீழ் ஒன்று கூடினர். ஒட்டகைகளின்மீது வந்தோரும், குதிரைகளில் ஏறி வந்தோரும், கால் நடையாகவே

வந்தோரும் ஆங்குக் குழுமி நின்றனர். தலைநகருக்கு வெளியே ஒரு பெருங் கூடாரக் காலனியே உதயமாகி விட்டது! பரந்து கிடந்த அச்சம வெளிப் பிரதேசத்தில் அன்று ஜும்ஆத் தொழுகை முடிந்தவுடன் கலீபா அவர்கள் எழுந்துநின்று, போர்க்களம் புகவிருக்கும் சைன்யத்தை நோக்கிப் பின்வருமாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் :

" இஸ்லாமிய வீரப் புதல்வர்காள்! நேர்மையும் நியாயமும் நிறைந்ததொரு படையெடுப்பிற்கென இப்பொழுது நீங்கள் புறப்பட்டுச் செல்லுகின்றீர்கள். பேராசையை விட்டொழிப்பீர்களாக! பேராசை மக்களை மாக்களாக்குகின்றது. போருக்கென நீங்கள் வாளேந்து முன்னர் எதிரிகளைச் சமாதானத்திற்கு அழைப்பீர்களாக! இஸ்லாத்திற்கெதிராக அவர்கள் விஷமம் புரிவதை நிறுத்திக்கொள்ள மறுத்துவிட்டால் மட்டுமே நீவிர் வாளேந்த வேண்டும். இவ்வாறு நீங்கள் நடந்துகொண்டால் உங்களுக்கு இறைவன் நிச்சயம் வெற்றியைத் தருவான்.

" வெற்றிகொண்ட வீரர்களாக நீங்கள் நகரத்தில் புகும்போது, ஆங்குள்ள இல்லங்களுக்குத் தீவைப்பதோ, விளை பயிர்களை நாசஞ் செய்வதோ, பழந்தரும் மரங்களை வெட்டி வீழ்த்துவதோ, [சென்ற உலகயுத்தத்தின்போது மலேயாவில் வெற்றிவீரர்களாய்ப் புகுந்த ஜப்பானியர்கள் இளநீர்ப் பருகுதற்கெனத் தென்னை மரங்களை அடியோடு வெட்டி வீழ்த்தி அந்நாட்டைப் பாழாக்கிய சம்பவம் இங்கே நம் ஞாபகத்திற்கு வருகின்றது. —ஆசிரியர்] அறவே கூடாவென்பதை நீங்கள் உங்களது மனத்திலிறுத்திக் கொள்ளுவீர்களாக! இந்நாச வேலைகளை இறைவன் சிறிதும் விரும்புவதில்லை. எச்சந்தர்ப்பத்திலும் மாதர்களையும் முதியோர்களையும் சிசுக்களையும் பலவீனர்களையும் நோயாளிகளையும் துன்புறுத்தாதீர்கள்; அவமானஞ் செய்யாதீர்கள். இவ்வண்ணம் இவர்கள் பால் முறை தவறி நடந்துகொள்ளுவது கொடுமையான குரூரச் செயலாகும். கொடுங்கோலர்களுக்கு இறைவன் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை.

" இஸ்லாமிய வீர சிகாமணிகாள்! அல்லா(ஹ்)வை எப்பொழுதும் ஞாபகத்திலிருத்திக் கொள்ளுவீர்களாக! உங்களுக்குள்ளேயே ஒருபோதும் பிளவுபட்டுவிடாதீர்கள்! இதில் சர்வ எச்சரிக்கையுடனிருப்பீர்களாக! நீங்களனைவரும் ஒரே மனிதனை போன்று உறுதியுடன் நிற்பீர்களாக! பொறாமை, கர்வம், அசூயை ஆகிய கெட்ட குணங்களினின்றும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவீர்களாக!

திரிப்போலியின் இளவரசி

இஸ்லாத்தின் பண்பாடுகளை விளக்கும் பல்வேறு சரித்திரக் கதைகளை அழகான ஆங்கில நடையில் எழுதிப் புகழ்பெற்ற மௌலவி முஹம்மது யாகூப்கான் அவர்களின் " திரிப்போலியின் இளவரசி " என்னும் இஸ்லாமிய சரித்திரக் கதை, இந்த இதழில் ஆரம்பமாகின்றது. ஆசிரியரது ஆங்கில நடையின் எழிலும் இனிமையும் அப்படியே விளங்க, இதனை வழக்கம்போல் அருமையாகத் தமிழாக்கம் செய்துள்ளார். அன்பர் "நூர்". இதற்கு முன் முரசில் வெளியிடப்பெற்ற யாகூப்கானின் இஸ்லாமியக் கதைகளுக்கு ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்திருக்கின்றன. இதில் துவங்கும் புதிய கதையும் நேயர்களின் இதயங்களைக் கவரும் இணையற்ற எழுத்தோவியமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இறைவனது மண்ணின்மீது இறுமாப்புடன் நடந்து கொள்ளாதீர்கள். அகந்தையுடையோரை ஆண்டவன் நேசிப்பதில்லை.

"இஸ்லாமிய வீர திலகங்களே! உங்களது தளகர்த்தராக அப்துல்லா என்பாரை நியமனஞ் செய்துள்ளேன். பய பக்தியுடன் அன்னாருக்கு அடங்கி நடப்பீர்களாக! உங்களிடையே எண்ண பேதம் ஏற்படுங் காலத்தில் நீங்களனைவரும் ஒன்றுகூடி வாக்கெடுத்துப் பெரும்பான்மையோர் முடிவுப்படி நடந்து கொள்ளுங்கள்!"

பின்னர், கலீபா அவர்கள் அப்துல்லாவின் பக்கல் நோக்கிப் பின்வருமாறு புத்தி புகட்டினார்கள் :—

"ஏ, அப்துல்லாஹ்! உம்மை இப்படையின் தளகர்த்தராக நியமித்துள்ளேன். இஃது ஒரு புனிதமான ஒப்படைப்பாகும். இதனை நீர் ஒழுங்குடன் காப்பாற்றித் தருவதில் எனக்கு ஊறு விளைவித்து விடாதீர். எதிரியின் நாட்டையடைந்தவுடன் நீர் அவர்களுக்குச் சமாதான அழைப்பு விடுவீராக! அவர்கள் சமாதானத்திற்கிணங்கி ஒப்பந்தம் பேச முன் வருவரேல் அப்பொழுது அவர்கள் உமது உடன் பிறந்த சோதரர்களே யாகி விடுகின்றனர்! நீர் நீட்டும் சமாதானக் கரங்களை அவர்கள் உதறித் தள்ளி விடுவாராயின், அப்பொழுதுமட்டுமே நீர் வாளேந்த வேண்டும். உமது செயல் முறைகளில் அடிக்கடி உமது தோழர்களையுங் கலந்து கொள்ளுவீராக! இறைவனை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவீராக!"

சிரமம் நிறைந்த வெகு நீண்ட பிரயாணத்திற்குப் பின்னர் இஸ்லாமிய சைன்யமானது திரிப்போலியின் எல்லையை அடைந்தது. கிரிகரியின் இராஜ்யமானது தன்ஜஹ் (Tangier) வரை பரவிக் கிடந்தது. அவர் தமது தலைநகரான ஸபியா (Sophetule) ஐ மிகப்பலமாக அரண் செய்து வைத்திருந்தார். அவரது மாளிகையானது அழகிற்கும் கம்பீரத்திற்கும் கண் கவர்ச்சிக்கும் வேலைப்பாட்டிற்கும் ஒப்புயர்வற்று விளங்கியது. தனது நாட்டைச் சுற்றிலுமிருந்த அடங்காப்பிடாரிகளான சுதேச மக்களையெல்லாம் தனது வாள் முனையின் வலிமைகொண்டு அவர் அடக்கியாண்டு வந்தார்.

திரிப்போலியின் எல்லையருகே இஸ்லாமிய சேனாவீரர்கள் முகாம் செய்திருந்தனர். சமர்புரிய வாளையுருவு முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் துவங்க அவர்கள் யத்தனஞ் செய்து கொண்டிருந்த போதே, நாறு புறங்களினின்றும் எதிரிகளால் சூழப்பெற்றனர்; போர் முரசமொலித்தது! முஸ்லிம்களும் யுத்த சன்னத்தராயினர்! போர் துவங்கிவிட்டது! திரிப்போலி நகரம் கடற்கரையருகிலமைந்திருந்தது. இத்துறை முகத்தின் வாயிலாகவேதான் வெளிநாட்டு வாணிபம் யாவும் நடைபெற்று வந்தன. யுத்தம் பற்றிய செய்தியானது காட்டுத் தீயென எங்கும் விரைவிற் பரவிற்று. கிரிகரியின் நேசப்படைகள் யாவும் கடல் மார்க்கமாகத் திரிப்போலியின் உதவிக்கு ஓடி வந்து குழுமின. முஸ்லிம்களின் மீது திடீர்த்தாக்குதல் புரிவதே அவர்களது திட்டமாயிருந்தது. ஆயினும், முஸ்லிம்களது தளகர்த்தரான அப்துல்லாஹ் என்பாரோ மிக்க விழிப்புள்ள உஷார்ப் பேர்வழி! நாற்புறங்களிலும் அவர் வேவுபார்க்கும் கோஷ்டியினரை நிறுத்தி வைத்திருந்தார். இவ்வேவு கோஷ்டியினர் அவ்வப்போது எதிரிகளின் நடமாட்டங் குறித்துத் தமது தளகர்த்தருக்குத் தகவல்களைத் தந்து வந்தனர். கடல்

கடந்து வந்த எதிரிகள் திரிப்போலி யின் மண்ணை மிதித்த அக்கணமே முஸ்லிம் சேனையினின்றும் ஒரு பகுதியானது அவ்வெதிரிகள் மீது திடீரெனப் பாய்ந்து அவர்களைச் சிதறியோடச் செய்தது. அவர்களிற் பெரும்பான்மையோர் கடலிலே மூழ்கி மாண்டனர். மற்றையோர் போர் நடவடிக்கையில் வீழ்ந்து மடிந்தனர். மறுநாட்காலையில் இஸ்லாமிய சேனை யானது திரிப்போலியின் கோட் டையை முற்றுகையிட்டது. ஆனால் அப்பொழுதே அக்கோட்டை பிடிபட வில்லை. திரிப்போலியின் மன்னரான கிரிகரி என்பார், தானே நேரில் பெரும்படையொன்றைத் திரட்டிக் கொண்டு, திரிப்போலியைக் காப் பாற்ற வரப்போவதாய் முஸ்லிம்கள் கேள்வியுற்றனர்.

மன்னர் கிரிகரி இப்போரில் பங்கு பெற நேர்ந்த சூழ்நிலைக்குப் பின் வரும் சம்பவங்களே காரணமாயிருந் தன :

ஒரு தினம் மன்னர் கிரிகரி தனது அரண்மனையின் தர்பாரில் வீற்றிருந்த போது, ஒரு தூதுவர் ஓடோடியும் வந்து, மன்னரின் முன் முழந்தாளிட் டுப் பணிந்தெழுந்து, தனது வலது கரத்தை உயர்த்திப் பின்வருமாறு பேசலானார் :

“ மன்னர் பெருமானே ! அரேபி யப் பாலைவனத்தினின்றும் நம் தேசத் திற்கு அம்மிலேச்சர்கள் வந்துள்ள தானது நம்மீது பேரிடி விழுந்ததே போலாயிற்று ! திரிப்போலி நகரம் அவர்களால் முற்றுகையிடப்பெற்று விட்டது ! உங்களது உடனடியான உதவி அந்நகரத்திற்குக் கிடைக்கா விடின் திரிப்போலி மக்களில் ஒருவ ரேனும் உயிர் தப்பமுடியாது !

கிரிகரி :—நீர் எங்கிருந்து வருகின் றீர் ? உம்மை எம்மிடம் அனுப்பி வைத்தவர் எவர் ?

தூதுவர் :—மாட்சிமைமிக்க மன் னர் பெருமானே ! நான் திரிப்போலி நகரவாசி ; நான் அந்நகர மாந்தரால் இங்குத் தங்களிடம் அனுப்பி வைக் கப் பெற்று வந்தேன்.

கிரிகரி :—உமது கூற்றின்படியே உமது நகரம் முற்றுகையிடப்பட்டி ருக்க வில்லையா ? அம் முற்றுகை யிடப்பெற்ற நகரிலிருந்து நீர் இங்குத் தப்பி வந்தது எவ்வாறு சாத்தியமா யிற்று ?

தூதுவர் :—அரசர் திலகமே ! நான் அங்கிருந்து வந்தபோது என துயிரைக் கையிலேந்திய வண்ணமே வரநேர்ந்தது. நகரிலிருந்து வெளியே ஓடும் பெருஞ் சாக்கடையொன்று ளது. நள்ளிரவில் நான் இச்சகதி நிறைந்த சாக்கடைப் பாதையி னூடே நகர்ந்து நகர்ந்து வந்து வெளியேறினேன். அச்சாக்கடை மார்க்கமானது மிகப் பயங்கரமாயும் சகிக்கவியலாத துர்நாற்றம் நிறைந் தாயுமிருந்தது. அதிற் புகுந்து வருவதற்குள் எனது உடைகளெல் லாம் நாசமாகிவிட்டன. எனினும் பொழுது புலருவதற்கு முன்னரே நான் எதிரிகளின் கண்களிற்படாமல் வெற்றிகரமாக வெளியேறி இங்கு வந்துவிட்டேன்.

கிரிகரி :—இம்மிலேச்சர்களின் துணிபுதான் என்னே ! அரேபியா எங்கே ! ஆப்ரிக்கா எங்கே ! எங்கி ருந்து எங்கு நோக்கிப் படையெடுப் பது ! ஈதென்ன விளையாட்டா?

அங்கிருந்த ஒருவர் :—அவர்களது மதத்தின் மீது அவர்களுக்குள்ள ஆழ்ந்த பற்றுதல் காரணமாக அவர் கள் எவ்வித அபாயத்திற்கும் அஞ்சுவ தில்லை!

மற்றொருவர் :—இவரது கூற்றை ஏற்கவேண்டாம் அரசே! அவர்களை இங்கு இழுத்து வந்தது அவர்களது மதப் பற்றன்று; கொள்ளையடிப்பதிலும் சூரையாடுவதிலும் அவர்களுக்குள்ள ஆர்வமே இப்படையெடுப்பின் காரணமாகும்!

கிரிகரி :—அன்னை மேரியின் மீது ஆணையாக! அவர்களின் முடிவு காலமே அவர்களை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது போலும்! அவர்களில் ஒருவரேனும் தமது தாயகத்திற்கு உயிருடன் திரும்பிச் செல்ல இயலாது!

அங்கிருந்த ஒரு பாதிரியார் :— நான் எகிப்திலும் அரேபியாவிலும் சிலகாலம் தங்கியிருந்துள்ளேன். அம் முஸ்லிம்களை நான் அதிகம் அறிவேன். அவர்களை வெறும் கொள்ளையர்களென அலட்சியம் செய்து விடாதீர்கள். அவர்கள் பயங்கரமிக்க செயல் வீரர்கள்! அவர்களுடன் கடும் போர்புரிய நீங்கள் தயாராயிருத்தல் வேண்டும்.

கிரிகரி :—இவ்வண்ணம் பீதியூட்டி எம்மை மனச்சோர்வடையச் செய்யாதீர்! இன்றே, இக்கணமே, யானே நேரில் போர் முனைக்குப் புறப்படுகின்றேன்; எனது சேனைக்கு யானே தலைமை ஏற்றுச் செல்லுகின்றேன். அன்னை மேரியின் மீது ஆணையாக, இரத்த வெறி பிடித்தலையும் இவ்வேட்டை நாய்களை அடியோடு வெருட்டியடிக்கா முன்னர் நான் எனது அரண்மனைக்குத் திரும்புவதில்லையெனச் சூளுரை கூறுகிறேன்.

படையெடுப்பாளர்களை அந்நாட்டினின்றும் அடியுடன் வெருட்டியடிப்பது, இன்றேல் அம் முயற்சியில் மடிவது என்ற திரிப்போலியின் கிறிஸ்தவ மன்னரான கிரிகரியின் சூளுரையும் தீர்மானமும் அரச மன்றத்திலிருந்தனைவருக்கும் பேருக்க

மும் பெருத்த உற்சாகமூ மூட்டிவிட்டன. திரிப்போலியிலிருந்து தமது சோகக் கதையுடன் ஓடிவந்த தூதுவரும் மிக்க நிம்மதிபெற்றார். பின்னர், அரசருக்கும் அத்தூதுவருக்கும் பின் கண்டவாறு பேச்சுக்கள் நிகழ்வுற்றன :

மன்னர் :—முஸ்லிம்களது சேனை பலங்குறித்து உமக்கு ஏதேனுந் தெரிந்திருக்க வேண்டுமென எண்ணுகிறேன்.

தூதுவர் :—ஆம், அரசே ! தெருவிற்பனையாளனே போன்ற வேடத்தில் பன்முறை நான் அம் முஸ்லிம்களது முகாம்களைச் சுற்றி வந்துள்ளேன்.

மன்னர் :—அவர்களது எண்ணிக்கை பற்றிய உமது மதிப்பீடு என்ன ?

தூதுவர் :—முப்பது முதல் நாற்பது ஆயிரத்திற்கு அதிகமில்லை அவர்களின் எண்ணிக்கை !

மன்னர் :—முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் ! பூ ! அவ்வளவுதானு! இத்துணை அற்பமானதும், அதுவும் ஒழுங்கற்றதுமான ஒரு சேனையுடன் அவர்கள் திரிப்போலியின்மீது படையெடுத்து வர அவர்களுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும் !

தூதுவர் :—எனது கூற்று முற்றிலும் உண்மைதான் அரசே ! அதைவிட அதிகமில்லை அவர்களது எண்ணிக்கை. ஒழுங்கு நியதியான சைன்யத்திற்குரியது ஒன்றுமில்லை அவர்களிடம். அவர்கள் ஒரு காட்டுமிராண்டிக் கூட்டத்தினரே தவிர வேறன்று. அவர்களிடம் ஒரேவிதமான உடுப்புக்கள் கூடக் கிடையா! அவர்கள் பல்வேறு வகையான ஆயுதங்களுடனும், பல்வேறு விதமான உடுப்புக்களுடனுங் காணப்படுகின்றனர்.

மன்னர் :—அட, அசடுகளா ! என்ன ஆச்சர்யம் ! கேவலம் இத்தகைய சிறு குழுவினர் திரிப்போலி போன்றதொரு தூரப் பிரதேசத்தின் மீது பாய்வதைப் பற்றிச் சிந்தித்தலும் சரியோ ?

பாதிரியார் :—அரசர் பெருமானே! இம் முஸ்லிம்களைக் குறித்து நான் அதிகமதிகம் அறிவேன். இவர்களிடம் முறைப்படி பயிற்சி பெற்ற சைன்யமோ, ஒழுங்கான ஆயுதங்களோ இல்லாவிடினும் இவர்களை அத்துணை இலேசாய்க் கருதி விடுதல் அறிவுடைமையன்று. இவர்கள் எஃகு உள்ளம் படைத்த மரபினர். இவர்கள் தீர யோசித்து ஒருவித முடிவுக்கு வந்து விடுவாரா[illegible], இவர்களிடம் தடுமாற்றமோ [illegible] ஒரு சிறிதும் காணப்படமாட்டாது; முன் வைத்த காலைப் பின்வாங்கார். எத்துணைப் பெருந் துணிச்சற் பேர் வழிகளாயினும் அவர்களது உள்ளத்தில் ஒருவிதக் கலக்கத்தையுண்டு பண்ணக்கூடிய மரணத்தை, அவர்கள் மலர் முகங்கொண்டு வரவேற்கின்றனர்! அவர்களது ஆசாரப்படி ஒரு முஸ்லிமின் மரணமானது அவனைச் சுவன லோகத்திற்கு அழைத்தேகும் வாசற்கதவாயமைந்துளது. இத்தகைய எதிரிகள் பால் நாம் சர்வ முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாவிடின் அது நமது மடைமையேயாகும்.

ஒருவர் :—சரி, அவ்வாறாயின் அதையுந்தான் பார்த்துவிடுவோமே! அவர்கள் நம்முடன் நேருக்குநேர் நின்று சமர் புரியும்போதுதான் அவர்களுக்குப் புத்திவரும் !

மன்னர் :—போர் முரசங் கொட்டட்டும் ! யுத்த பேரிகை முழங்கட்டும்! நமது துணிகரம் நிறைந்த போர் வீரர்கள் தயாராகட்டும் !

கிரிகரி மன்னருக்குப் பேரெழில் வாய்ந்த புத்திரியொருத்தியிருந்தாள். அவளது அழகும் துணிபும் அப்பகுதி களில் நிகரற்று விளங்கின. அவளது வலிவும் வனப்பும் பாரெங்கும் புக ழொளி வீசி நின்றன. அவளது தோள் வலியும் முகப்பொலிவுங் குறித்து அப்பகுதிகளில் கதை கதையாய்ச் சொல்லப் பெற்றுவந்தன. கிறிஸ்துவ இளவரசர்கள் பலரும், பிரபு குலப் புத்திரர்களும், உயர்குலக் கோமான்களும் அவளை மணந்து கொள்ள விழைந்தனர். யுத்த களங் களில் அவள் தனது தந்தையின் பக்கலில் நின்றுகொண்டே தனது வீர தீர சாகசச் செயல்களால் சேனு வீரர்களுக்குப் புத்துணர்ச்சி யூட்டு வதும், புது உற்சாகமளித்துக்கொண் டிருப்பதும் அவளது வழக்கமாயிருந்து வந்தது. ஆனுல் இம்முறை கிரிகரி போரிட நேரிடும் எதிரிகள், முன் போல் ஆபிரிக்க அப்பாவி சுதேசி களன்று. தான் எதிர்த்து நிற்க வேண்டிய எதிரிகளின் அசகாய சூரத்தனம் அரசருக்கு நன்கு தெரி யும். எனவே இப்போரில் தனது அழகிய ஆருயிர்ப் புதல்வியின் உயிரை ஆபத்தில் சிக்கவைக்க அவர் மிகவும் தயங்கினர். ஆனுல், இளவரசியோ தனது தந்தையின் எவ் விதப் புத்திமதிகளையும் காதுதாழ்த் திக்கேட்கத் தயாராயில்லை. ஆகவே, வழக்கம்போல் தானும் போர்க்களத் தின் மத்தியில்நின்றே பங்கு பெறு தல்வேண்டுமெனத் தனது தந்தை யிடம் வற்புறுத்திப் போர்க்களஞ் செல்லச்சித்தமாகிவிட்டாள்.

சரித்திராசிரியர்கள் தரும் புள்ளி விவரங்கள் கூறுவதே போன்று, சுமார் ஒரு லக்ஷத்துப் பதினைந்தா யிரம் போர் வீரர்களுடனும், தனது கண் கவர்ச் செல்வியுடனும் மன் னர் கிரிகரி மிக்க ஆடம்பரத்துட னும் ஆர்ப்பாட்டங்களுடனும் தனது தலைநகரிலிருந்து திரிப்போ லியை நோக்கிப் புறப்பட்டார்.

[அடுத்த இதழில் தொடரும்]

‘வழிகாட்டும் ‘ஒளிவிளக்கு’

M. R. M. அப்துர் ரஹீம் B. A.

இருள் மண்டிக் கிடந்த உலகிலே தங்களின் உதயத் தால் ஒளி நிரப்பி மேன்னதமடையச் செய்த அறிவு அரசர்களின் கருத்துக் களஞ்சியத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பொன்மொழிகள், ஆசிரியரின் கருத்துக்களா லும் விளக்கங்களாலும் மேலும் சிறப்புப்பெற்று மெருகு பெறுகின்றன இந்நூலில்.

மூவாயிரம் ஆண்டுகளில் மனிதன்பெற்ற அனுபவம், கண்ட முடிவுகள் எல்லாம் இன்றைய மனிதனின் வாழ்வு வழி எங்கும் சரவிளக்குகளென அணிவகுத்து நின்று, வழுக்குமிடங்கள் வரும்போதெல்லாம் தனியொளி வீசி மனி தனைக்காத்து நிற்கின்றன. அத்தகைய வழிகாட்டும் ஒளி விளக்கே இந்நூல்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு அணு 10.

அன்பு நூல் நிலையம்,

132, பிராட்வே, : : சென்னை-1.

நபிகள் நாயகம்

வாழ்வும் வாக்கும்

பெண்ணின் பெருமை

மனிதனின் பெருமையெல்லாம் அவனுடைய நல்லொழுக்கத்திலும் நேர்மையான வாழ்விலுந்தான் இருக்கின்றன.

“உங்களுள் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்தான் அல்லாஹ்வின் பார்வையில் அதிக கண்ணியம் வாய்ந்தவராயிருக்கின்றார்.”

(குர்ஆன், 49 : 13)

“உங்களிடையே வெகு சிறந்த ஒழுக்க முடையோர்களே உத்தமர்களாயிருப்பீர்கள்”

(ஹதீஸ், புகாரி 61: 23)

இஸ்லாமிய ஒழுக்க விதிகளிலே பெற்றோர்களிடம் நல்லவர்களாக நடந்து கொள்வதில் தான் ஒருவரின் நல்லொழுக்கமும் நற்பண்பும் உறுதிப்படுத்தப் படுகின்றன. முதலில் அன்னைக்கும், இரண்டாவதாக தந்தைக்கும் நல்லவர்களாக நடந்துகொள்கிறவர்களே அல்லாஹ்வின் அருட்கொடையைப் பெறுகின்றனர். “தாயின் பாதத்தடியிலே சுவர்க்கம் இருக்கிறது” என எம்பெருமானார் (ஸல்) இயம்பியுள்ளார்கள்.

அதிக அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் பெற்றோர்கள் என்பது பின்வரும் நாயக வாக்கிலிருந்து நன்கு உணரப் படும்.

அபூ ஹுறைரா கூறியதாக ஒரு ஹதீஸ் இருக்கின்றது:

அல்லாஹ்வின் தூதரிடம் ஒருவர் சென்று, “ஆண்டவனின் தூதரவர்களே! நான் யாரிடம் அதிகமதிகம் நல்லவனாக நடந்து கொள்ளவேண்டும்?” என்றார். அதற்கு நபிகள் திலகம், “உமது தாயாரிடம் என்றார்கள். “அப்புறம் யார்?” என்று அவர் கேட்டார். உடனே, “உமது தாயார்” என்றே உறுதியுடன் கூறினார்கள். பின்னும் அவர், “பிறகு யார்?” எனக் கேட்டார். “உமது அன்னை” என்று தான் மூன்றாவது தடவையும் மறுமொழி கூறினார்கள்! “அப்புறம் யார்?” என்று நாலாவது

தடவையும் அவர் கேட்டார். "பிறகு உமது தந்தை" என்று நாயகம் மறுமொழி கூறினார்கள். (புகாரி, 78 : 2)

பெற்றதாயின் பெருமையை விளக்கும் மற்றொரு நாயக வாக்கியமும் இருக்கிறது'

முஆவியா என்பவர், தாம் இராணுவத்தில் சேர்ந்து போர் புரிய விரும்புவதாகவும், அதற்காக நாயக மவர்களைக் கலந்தாலோசிக்க வந்திருப்பதாகவும் கூறினார். உடனே நபிபெருமான், "உமக்குத் தாயார் இருக்கிறார்களா?" என்று வினவினார்கள். ஆலோசிக்க வந்தவர், 'ஆம்' என்று பதில் கூறினார் உடனே நாயகம் (ஸல்), "அப்படியாயின் அவர்களிடம் போய்விடுங்கள். ஏனெனில், அவரது இரண்டு பாதங்களின் கீழேதான் சுவர்க்கம் இருக்கிறது" என்று இயம்பினார்கள்.

இதைப்போன்ற, பெண் குலத்துக்குப் பெருமை தரும் வேறு ஒரு பொன்மொழியை எவரும் கூறியதில்லை!

சத்தியத்துக்காகப் போர் புரிவதைவிட, பெற்ற அன்னைக்குத் தொண்டு செய்வதே சாலச் சிறந்ததென்பது நபிகள் நாதரின் கருத்து.

பெண்குழந்தைகளிடம் பெருமானார் (ஸல்) காட்டிய பரிவும் பேரன்பும் நிகரற்று விளங்கின.

"பெண் குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் அடையும் துன்பமும் துயரமும் நெருப்பின் கொடுமையிலிருந்து அவர்களை (பெற்றோர்களை)க் காப்பாற்றுந் திரையாக விளங்கும்" என்று எம் பெருமானார் (ஸல்) இயம்பியுள்ளார்கள்!

நாயகத்தின் அன்பு மனைவி ஆயிஷா பிராட்டியார் கூறியிருப்பதாக ஒரு ஹதீஸ் இருக்கின்றது:

"ஒரு பெண் தனது இரண்டு குமாரிகளுடன் தருமம் கேட்டு வந்தாள். ஆனால் அப்பொழுது என்னிடம் ஒரு பேரீத்தங்கனியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அதனை அவளிடம் கொடுத்தேன். அவள் அதைத் தனது இரண்டு புதல்விகளிடமும் பங்கிட்டுக் கொடுத்தாள். ஆனால் அவள்மட்டும் அதைத் தின்னவில்லை. பிறகு அவள் எழுந்து வெளியே போய்விட்டாள். அப்பொழுது நபிகள் திலகம் வந்தார்கள். அவர்களிடம் அதைப்பற்றி நான் கூறினேன். அதற்கு நாயகம் (ஸல்) பின் வருமாறு சொன்னார்கள் : (புகாரி, 24 : 10)

"இந்தப் பெண்குழந்தைகளுக்காக யார் ஒருவர் கஷ்டப்பட நேர்ந்தாலும் சரி, அவருக்கு அந்தப் பெண்கள் நெருப்பின் திரையாக இருப்பார்கள்."

"பெண்களின்மீது ஆண்களுக்குச் சில உரிமைகள் இருப்பதேபோல் ஆண்களின்மீதும் பெண்களுக்கு உரிமைகள் உண்டு."

(குர்ஆன், 2 : 228)

"உங்கள் மனைவிகளை நீங்கள் நல்ல முறையிலே சமத்துவமாக

வைத்திருங்கள்" (குர்ஆன், 2 : 229, 231) என்று இறைவனே தனது திருமறையில் முழங்குகிறான்.

"மனைவியிடம் மிக்க அன்பாயிருப்பவன் எவனோ, அவன்தான் மனிதருள் மிகச் சிறந்தவனாவான்" என்பது, மாநபி (ஸல்) அருளிய மணி மொழிகளில் ஒன்று. இதுபற்றி, அபூ ஹுறைரா அவர்கள் அறிவித்துள்ளதாக நபிகள் நாயகத்தின் பொன்மொழியொன்று இருக்கிறது :

"ஒழுக்கத்திலே மிகச் சிறந்தவர் எவரோ அவரே மூமின் (நம்பிக்கையாளர்) களுக்கெல்லாம் மகா மேலானவராயிருக்கின்றார். மேலும் மனைவிகளிடம் மிக்க அன்பாயிருப்பவர்களே உங்களுள் மிகச் சிறந்தவர்களாவீர்கள்". (திர்மிதீ, 10 : 11)

மனைவியர்மீதுள்ள அன்பிற்கு அடையாளமாக, அல்லாஹ்வின் தூதரவர்கள் தங்களின் வாழ்க்கைத் துணைவிகளுக்கு, வீட்டு வேலைகளில்கூட உதவி புரிந்தார்கள் என்பது, அவர்களின் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) வாயிலாக அறியக் கிடக்கின்றது.

"திருநபியவர்கள் வீட்டிலே இருந்தபோது என்ன செய்தார்கள்?" என்று ஆயிஷா (ரலி) அவர்களை ஒரு பெண்மணி கேட்டபோது, "அவர்கள் தமது மனைவிக்காக வீட்டு வேலையைச் செய்தார்கள்" என்று மறுமொழி கூறியுள்ளார்!

(புகாரீ, 10:44)

நபிகள் நாயகம் (ஸல்) தமது மனைவிகளுக்கு உதவியாக வீட்டு வேலைகளையும் செய்து வந்தார்கள் என்பதிலிருந்து, பெண்களுக்குப் பெருமானார் அளித்து வந்த பெருமையும் சிறப்பும் சொல்லாமலே விளங்கும்!

சொந்த வீட்டு வேலையைக் கவனிப்பதைக்கூட இழிவெனக் கருதும் இந்தக் கால 'நாகரிக' இளைஞர்களுக்கு நாயகத்தின் வாழ்வும் வாக்கும் ஒரு நல்ல உதாரணமாக விளங்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

இதைப்போல் பெண்களுக்குப் பெருமையும் உரிமையும், வாழ்க்கையில் சம அந்தஸ்தும் அளிக்கும் அநேக சம்பவங்கள் நபிகள் நாயகத்தின் வாழ்விலும் வாக்கிலும் பரந்து காணப்படுவதைப் பார்க்கின்றோம்.

புதிய புத்தகங்கள்

ஸையத் இப்ராஹீம் எம்.ஏ.எல்.டி. எழுதிய

உத்தமர் உமர் ரூ 1-0-0

பண்டிட் ஜெய்லானி, எம். ஏ. எழுதிய

ஜி. டி. நாயுடு விலை 4 அணா

ஸர். ஷண்முகம் செட்டியார் விலை 3 அணா

பாலயோகியின் 'பிரார்த்தனை' ஆங்கிலத்தில், "LIGHT OF DIVINITY" விலை 8 அணா.

தபால் செலவு தனி

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே, சென்னை-1.

இங்கிலாந்திலே இஸ்லாம்

இத்ரீஸ் அலீ ஷா

★

பிரிட்டனில் முஸ்லிம்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது என்பதை நான் நன்கு உணர்ந்து வருகிறேன். மேலும், நான் ஒரு வெளிநாட்டு நிருபரா யிருப்பதால், பிரிட்டனைப் பற்றி யும் அங்கு வாழும் முஸ்லிம் பெருமக்களைப்பற்றியும் அநேக உண்மைகளை அறிந்து வருகி றேன்.

இன்று பிரிட்டன் முழுவதி லும் நாற்பதாயிரம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். மாணவர் களாகவும் வியாபாரிகளாகவும் இந்த அநேகர் இருக்கின்றனர். பெரும்பாலோர் கப்பல் தொழி லிலிருந்து டாக்டர் தொழில் வரை ஈடுபட்டுள்ளனர். இவர் களில் அநேகரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஸோமாலியர், துருக்கியர், ஆப் கானியர், இந்தோனேஷியர் ஆகிய இவர்கள் பிரிட்டனின் பொருளாதார வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி, சம உரிமை யுடன் இஸ்லாமிய வாழ்க்கையே நடத்தி வருகின்றனர்.

இஸ்லாமியப் பிரச்சாரக் குழு ஒன்றின் தலைவரை நான் சந்தித் துப் பேசிக்கொண்டிருந்தபோது பிரிட்டனில் நிலவும் மத சுதந்த ரத்தைப்பற்றி அவர் வெகுவாகப் புகழ்ந்து பேசினர்: "பிரிட்டிஷ் அரசியலாரின் தாராளத் தன்மை யினுல்தான் கடந்த நூற்றண்டிலி ருந்து இன்றுவரை, பிரிட்டனில் இஸ்லாமியப் பிரசாரக் குழுக் களும், மஸ்ஜிதுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. இருபத்து மூன்று முஸ்லிம் சங்கங்கள், பல வாசகசாலைகள், ஒன்பது மஸ்ஜிது கள், இரு இஸ்லாமிய பிரசாரக் குழுக்கள், இவ்விதமாக பிரிட்ட னில் இஸ்லாமிய வாழ்வு விரிவ டைந்திருப்பது பிரிட்டிஷாரின் மத தாராளத் தன்மையினுல் தான்" என்று அவர் கூறினர்.

சமீபத்தில் வேல்ஸ் மாகாணத் தில் கார்டிப் என்னும் ஊரிலுள்ள தெருக்களில் ஒரு அபூர்வமான காட்சியைக் காணும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அங்கிருந்த "நூருல் இஸ்லாம்" என்னும் மஸ்துக்கு ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றுவதற்காகத் திரள் திரளாக வந்துகொண்டிருந்த அந்த முஸ்லிம் பெருமக்களின் காட்சி, என்றுமே மறக்க முடியா தது. பிரிட்டனில் வாழும் முஸ் லிம்களிற் பெரும்பாலோர் இந்த கார்டிப் நகரில்தான் உள்ளனர்.

அங்குள்ள முஸ்லிம்களின் தலைவர் ஷேக் அப்துல்லாஹ் என்பவர், பிரிட்டனில் வாழும் முஸ்லிம்கள்பற்றிய பல முக்கியத் தகவல்களைத் கொடுத்தார்: "நாங் கள் பிரிட்டிஷாருக்குத் தூர தேசத்து மக்கள்தான்; ஒரு வரை ஒருவர் புரிந்துகொள்ளா

மலே அநேக ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறோம். ஆனால் கடந்த உலக மகாயுத்தம் எங்கள் இரு சாராருக்கிடையேயிருந்த இடைவெளியை நிறைத்து விட்டது. யுத்த காலத்தில் எங்கள் எல்லோரையும் நோக்கித்தான் அபாயம் வந்தது. ஆகவே, அதன் பிறகு நாங்கள் மிக அன்னியோன்னியமாகவே வாழ்ந்து வருகிறோம்" என்று அவர் கூறினார்.

லண்டனிலிருந்து 30 மைல் தொலைவில் **வோக்கிங்** என்னுமிடமிருக்கிறது. இங்கு 'ஷாஜஹான் மஸ்ஜித்' என வழங்கும் பள்ளிவாயில் ஒன்றும், அதைச் சேர்ந்த இஸ்லாமியப் பிரசாரக் குழுவினரின் காரியாலயமுமிருக்கின்றன. இதற்குச் சற்று அருகாமையிலுள்ள **புட்னி** என்னுமிடத்திலும் ஒரு பள்ளிவாயில் இருக்கிறது. லண்டனின் கிழக் கோடியிலே "ஜமீயத்துல் முஸ்லிமீன்" என்ற ஓர் இஸ்லாமிய ஸ்தாபனம் அமைந்துள்ளது. இங்கு அழகிய சிறு மஸ்ஜித் ஒன்றும், அத்துடன் முஸ்லிம் சிறுவர்கள் இஸ்லாமியக் கல்வி கற்பதற்கான மத்ரஸா ஒன்றும் உள்ளன.

இந்த எல்லா முஸ்லிம் ஸ்தாபனங்களையும் சென்று பார்த்து, அங்குள்ளோரிடம் நான் விவாதங்கள் நடத்தியபோதெல்லாம், லண்டனில் நிர்மாணமாகவிருக்கும் மஸ்ஜித் ஒன்றைப்பற்றிக் கூற யாரும் மறக்கவில்லை.

1940-ம் வருடத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் முஸ்லிம் நாடுகளுக்கென ஒரு இடத்தை அன்பளிப்பாகக் கொடுத்தனர். லண்டனில் முக்கிய இடமான ரீஜண்ட் பார்க்கில் அமைந்துள்ள அந்த அன்பளிப்புப் பிரதேசம் முஸ்லிம்களுக்கு மிக உதவிகரமாக அமைந்துள்ளது. 'ரீஜண்ட் லாட்ஜ்' என்ற இடமும், அதைச் சுற்றிப் பரந்த நிலப்பரப்பும் கொண்ட அந்த ரீஜண்ட் பார்க், ஒரு லக்ஷம் பவுன் மதிப்பு உடையது (அதாவது பதினன்கு லக்ஷம் ரூபாய்). அவ்விடத்தை, இஸ்லாமியக் கலாசாரப் பிரசார ஸ்தாபனமாகவும், முஸ்லிம்களின் விசேஷ நாட்களைக் கொண்டாடும் இடமாகவும், தொழுகை ஸ்தலமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். சில வசதிக் குறைவுகளினால் அவ்விடத்தில் புதிய மஸ்ஜித் ஒன்று கட்ட வேண்டிய வேலை தடைபட்டு நின்றது. சமீப காலமாக அம் முயற்சி துரிதமாகச் செயல்படத் துவங்கியுள்ளது. இந்தோனேஷிய ஸ்தானீகராக பிரிட்டனிலிருக்கும் டாக்டர் ஸுபாந்திரியோ அவர்கள் உட்பட அநேகர் இந்த மஸ்ஜிதுக்கான 'டிரஸ்டி'க் குழுவிலே நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்டிடத்துக்கான அமைப்பு தயாராகி, டிரஸ்டிகளின் சம்மதத்துக்குக் காத்திருக்கிறது. இன்னும் சில வாரங்களில் கட்டிட வேலை ஆரம்பமாகிவிடும்.

ஆகக்கூடி, ஐரோப்பிய நாடுகளெல்லாவற்றையும்விட, பிரிட்டனில் இஸ்லாம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது

நடிப்புத் தொழில்!

(மன்னார்குடி எம். முஹம்மது யூஸுப், பாவலர்)

அறுசீர் ஆசிரிய விருத்தம்

1. உலகிற் சிறந்தோர் உண்மையுளோர்;
 ஒருபொய் சொல்லார்; உறுதியுளோர்;
விலகிச் செல்லும் தீங்கினிலே
 விழியைச் செலுத்தா நன்னெறியோர்;
பலபேர் செய்தார் என்பதற்காய்ப்
 பாபஞ் செய்யாப் பண்புடையோர்;
நலஞ்சேர் இவரே முஸ்லிம்கள்;
 நடிப்பு வேண்டாம் நம்மவரே!

2. தாயைப் பேணிக் காத்திடுவீர்
 தந்தைக் குதவி செய்திடுவீர்!
வாயைப் பேணிப் பேசிடுவீர்!
 வசவு மொழியைத் தவிர்த்திடுவீர்!
தீயைவைத்துப் புகைபிடித்தே
 தெருவில் நின்று மயங்காதீர்!
நாயைக் காண்பீர் நன்றியினில்
 நடிப்பு வேண்டாம் நம்மவரே!

3. வேத மொழிபோல் நடந்துய்வீர்!
 வேண்டும் நன்மை பலபுரிவீர்!
நீதஞ் செய்தே வாழ்ந்திருப்பீர்!
 நிலையா உலகில் நெறிநடப்பீர்!
போதம் நிறைந்த இஸ்லாத்தின்
 புதுச்சீர் திருத்தம் புரிந்தநபி
நாதர் தமையே பின்தொடர்வீர்!
 நடிப்பு வேண்டாம் நம்மவரே!

4. கற்றோர் செய்யுங் காரியத்தைக்
 கருத்தாய் மற்றோர் கண்டெடுப்பார்;
மற்றோர் நன்றே செயவேண்டின்
 மதித்தே கற்றோர் திருந்திடுவீர்!

கற்ருேர் நடித்தே ஏய்த்துவந்தால்
காலங் கோடி கடந்திடினும்
நற்ருெண் டறியார் திருந்துவரோ?
நடிப்பு வேண்டாம் நம்மவரே !

5. புல்லர் முஸ்லிம் போல்நடிப்பார்;
பொய்வஞ் சகமே தினம்புரிவார்;
வல்ல இறையைத் தொழுதறியார்;
வளமாய் எழுதிப் பேச்செறிவார்;
மெல்லத் திருந்தச் சொல்லிடிலோ
"மேதை நீயோ?" என்றெதிர்ப்பார்;
நல்ல முஸ்லிம் இவர்தாமோ !
நடிப்பு வேண்டாம் நம்மவரே !

6. மடிப்புக் குலேயா உடையுடுத்தி
மாற்ருர் போலே திரிவோரே !
துடிப்பு வேண்டும் பொறுப்புடனே
துயரந் தீரும் வழியுமதே;
படிப்பு மட்டும் எதற்குதவும்?
படித்த படியே நடந்துயர்வோம்;
நடிப்புத் தொழிலே விலக்கலதால்
நடிப்பு வேண்டாம் நம்மவரே !

7. மற்ருேர் பேச்சில் அவர்கொள்கை
மணக்கக் கண்டோம்; பல்லாண்டு
கற்ற முஸ்லிம் சிலர்மொழியில்
காணேும் இஸ்லாம் வாசனேயே !
முற்றும் முஸ்லிம் வாலிபர்கள்
முனேந்தால் செயலில் முழுவுலகும்
நற்ற வத்தில் மிளிர்ந்தொளிரும்
நடிப்பு வேண்டாம் நம்மவரே !

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லா வித படை, சொரிசிரங்கு, கக்கூஸ்பத்து, அரிப்பு, வண்டுக்கடி, சேற்றுப்புண், எச்சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

சிறிய சைஸ் பாட்டல் 1க்கு விலை அணு 0-6-0
பெரிய ,, ,, ,, ,, 0-12-0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை, S. Ry.

மலேயா (பினங்கு ஏஜென்ட்)

R. A. அகமதுஷா முகம்மது சுல்தான் & Co.,
101, பினங்கு ஸ்டிரீட், பினங்கு

மலேயா (சிங்கப்பூர் ஏஜென்ட்)

A. சையத் முஹம்மது கம்பெனி
178, Cross Street, சிங்கப்பூர். டெலிபோன் நெ. 26916

இலங்கை (கொழும்பு ஏஜென்ட்)

M. C. A. ஹமீதா & Co.,
20, Dam Street, Colombo.

இலங்கை (நீர்கொழும்பில் கிடைக்குமிடம்)

ஏ. எம். எல். அலியா மரைக்கார் அன் ஸன்ஸ்,
பிரபல மருந்துக்கடை,
160, மெயின் வீதி, நீர்கொழும்பு.

படித்துப் பாருங்கள்!

வழிகாட்டும் ஒளி விளக்கு

நூற்றுக்கணக்கான பழமொழிகளும் அவற்றிற்கான விளக்கவுரைகளும் இரத்தினச் சுருக்கமாக இரண்டிரண்டு பக்கங்களில், இனிய தமிழிலே எளிய நடையில் அமைந்து, அறிவுக் கருவூலமாக விளங்குகிறது இச் சிறு நூல், புத்தகம் சிறியது தான்; 120 பக்கங்களே உள்ளன. எனினும் ஆயிரம் பொன் பெறக் கூடிய அபூர்வமான அறிவுரைகள் நிறைந்து, வாலிபர் வயோதிகர், ஆடவர் பெண்டிர், மாணவர் மாணவிகள் அனைவர்க்கும் வாழ்க்கையில் வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்கிறது இந் நூல்.

இத்தனைப் பழமொழிகளையுங் பொன்னுரைகளையும் இதன் ஆசிரியர் எங்கிருந்துதான் கற்ருரோ என்று, படிப்பவர் வியப்புறுமாறு பற்பல நாடுகளிலும் வழங்கும் பழமொழிகளும் பொன் மொழிகளும் ஏராளமாக எடுத்தாளப்படுகின்றன இந் நூலில். பெரியோர்களின் பொன்மொழிகளையும் உலகப் பழமொழிகளையும் எடுத்துக் கூறிவிட்டு அவற்றிற்கு விளக்கம் தருவதுடன் மட்டும் இதன் ஆசிரியர் சும்மா இருந்துவிடவில்லை. அவைகளை யொட்டித் தமது மணி மணியான கருத்துக்களையும் ஆங்காங்கே அள்ளித் தெளித்து, படிப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகின்ருர். உதாரணமாக, 'விதி வலிதா? மதி வலிதா' என்ற பிரச்னைக்குப் பதில் சொல்லும்போது, "விதிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம், மதிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்; எல்லாம் விதி போல் தானே நடக்கும் என்று, வேலை செய்யாமல் முழங்காலைக் கட்டிக் கொண்டு மிருக்கவேண்டாம்; எல்லாம் உன்னுடைய அறிவுத் திறமையால் ஆகுமென்று வீராப்புடன் திரியவும் வேண்டாம். ஆண்டவன் நமக்கு நல்ல விதியைத்தான் விதித்திருப்பான் என்ற நம்பிக்கையுடன் அவன் அருளில் நம்பிக்கை வைத்து, அவனிடம் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றித்தருமாறு பிரார்த்தித்தவண்ணம் செயலாற்றுங்கள்" என்று கூறுகிருர்.

இதைப்போல் இன்னும் எத்தனையோ அறிவுரைகள்! திருமணம் என்ருல் என்ன? இதைப்பற்றி இரண்டே பக்கங்களில் உள்ள விஷயந்தான் எவ்வளவு மகத்தான உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன! பக்கத்துக்குப் பக்கம் நகைச்சுவையுள்ள நல்லுரைகளுக்கும் குறைவில்லை.

'நன்மக்களைப் பெறுவது எங்ஙனம்? பேசுந்தன்மையை மனிதனுக்கு அளித்தது எதற்காக? யாருக்கு எவ்வாறு ஆலோசனை கூறுவது?' என்பன போன்ற சுமார் 60 தலைப்புக்களில் நூற்றுக்கணக்கான அறிவுரைகளைக் கூறி, மக்களின் அறிவும் பண்பாடும் ஆற்றலும் ஓங்கும் வகையில் இந்த ஒளி விளக்கை அளித்திருக்கின்ருர் ஆசிரியர் அப்துர் ரஹீம். விலை ரூ. 1-8-0, யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 155/156 அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

நேர்வழி நடந்த கலிபாக்களின் வரிசையிலே 5–வது கலீபாவாக மதிக்கப்பெறும் உமர்–பின்–அப்துல் அஜீஸ் அவர்களின் வ ர லா று விறுவிறுப்பான நடையில், கதை சொல்லுவதுபோல் கவர்ச்சியுள்ளதாக அமைந்திருக்கிறது, இதில் இஸ்லாமிய ஆட்சியின் சிறப்பியல்புகளும், 'ஜிஹாத்' என்றால் என்ன? என்பதற்குச் சரியான விளக்கமும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. கலீபா உமர்-பின்-அப்துல் அஜீஸ் அவர்களின் எளிய வாழ்க்கையும் இனிய குணங்களும் அழகுற சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன.

ரகசிய நோய்கள்

[டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி, எம். பி. பி. எஸ். (''லக்ஷ்மி'') எழுதியது. விலை ரூ. 2–0 0. பக்கம் 132, இன்ப நிலையம், மைலாப்பூர், சென்னை-4]

ஆண் பெண் கூடா ஒழுக்கத்தால் உண்டாகும் 'ஸிபிலிஸ்' 'கானரியா' போன்ற அபாயகரமான வியாதிகளுக்கு 'ரகசிய நோய்கள்' என்று சொல்லப்படுகிறது. ரகசிய நோய்களைப் பற்றி, விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியுடன் தமிழில் முதன் முதலாகவெளிவரும் நூல் இதுவே என்று தெரிய வருகிறது. இந்நூலாசிரியர் ரகசிய நோய்கள் சம்பந்தமான சென்னை அரசாங்க வைத்திய சாலையில் பெண்கள் பகுதியில் 'பணியாற்றியவர். இதன் பயனாக இவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு இப்புத்தகத்தை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி அறிவுடன் எழுதியிருக்கிறார். ஆண்களின் பிறப்பு உறுப்பு பற்றி எழுதும் போது, (இதன் 12-வது பக்கத்தில்) ''வைத்தியக் காரணமின்றி லிங்கக்கவசத்தை வெட்டி எடுத்துவிடும் பழக்கம் சில வகுப்பாரிடையே காணப்படுகின்றது. யூதர்களும் மகமதியர்களும் குழந்தைப் பருவத்திலேயே லிங்கக் கவசத்தை வெட்டி விடுகிறார்கள். இதற்கு மத சம்பந்தமான காரணங்கள் ஏதோ கூறப்படுகின்றன'' என்று டாக்டர் திரிபுரசுந்தரி கூறுகிறார். முஸ்லிம்கள் ('மகமதியர்கள்' என்பது தவறு) வைத்தியக் காரணம் பற்றித்தான் 'சுன்னத்' செய்கின்றனர் என்பதை ஆசியருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

'ஒழுக்கக் குறைவு,' 'விபசாரம்' என்ற தலைப்புக்களின் கீழ், ஆசிரியர் காரசாரமாக தமக்கே உரித்தான நடையில் கண்டன மழை பொழிந்திருக்கிறார், '...திருமணம் என்ற நிலையில் அல்லாது ஒழுக்க மற்றமுறையில் கலவி இன்பம் துய்க்கத் துணிந்தால், குடும்பத்துப் பெண் என்றாலும் சரி, விபசாரப் பெண் என்றாலும் சரி இருவரும் அபாயகரமானவர்களே'' என்பது போன்ற அறிவுரைகளை இவர் வழங்கும்போது, அது ஒரு அற்புதமான சன்மார்க்கப் பிரசாரமாக இருக்கிறது.

இளமைப் பருவத்தை எய்திய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவசியம் படித்தறிய வேண்டியபல விஷயங்கள் இதில் இருக்கின்றன. அவைகளை அறிந்தால் அவர்கள் ஒழுக்கத்தில் சிறந்த உத்தமர்களாக விளங்க முயல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இதில் ஆபாசமாக எதுவும் எழுதப்படவில்லை. ஆண்களும் பெண்களும் உரிய வயதில் இதைப்படிப்பதால் அவர்கள் ஒழுக்கத்தில் வழுக்கிவிழும் சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

'எஸ். ஏ''

கேள்வி? பதில்!

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர். எல்லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால் பதில் அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவறாக நினைக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க வியலாது. **—ஆசிரியர்]**

எம். கே. முஹம்மது ஸுபைர், கொழும்பு.

இமாம் திர்மிதீ எங்கு, எப்பொழுது பிறந்தார்?

இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 209-ல் பிறந்து, ஹிஜ்ரீ 279-ல் இறந்தார்கள், திர்மித் என்னும் பட்டணத்தைச் சார்ந்தவர்களாதலால்தான், இவர்களுக்கு திர்மிதீ என்ற பெயரும் வழங்கலாயிற்று.

P. A. ரஹ்மான், கொழும்பு

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு 'ஜக்காத்' பணத்தைக் கொடுக்கலாமா?

'ஜக்காத்'தைப் பெற உரிமையுள்ளவர்களின் வரிசையில் கடைசியாகவும், எட்டாவதாகவும் வழிப்போக்கர்கள் வருகின்றனர், இவர்கள் எந்தமதத்தினராகவும் இருக்கலாம். மேலும் ஜக்காத்தைக் கொண்டு அடிமைகளை விடுவிக்கலாம் என்று விதிக்கப்பட்டுள்ளது.

திருத்தூதரின் சந்ததியார்கள் 'ஜக்காத்' வாங்கலாகாது என்று தடை விதிக்கப்பட்ட காரணம் என்ன?

நபிகள் நாயகம் வாழ்ந்த காலத்தில் அவர்களின் குடும்பத்தினருக்கு 'ஸதக்கா' (தருமம்) கூட உரியதல்ல என்று நபிபெருமான் கூறிவந்தார்கள். 'ஏற்பது இகழ்ச்சி' என்று எம்பெருமானார்(ஸல்) அவர்களே கூறியுள்ளார்களாதலின், தங்கள் குடும்பத்தினரே யாசித்து உண்பதை எப்படி விரும்புவார்கள்?

T. A. நஸ்ருல்லா பாஷா. ஆற்காடு

அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்று குர்ஆன் கூறுகிறது. ஆனால், படித்த மௌலவிகளும் ஹாஜிகளும் அவ்லியாக்களிடம் உதவி கோருகின்றனரே, இது இஸ்லாத்திற்கு விரோதம் அல்லவா?

"உன்னையே வணங்குகிறோம்; உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம்" (இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தஈன்) என்று ஒவ்வொரு நாளும் அநேகந் தடவைகள் தொழுகையின் போது ஆண்டவனிடம் கூறிவிட்டு, அவ்லியாக்களிடம் உதவி தேடுவது அறியாமை மட்டுமல்ல, இஸ்லாத்தின் மூலக் கொள்கைக்கே முரணான செயல் ஆகும்.

மு. முஹம்மது ஹஸன்,
பாளையங்கோட்டை

கடந்த அக்டோபர் மாத முரசில் ஒரு கேள்விக்கு, சுமார் 20 மொழிகளில் குர்ஆன் வெளிவந்திருக்கிறது என்றும், பைபிள் 1064 மொழிகளில் வெளியாகியிருக்கிறதென்றும் பதில் எழுதியிருந்தீர்கள். ஆனால், பைபிள் 1000 மொழிகளிலும், குர்ஆன் 250 மொழிகளிலும், குறள் 81 மொழிகளிலும் வெளிவந்திருப்பதாக ஒரு செய்திப் பத்திரிகையில் நான் பார்த்திருக்கிறேன்.

குர்ஆன் 250 மொழிகளில் வெளிவந்திருக்கிறதென்னும் செய்தி, இன்னும் அதிக மகிழ்ச்சிக்குரியது தானே!

ஓ.யூ. சிந்தா மதார், கடையநல்லூர்

பாங்கு சொல்லும்பொழுது, இரண்டு காதுகளின் துவாரங்களிலும் கை விரல்களை வைத்துக்கொள்ளுகிறார்களே, ஏன்?

இப்படிச் செய்யும்பொழுது பாங்கு சொல்லுகிறவரின் குரல், பன்மடங்கு அதிகமாக ஒலிப்பதை அனுபவத்தில் காணலாம். இதை நீங்களே செய்துபார்த்தால், சாதாரணமாக கைகளைத் தொங்கவிட்டு பாங்கு சொல்லுவதற்கும், கை விரல்களைக் காதின் துவாரத்தில் வைத்துச் சொல்லுவதற்கும் உள்ள வேற்றுமையைக் காணலாம்.

N. A. அஜ்மல் ஷரீப்,
இளையான்குடி

ஆண், பெண் இரு பாலருக்கும் சம உரிமையுள்ள இஸ்லாத்தில் ஏன் ஒருவரின் பிதுரார்ஜித சொத்தில்மட்டும் பெண்களுக்கு ஒரு பங்கும் ஆண்களுக்கு இரு பங்கும் அளிக்கப்படுகிறது?

இஸ்லாத்தில் பெண்களுக்கு அவர்களின் கணவன் சொத்திலும் உரிமை இருப்பதால்தான் தந்தையின் சொத்தில் அவர்களுடைய பங்கு குறைந்திருக்கிறதுபோலும்!

எந்த முஸ்லிம் நாட்டிலாவது இஸ்லாமிய ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறதா?

குலபாவுர் ராஷிதீன் என்னும் இஸ்லாத்தின் ஐந்து கலீபாக்களின் காலத்திலேதான் பூரண இஸ்லாமிய ஜனநாயக ஆட்சி நடைபெற்றது. (குலபாவுர் ராஷிதீன் வரிசையில் ஐந்தாவது கலீபாவாக விளங்கியவர் ஹலரத் உமரிப்னு அப்துல் அஸீஸ்.)

S. சைய்யது அலீ, மாஹீம்,
பம்பாய்

ஒரு முஸ்லிம் தொழாவிட்டால் அவரை 'காபிர்' என்று அழைப்பது பொருந்துமா?

'காபிர்' என்றால் இறைவனை நிராகரிப்போர் என்று பொருள்.

M. R. முஹம்மது ஸாலிஹ்,
கொழும்பு

ரஷ்யாவில் உள்ள மந்திரி சபையில் இஸ்லாமிய மந்திரிகள் இருக்கிறார்களா?

மாஸ்கோவுடன் மானஸீகத் தொடர்பு உள்ள தோழர்களைத் தான் கேட்கவேண்டும்! ஆனால்

அவர்கள் உங்களின் வகுப்புவாதக் கேள்விக்கு பதில் சொல்ல மாட்டோம் என்று சுருக்கமாகவும், சுலபமாகவும் சொல்லிவிடுவார்களே! கையிலிருந்து நழுவுவதில் கைக்காரர்களாயிற்றே அவர்கள்!

காா. மு. அப்துல் சத்தார், மல்லிபட்டணம்

இஸ்லாமிய மார்க்கப்படி ஒரு பெண், சிலகாலம் தனது கணவனுடன் வாழ்க்கை நடத்தி ஒரு குழந்தை பிறந்த பின் ஏதாவது ஒரு சரியான காரணத்தால் மன முறிவு ஏற்பட்டு, பெண் தானகவே விவாக விடுதலை (தலாக்) கோர உரிமை இருக்கிறதா? இல்லையென்றால், ஆண் பெண் இருவருக்கும் இஸ்லாத்தில் ஏன் இம்மாதிரியான வேற்றுமை இருக்கிறது?

ஒரு சரியான காரணத்துக்காக மனைவி தன்னுடைய கணவனைத் 'தலாக்' சொல்லும் உரிமையைப் பெறுகின்றாள். (குர்ஆன், 4: 128, 130) ஆனால், இது ஆண்டவன் விரும்பாத ஒன்று என்பது நபிகள் நாயகத்தின் நல்வாக்கு. "கணவனால் தீங்கிழைக்கப் பெறாத ஒரு பெண் தலாக் கோருவாளாயின் அவளுக்கு சுவர்க்கத்தின் இன்ப சுகம் கிட்டாது" என்று நபிபெருமான் கூறியுள்ளார்கள்.

A. பாவாஜி, எட்டியாந் தோட்டம், இலங்கை

மேற்கத்திய வல்லரசுக்கும் கீழ்த்திசை வல்லரசுக்குமிடையே மூன்றாவதாக ஒரு முஸ்லிம் காமன்வெல்த் ஒன்றை அமைக்க வேண்டும் என்று உலக முஸ்லிம் மாநாட்டின் பொதுச் செயலாளர் இனாமுல்லாகான் லண்டனில் பத்திரிகை நிருபரிடம் (3 மாதங்கள் முன்பு) கூறியிருக்கின்றார். இன்றைய உலகத் தகராறு தீர இது உதவுமா?

உலக சமாதானம் நிலைபெற இதுவே சிறந்த வழி என்பதை சமீப கால சரித்திரம் சந்தேகமற உணர்த்துகிறதே!

T. M. அப்துல் அஜீஸ், பம்பாய்

இன்றைய முஸ்லிம்களில் பலர் இஸ்லாமிய கொள்கை, கோட்பாடுகளை மறந்து வாழ்கின்றனர். இந்த நிலைமாற, இஸ்லாமிய முன்னாள் வரலாறுகளை அறிவது அவசியமல்லவா? இவைகளை எடுத்துக் கூறுவது, கற்றுணர்ந்த மௌலானாக்களின் கடமை யல்லவா?

மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டே நீங்கள் செயலற்றிருப்பது சரியல்ல. பிறர் கடமையைப் போதிப்பதில் நேரம் செலவழிப்பதைவிட்டு நம் கடமைகளில் கவனம் செலுத்துவோமே!

M. S. அமீர், யாழ்ப்பாணம்.

பெண்கள் கண்களைத் தவிர மற்ற அவயவங்கள் அனைத்தையும் மறைத்துக்கொள்ள வேண்டும் என்றோ, அல்லது பெண்களின் முகத்தை ஆடவர் பார்க்கவே கூடாது என்றோ குர்ஆன், அல்லது ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறதா? 'ஆம்' என்றால் அது பெண்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இல்லையா?

இதைப்பற்றிக் குர்ஆனில் கூறுவதாவது: "மூமின்களாகிய மனிதர்களுக்குச் சொல்லுவீராக: அவர்கள் தங்கள் பார்வையைத் தாழ்த்திக்கொள்ளட்டும். மேலும், அவர்கள் தங்களின் ஒழுக்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளட்டும். அது

அவர்களுக்கு மிகப் பரிசுத்தமான தாக இருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ஆண்டவன் நிச்சயமாக அறிந்து கொள்கிறான்" (24 : 30)

"மேலும், நம்பிக்கையாளர் (மூமின்)களாகிய பெண்களுக்குச் சொல்லுவீராக! அவர்கள் தங்கள் பார்வையைத் தாழ்த்திக்கொள்ளட்டும். மேலும் அவர்கள் தங்கள் ஒழுக்கத் தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளட்டும். வெளியே தெரியக் கூடியவைகளையன்றி, (மற்ற) அலங்காரங்களை அவர்கள் வெளியில் காட்டிக்கொள்ள வேண்டாம். மேலும் அவர்கள் தங்களின் தலைகளை மறைக்கும் முந்தானைகளைக் கொண்டு மார்பகத்தை மூடிக் கொள்ளட்டும் அவர்கள் தங்களின் கணவுன்கள், அல்லது தந்தைகள், கணவர்களின் தந்தைகள் அல்லது சகோதரர்கள், சகோதரர்களின் புதல்வர்கள், சகோதரிகளின் மகன்கள், அல்லது அந்நிய ஸ்திரீகள் அல்லது அடிமைப் பெண்கள், அல்லது ஆண் வேலையாட்கள் அல்லது, பெண்களின் மறைவான உறுப்புக்களை அறியாத குழந்தைகள் இவர்களையன்றி வேறு யாரிடமும் பெண்கள் தங்களின் அலங்காரத்தைக் காட்டிக்கொள்ளலாகாது. அன்றியும் மறைந்திருக்கும் தங்களின் அலங்காரத்தை அறிவிக்கும் நோக்கத்தோடு தங்களுடைய கால்களை (தரையில்) தட்டித் தட்டி நடக்கவேண்டாம்."

(24 : 31)

அந்நிய ஆண்களும் பெண்களும் கட்டுப்பாடின்றி கலந்துறவாடுவதால் விளையும் தீமைகளைத் தினசரி வாழ்க்கையில் நாம் பார்க்கின்றோம். இத் தீமைகளைத் தடுத்து நிறுத்தாவிட்டால் சமூக வாழ்வே சீர்குலைந்து போகுமல்லவா? எனவேதான் இரு பாலரும் தங்கள் பார்வையைத் தரையை நோக்கிச் செலுத்தவேண்டுமென்று இறைவன் இயம்புகிறான். "தீமையை விட்டு விலகிக்கொள்ளுங்கள்" என்று சொல்லுவதுடன் மட்டும் ஆண்டவன் நின்றுவிடவில்லை. அத்தீமையிலிருந்து மக்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளும் வழியையும் காட்டியுள்ளான். ஆண்களும் பெண்களும் சந்திக்க நேருங்கால், ஒருவரை மற்றவர் முறைத்துப்பார்க்காமல் தங்கள் கண்களைக் கீழ் நோக்கிச் செலுத்த வேண்டும் என்பதுதான் இதன் கருத்து. பெண்கள் வெளியே செல்லாமல் வீட்டிலே அடைபட்டுக் கிடக்கும் ஒரு சமுதாயத்திலே ஆடவர் தங்களின் பார்வையைக் கீழ்நோக்கிச் செலுத்தவேண்டும் என்ற உத்திரவு பிறக்க வேண்டிய அவசியமே இல்லை! இதே வண்ணம், தங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்லாத பெண்கள்—அந்நிய ஆடவர்களைச் சந்திக்க சந்தர்ப்பமில்லாத மாதர்கள்—தங்களின் கால் பெரு விரல்களைப் பார்த்தே நடக்க வேண்டும் என்று கூறவேண்டிய அவசியம்தான் என்ன? எனவே, குர்ஆன் கூறும் கோஷா, நம் சகோதரிகளின் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தவில்லை; அவர்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவும் இல்லை என்பது தெளிவு. ஆனால் ஆண்களும் பெண்களும் தடையின்றிக் கலந்துறவாடுவதால் விளையும் தற்காலத் தீமைகளைத் தடுத்து நிறுத்துவதே இஸ்லாமிய கோஷாவின் குறிக்கோள்.

A. J. பார், சிங்கப்பூர்.

முஸ்லிம் முரசு மீலாத் மலரில், 'தலாக்' சொல்லப்பட்ட தமது மனைவியை கமால் மீண்டும் மணப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய சட்டப்படி இவ்விதம் செய்யலாமா?

'தலாக்' சொல்லப்பட்ட மனைவியை சில நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மீண்டும்

மணக்கலாம். கதையில் மறுமணம் நடத்த முடிவு கட்டுகின்றனர். அந்த நிக்காஹ் நடந்தபொழுது இந்த நியதிகளுக்கும், நிபந்தனைக் களுக்கும் உட்பட்டுத்தான் நடந்திருக்கும் என்று நம்பலாம்.

K. P. முஹம்மது யூசுப்,
கோலாலம்பூர்

தர்ஜுமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பைப் படித்தால் குர்ஆன் ஓதிய தவாபு இருக்குமா?

எதையும் ஓதி, உணர்ந்து அதன் படி நடப்பதில்தான் பலன் உண்டு.

K. முஹம்மது இஸ்மாயீல், பம்பாய்

முஸ்லிம்கள் இறந்த செய்தி கேட்டால், உடனே "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" என்று கூறுகிறோம். ஹிந்துக்கள் இறந்த செய்தி கேட்கும்போது இவ்விதம் கூறலாமா?

கூறலாம். மிக அதிகமான மனிதர்களை நன்மை செய்யத் தூண்டுவது மரண பயம் ஒன்றுதான். கம்யூனிஸ்ட் அபாயத்தைவிட, இந்த உலகம் நமக்கு நிரந்தரமானதல்ல என்ற நம்பிக்கையே பூமிதான இயக்கத்தின் வெற்றிக்குப் பேருதவியாக இருக்கிறது. "இறைவனிடமிருந்து (வருபவர்களாக) நாம் இருக்கின்றோம்; அவனிடமே திரும்புகிறவர்களாகவும் நாம் இருக்கிறோம்" என்பதே இதன் பொருள். அவனால் படைக்கப்படுவதிலோ, அவன் பால் திரும்பிச்செல்வதிலோ மனிதர்களிடையே வேற்றுமை இல்லையே!

S. M. அப்துல் பாரி, ஈப்போ,
மலாயா.

பணம் கொடுத்து ஒரு மனிதனுடைய சொத்தை அனுபோக ஒத்திக்கு வாங்குதல் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

அனுபோக ஒத்திக்கு வைக்கப்படும் நிலமோ அல்லது வீடோ கடன் பட்டவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையின் மீது இதைச் செய்யலாம். கடனுக்கு ஈடாக வைக்கப்படும் சொத்து நிலமாக இருந்தால், அதற்காகச் செலவு செய்து, உழைத்துப் பாடுபட்டு, அதில் கிடைக்கும் இலாபத்தை அடைவதில் குற்றமில்லை. அது வீடாக இருந்தால், அதன் 'ரிப்பேர்' (பழுதுபார்க்கும்) செலவுகளையும் செய்துகொண்டு அதில் குடியிருப்பதோ அல்லது வேறு யாருக்கேனும் அதை வாடகைக்கு விடுவதோ குற்றமல்ல. உடல் வருந்தி உழைக்காமலும், எவ்வித செலவு செய்யாமலும் கிடைக்கும் வட்டிக்கு இதனை ஒப்பிட முடியாது. (குர்ஆன், 2 : 283, புகாரீ, 43:1 48 : 4)

தாம்பூலத்துக்குத் தனிப் பெருமையைக் கொடுத்து வருகிறது "ஔவை" பாக்குத்தூள். நீங்களும் ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

காலணாவுக்கு 2 பொட்டலங்கள்

தயாரிப்பவர் :— V. K. ராம்,

13, நாராயணப்ப நாய்க்கன்
தோட்டம் 8-வது சந்து,
சென்னை-21.

P. S. K. அப்துல் ஹமீது,
டிக்கோயா, சிலோன்.

ஒரு முஸ்லிம் கணவன் தன் மனைவிக்கும், மனைவி தன் கணவனுக்கும் கடிதம் எழுதும் போது, யாருக்கு யார் எழுதுவதாக மேற்படி கடிதத்தைத் தொடங்குவது ?

'இன்பக் கனிரசமே !' என்று, நீங்கள் எழுதுங்கள். 'ஆருயிர் நாயகரே !' என்று, அந்த நங்கை எழுதட்டும்!

த.மு.அ. யாகூப், நாபொட, சிலோன்

ஒரு நடுத்தர குடும்பத்தினர் தனக்கு 4 குழந்தைகள் போதுமென்று நினைத்து, அதற்குப் பின் கர்ப்பத்தடைக்கு ஏற்பாடு செய்யலாமா ?

"வறுமைக்குப் பயந்துகொண்டு குழந்தைகளைக் கொல்லாதீர்கள்" என்று இறைவன் கூறுவது இக்கால மக்களைப் பார்த்துத்தான் !

—"கமால்"

அமெரிக்க ஜனாதிபதி

ஐஸன் ஹோவர்

எழுதியவர் :

எம்.ஆர்.எம் அப்துர் ரஹீம், பி. ஏ.

ஏழ்மைக் குடியில் பிறந்த இவரின் வாழ்வு, எளிமையும் இனிமையும் அழகும் அடக்கமும் நிரம்பியது. அவரின் வாழ்வு 2-வது உலக யுத்தத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது. எனவே, இந்நூல் ஐஸன்ஹோவரின் உன்னத வாழ்வை விவரிப்பதுடன் நடந்து முடிந்த உலகப் பெரும் போரில் நிகழ்ந்த ஆச்சர்யப்படத்தக்க சம்பவங்களையும் எடுத்து விளக்குகின்றது. விலை ரூ. 2—0—0.

அன்பு நூல் நிலையம்,
132, பிராட்வே, சென்னை-1.

திறப்பு விழா

தஞ்சை ஜில்லா, நாச்சியார் கோவில் பள்ளி வாசலைச் சேர்ந்தாற் போல் புதிதாக நிர்மாணிக்கப் பெற்றிருக்கும் "மஸ்ஜித் எக்ஸ்டென்ஷன்" கட்டிடத்தின் திறப்பு விழாவையும், அதில் அரபி மத்ரஸாவின் துவக்க விழாவையும் 'தாருல் இஸ்லாம்' ஆசிரியர் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப், B. A., அவர்களின் தலைமையின் கீழ் 21-1-54 அன்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம், கும்பகோணம் பிரபல வர்த்தகர் ஜனாப் மு. அப்துல் அஜீஸ் ராவுத்தர் அவர்கள் மேற்படி 'எக்ஸ்டென்ஷன்' கட்டிடத்தைத் திறந்துவைத்தார். ஸ்ரீமான் N. K. R. நாராயணசாமி நாயுடு முதலிய உள்ளூர் பிரமுகர்கள் பலர் இந்த விழாவில் கலந்துகொண்டு, மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குப் பெரு முயற்சிகள் எடுத்துக்கொண்ட கா. ஜ. முஹம்மது ஹுஸைன் அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

பொருளாதார நெருக்கடி மிக்க இக் காலத்திலே பதினாயிரக் கணக்கான ரூபாய்கள் செலவில் புதிய மத்ரஸா கட்டிடத்தை நிறுவும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் இவர்களின் முயற்சி வெற்றிபெறுமாறு இறைவன் அருள் புரிவானாக ! கடல் கடந்து வாழும் உள்ளூர் வெளியூர் நேயர்கள் தங்களால் இயன்ற உதவி புரிந்து புதிய மத்ரஸா கட்டிடத்தை வெற்றிகரமாக நிர்மாணிக்கத் துணை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ADVT.

இஸ்லாமியக் கலைப்பண்பு

ஆசிரியர் : முஹம்மது மார்மடியூக் பிக்தால்

காலஞ்சென்ற இஸ்லாமிய அறிஞர் மார்மடியூக் பிக்தால் அவர்கள் 1927-ல் சென்னை கோகலே ஹாலில் சர். சி. பி. ராமசாமி அய்யர் முதலியவர்களின் தலைமையில் இஸ்லாத்தைப் பற்றி நிகழ்த்திய எட்டு ஆங்கில சொற்பொழிவுகளின் தமிழாக்கம். இதனைத் தமிழில் எழுதியவர் ஜனாப் R. P. M. கனீ, B.A, B.L.,

இதன் விலை ரூ. 2. *வி. பி. தபால் செலவு தனி.*

மானிடருக்கேற்ற மார்க்கம்

இஸ்லாத்தின் கோட்பாடுகள் பற்றிய அரிய நூல். The Religion of Humanity' *என்று, மௌலவி முஹம்மது அலீ, எம். ஏ., எல். எல். பி. எழுதிய ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பு. முஸ்லிம் அல்லாதவர்களுக்காக குறைந்த விலையில் தயாரிக்கப்பெற்றது. விலை அணா 8. தபால் செலவு 3 அணா.*

மகா கவி இக்பால்

ஆசிரியர், R. P. M. கனீ, B A., B.L.,

250 பக்கங்கள். உயர்ந்த பதிப்பு. உயர்ந்த கெட்டி அட்டை பைண்டு. கண்கவர் முகப்புக் கொண்ட ஜாக்கெட். மகாகவியின் ஆர்ட் படமும் அடங்கியது. வாழ்க்கை, கவிதைகள், தத்துவம் என்ற மூன்று பாகங்களில் இதுவரை தமிழில் வெளிவராத ஏராளமான புதிய புதிய விஷயங்கள் தரப்பட்டுள்ளன. மகாகவி இக்பாலின் தரானுக்கள் உர்தூ உச்சரிப்போடும் அர்த்தத்தோடும் தரப் பட்டுள்ளன. அவருடைய கவிதைத் தொகுதிகள் சகலவற்றிலு மிருந்து ஏராளமான பாடல்கள் மொழிபெயர்த்துச் சேர்க்கப் பட்டுள்ளன. இஸ்லாத்தின் ஆத்ம ஞானத்தை எந்த அளவுக்கு இக்பால் விளக்கியுள்ளார் என்பது அவருடைய தத்துவ விளக்கம் பற்றிய பகுதியில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. குறைந்த பிரதிகளே அச்சிடப்பட்டிருப்பதால் உங்கள் ஆர்டர்களை உடனே அனுப்புங்கள்.

விலை ரூ 3 *தபால் செலவுதனி.*

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே, சென்னை–1.

முஸ்லிம் முரசு

சந்தா விகிதம்

ஈத், மீலாத் மலர்களுடன்

உள்நாடு

இந்தியா, சிலோன்

	ரூ.	அ.
தனி இதழ்	0	6
ஒரு வருடம்	4	8
அரை வருடம்	2	8
2 வருடம்	8	8

★

வெளிநாடு

பர்மா, மலேயா, சிங்கப்பூர்

	ரூ.	அ.
தனி இதழ்	0	8
ஒரு வருடம்	6	0
அரை வருடம்	3	8
2 வருடம்	11	0

ஒரு வருடத்துக்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத், மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப்படும்.

மானேஜர்,

முஸ்லிம் முரசு

132, பிராட்வே, சென்னை-1.

எம்.ஆர்.எம். அப்துர்ரஹீம்

பி. ஏ. எழுதியவை

வாழ்க்கையில் வெற்றி ரூ.	2	[illegible]
கவலைப்படாதே !	2	[illegible]
வாழ்வைத்துவங்கு	2	[illegible]
முன்னேறுவது எப்படி?	2	[illegible]
வாழ்வது ஒரு கலை	2	[illegible]
சுபிட்சமாய் வாழ்க !	2	[illegible]
உலக மேதைகள்	1	[illegible]
லியோ டால்ஸ்டாய்	1	[illegible]
அரேபியாவின் அதிபதி	1	[illegible]
இஸ்லாமிய திலகங்கள்	1	12
முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்	2	0
வியாபாரம் செய்வது எப்படி?	3	0
நகரத்தலைவர் (நாவல்)	2	0
ஆப்ரஹாம் லிங்கன்	2	0

‘லக்ஷ்மி’ எழுதியவை

பத்து மாதம்	4	8
குழந்தை வைத்தியம்	3	[illegible]
ரகசிய நோய்கள்	2	0
கர்ப்பத்தடை (ஸ்ரீபாதசங்கர்)	1	0
ஹஜ்ரத் இமாம் ஹஸன்-ஹுஸைன் (ரலி)	2	8
முஸ்லிம் உலக மன்னர்கள்	3	0
இஸ்லாத்தின் அரசியல் கொள்கை	0	12
குர்ஆன் கூறும் சரிதை	1	8
ஹஜ்ஜு யாத்திரை	2	0
ஸிம்துஸ் ஸிபியான் (அரபுத் தமிழ்)	7	8

வி. பி. தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே : : சென்னை-1.

Regd. No. M. 5221 MUSLIM MURASU FEB. 1954



... Broadway, Madras 1 Printed by M M Th...